மலர் 11
இதழ் 1

# நான்

## உளவியல் மஞ்சரி

சிறப்பிதழ்

நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்

ரூபா 3-/

தை - மாசி 1985



1983



# அணிந்துரை

சிறு சஞ்சிகைகளிலேயே காத்திரமான கருத்துக்களையும், இலட்சிய நோக்கினையும் காணுகின்றோம். ஈழத்தில் வெளிவரும் சிறு சஞ்சிகைகளில் 'நான்' சஞ்சிகையும் ஒன்று. 'நான்' ஏனைய சஞ்சிகைகளைப் போலன்றி, உளவியலை முதன்மைப்படுத்தும் சஞ்சிகையாகும். உளவியல் சம்பந்தமான கட்டுரைகளுக்கு முதன்மையளிப்பதுடன் உளவியல் சம்பந்தமான ஆக்க இலக்கிய முயற்சிகளுக்கும் 'நான்' இடம் தருவது மகிழ்ச்சி தரும் விடயம். அறிவைப்பெறுவதும் அறிவைப் பிரயோகிப்பதும் என்ற இரு தள நிலையில் 'நான்' பணியாற்றுகிறது.

பிரபலம்பெறு ஆர்வமும் ஆற்றலுமிக்க இளம் தலைமுறையினர் 'நான்' பத்திரிகையில் எழுதுகிறார்கள். இந்த அரும்புகளே நாளை மணம் வீச இருக்கும் மலர்களாவர். இந்த அரும்புகளை மலர்விக்கும் பணியிலீடுபடும் 'நான்'இற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும்.

'நான்'ஐ வெளிக்கொணரும் முயற்சியில் பலகஷ்டங்களுக்கும் மத்தியில் ஆர்வத்துடன் ஈடுபடும் அனைவரும் சமூகத்தின் நன்றிக்குரியவர்கள். புதிய புதிய எல்லைகளைக் காண இருக்கும் 'நான்' பரந்து விரிந்து பணியாற்ற வேண்டுமென்பதும், தனிமனித உளவியலுடன், சமூக உளவியலுக்கும் முக்கியமளித்து அதனை அறிமுகப்படுத்தி அதன் ஒளியில் இளம் தலைமுறையினரைச் சிந்திக்கச் செய்யும் பணியிலிடுபட வேண்டுமென்றும் நாம் அவாவுகின்றோம்,

'நான்' சஞ்சிகையின் பணி தொடர என்றும் எம் வாழ்த்துக்கள்.

கலாநிதி. சி. மௌனகுரு
நுண்கலைத்துறை,
யாழ்ப்பாணம்.

ஆசிரியர்:

வின்சன்றப்பற்றிக் O.M.I.B.A

இணை ஆசிரியர்:

ஜீவா போல் O.M.I. B.Th

துணை ஆசிரியர்கள்:

ஸ்ரனி அன்ரனி
ஜோசப் பாலா.
ராஜன் மங்களா
ஜீவனதாஸ்

தொடர்பு:

F. L. N. குரூஸ்
லீனஸ் சொய்ஸா

விநியோகம்:

S. நீக்கிலஸ்
செபஸ்ரியன்

விளம்பரம்:

ஜோ. எக்கட்டன்
S. K. றெசாய்றே

ஆலோசகர்கள்:

வண. E. ஜேசுதாசன் O.M.I
வண. H. ஜெபநேசன் M.A
வண. M. போல் O.M.I.B.Th
வண. J. லம்பேட் O. M. I.

---

முகவரி:

"நான்"

அ. ம. தி. குருமடம்.
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் காணிக்கை

அதிகார அத்துமீறலினால் அகால மரணம் அடைந்த அருட் திரு. மேரி. செபஸ்ரியன் அடிகளாருக்கும், மறைந்தும் மறையாது நினைவில் நிலைத்து நிற்கும் எம் தமிழ் நெஞ்சங்களுக்கும் எமது கண்ணீர்க் காணிக்கை.

வரஇருப்பவை:

மலர் 11 இதழ்2 பழிவாங்கல்
மலர் 11 இதழ்3 பிரிவு
மலர் 11 இதழ்4 வெறி
மலர் 11 இதழ்5 தாழ்வுமனப் பான்மை
மலர் 11 இதழ் 6 எதிர்பார்ப்பு

இவை சார்பான உங்கள் ஆக்கங்களை உடன் அனுப்பிவையுங்கள்.

---

சந்தா விபரம்:

ஈராண்டு சந்தா ரூ. 28.00
ஓராண்டு சந்தா ரூ. 15.00
வெளிநாட்டு சந்தா US $ 7
பணம் பெறும் கந்தோர்:
கொழும்புத்துறை

# வாழுகின்ற பாதை..

**டுகின்ற மக்களுக்கு**

இளைஞர் ஆண்டு என மலர்ந்துவிட்ட இவ்வாண்டில் இதயங்கள் சிலவே சிரிக்கின்றன; இனிமையை உணர்ந்து மகிழ்கின்றன. இருட்டினில் வாழும் மனிதருக்கு ஒளிவிளக்கை ஏற்றி வைப்பவர் யார் என்று ஏக்கத்தோடு ஏனைய நெஞ்சங்கள் வாழவழியின்றி காணப்படுகிறன. நீரிலே எழுதப்பட்ட நினைவலைகள் போல் இளம் உள்ளங்கள் ஊசலாடுகின்றன. ஏழையாய் எளியவனாய் புறக்கணிக்கப்படுபவனாய், புரியாத புதிராய் ஏன் என்னைப் படைத்தாய் என்று ஏற்றமிகு வாழ்வை நோக்கி அங்கலாய்க்கின்றன.

'இறப்பது இயற்கையின் நியதி' என்பதை எமது நாட்டு நிகழ்வுகள் மாற்றிவிடுகின்றன. தமிழர் இன்று உயிர் பிழைப்பது இராணுவத்தின் இரக்கத்தில் தங்கியுள்ளது என்று கூறுமளவிற்கு நிலமை மோசமாகிவிட்டது. இளைஞர் ஆண்டு என பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வாண்டில் எம் இளைஞர்கள் எங்கே? வயல்களிலும், காடுகளிலும், வீடுகளிலும் பதுங்கி ஒதுங்கி வாழும் இளைஞர் ஒருபுறம்; வெளியிலே வந்து கண்ணீர் அஞ்சலி பெறுவோர் ஒருபுறம்; வெளிநாடு சென்று வேடிக்கை பார்ப்போர் மறுபுறம். எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல நிலவுகின்ற மோசமான நிலைமையைப் பயன்படுத்தி தம்மைவளர்க்க முற்படுகின்ற பதுக்கல் சுரண்டல்கார வர்த்தகர்களின் செயற்பாடுகள் மேலும் எமது காயங்களை இரணமாக்குகின்றன. இதயமற்றோரின் செயற்பாடுகள் இரட்டிப்பாகின்றன. கற்பழிப்புகளும் கழுத்தறுப்புகளும் சாதித் தகராறுகளும் சீதனச் சீர்கேடுகளும் குடிவெறி பிதற்றல்களும். குதர்க்கப் பேச்சுக்களும் குறைந்தபாடில்லை. தலைமைத்துவம் தலைகீழாக நிற்கிறது. இவ்விதமாக இனிமை உணர்வுகள் மரத்துப்போன நிலையில், அன்பு நெஞ்சங்களை இழந்து அந்தரித்த நிலையில் வாடுகின்ற மக்களுக்கு, வாழுகின்ற பாதையினை 'நான்' தன் 11ம் ஆண்டிலும் காட்டுவான் என்பதே எமது நம்பிக்கை. நொந்துபோன இதயங்களை வெந்து போகாமல் அவனது நல்வார்த்தைகள் துணைபுரிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை தமிழன்னை சார்பில் நல்குகின்றோம்.

—ஆசிரியர்

புதுக்கவிதை

# வருங்காலக் குழந்தைகள்

நீங்கள் ஈன்றெடுக்கும் குழந்தைகள்
உங்களுடையவர்களல்ல!
அவர்கள்
உங்கள் மூலமாக வந்தவர்களேயன்றி
உங்களிடமிருந்தல்ல.

உங்களுடைய அரவணைப்பை அவர்களுக்கு அளியுங்கள்
அளிக்கவேண்டாம் உங்கள் எண்ணங்களை!
ஏனெனில்
அவர்களுக்கும் சொந்த எண்ணக்கருக்கள் உண்டு.
காரணம்
அவர்களும் கருவிலிருந்தே வந்தவர்கள்
அவர்களை சுயமாகச் சிந்திக்க விடுங்கள்.
ஏனெனில்
அவர்களாலேயே சிந்தனையில் வளரமுடியும்.

நீங்கள்
அவர்களது உடலுக்கே புகலிடமளியுங்கள்
உள்ளத்திற்கல்ல!
காரணம்
அவர்களது உள்ளம் எதிர்காலமெனும் வீட்டில்
குடிகொண்டு விட்டது.

மற்றும்
அவர்களை உங்கள்போலாக்க முயலவேண்டாம்.
விரும்பினால்
நீங்கள் அவர்களைப்போலாக முயற்சியுங்கள்.
ஏனெனில்
வாழ்க்கை ஒருபோதும் பின்நோக்கி போவதுமில்லை!
கடந்த காலங்களுக்காக காத்திருப்பதுமில்லை!

கரம்பனூர் றமேஸ் வேதநாயகம்
யாழ். பல்கலைக்கழகம்

# பழி வாங்கமாட்டேன் றஜினி அக்கா

### சிறுகதை

இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை நான் மந்திகை ஆஸ்பத்திரி மூண்டாம் வாட்டிலே பன்னிரண்டாம் கட்டி லிலே படுத்திருக்கிறன். மூண்டு என்ரை லக்கி நம்பர். எனக்கு அழுகை அழு கையா வருது. இன்னும் கொஞ்சம் கண்ணை இறுக்கி மூடிக்கொண்டு படுத் துப் பாத்தன். நித்திரை வராதாம்..

ஆரெண்டாலும் என்னைப் பார்க்க வரு வினமே...? அதுக்கு நேரம் கிடக்கு. இப்ப பத்து மணிதானே. பாக்கிற மணி பன்ரண்டுக்குத்தான் அடிக்கும். கால் தூக்கேலாமல் இருக்கு. தலையும் விண் விண் எண்டு வலிக்குது...

இண்டைக்கு மாதிரித்தான் போன ஞாயிற்றுக் கிழமையும் நல்ல வெய்யில் எறிச்சுக்கொண்டிருந்தது. நான் எங் கட வீட்டுக் கேற்றடியிலை நிண்டு பாத்துக் கொண்டிருந்தன். பக்கத்து வீட்டு றஜினிஅக்கா தன்ரை சிவப்புச் சயிக்கிளிலே வருகிறா. கையிலை என் னவோ கொண்டு வருகிறா. நல்லா உற்றுப் பார்த்தன். அம்மாடி! குட்டி யண்ணன் அடிக்கிற அரைவாசிப் பறைமேளம் மாதிரி அதே சேப்பிலை ஒரு கண்ணாடிப்பீப்பா! நான் ஆசை யோடை ஓடிப்போய்த் தொடப் போனன். அவ பீப்பாவை என்னட் டைத் தரேல்லை "கையிலே தரமாட் டன் குஞ்சு... போட்டு உடைச்சுப் போடுவீங்கள். மெல்லிய கண்ணாடி டக்கெண்டு உடைஞ்சுபோம். நான் கையிலை இப்படியே வைச்சிருக்கிறன் நீங்கள் பாருங்கோ" எண்டு சொன்னா. எனக்கெண்டால் அதைத் தொடவே ணும் தூக்கவேணும் போல ஆசையா இருக்கு. "றஜினிஅக்கா, நான் கீழை போடமாட்டன். என்னட்டை ஒருக் காத் தாங்கோ..." மாட்டன் எண்டு சொல்லிட்டு உள்ளுக்கை போனா. கண்ணாடிப்பீப்பாவை எனக்கு எட் டாத உயரத்திலே அவயின்ரை பெரிய அலுமாரிக்கு மேலை வைச்சா.

எனக்கு றஜினி அக்காவிலை சரி யான ஆத்திரம். றஜினிஅக்காவை எப் படியாவது பழிவாங்கவேணும் எண்டு நினைச்சன். அண்டைக்குத்தான் பின் னேரம் மூண்டுமணி இருக்கும். றஜினி அக்கா வீட்டுக்குப் போனன். றஜினி அக்காவின்ர மூத்தக்காவின்ர பிள்ளை யள் நிம்மி, பமிலா, நாலுவயதும் அஞ்சுவயதுமிருக்கும். போட்டிக்கோ விலை விளையாடிக்கொண்டிருக்கினம். நானும் போய் அவையளோடை விளை யாடுறன். றஜினிஅக்கா கதைப்புத்த கம் படிச்சுக் கொண்டிருக்கிறா. மேரி அன்ரி எங்கயோ போயிட்டா. அடுப் பிலை கேத்தில் இருந்தது. இன்னும் சூடேறவில்லை.

திடீரென்று எனக்கு ஒரு ஐடியா வருது. ஒருவரும் என்னைக் கவனிக் கேல்லை. குசினிக்குப் பக்கத்தில்தான் அவையின்ரை பாத்றூம். பாத்றூமுக் குள்ளை இருந்த சவுக்காரத்தை எடுத் துக் கொண்டு குசினிக்கை வந்தன். கேத்திலைத் திறந்து சவுக்காரத்தை அதுக்குள்ளை போட்டு மூடிவிட்டு போட்டிக்கோப் பக்கம் வாறன். அப் பவும் றஜினிஅக்கா கதைப்புத்தகம்

படிச்சுக் கொண்டிருக்கிறு. நிம்மி பமிலா அவையள் விளையாடிக் கொண்டிருக்கினம். நானும் போய் அவையளோடை சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறன்.

கேற் திறக்கிற சத்தம் கேட்டது. மேரி அன்ரி வருகிறு. றஜினிஅக்கா கதைப் புத்தகத்தைக் கொண்டுபோய் ஒழிச்சு வைச்சிட்டா. றஜினிஅக்கா கதைப்புத்தகம் படிச்சால் மேரிஅன்ரிக்குப் பிடிக்காது. மேரிஅன்ரி உடுப்பை மாத்திக் கொண்டு குசினிப்பக்கம் போகிறு. கேத்தில் தண்ணி கொதிக்குது. மூடியைத் திறந்தவவுக்கு ஒரே ஆச்சரியம்! தண்ணி பால் போல வெள்ளையாய் நுரைச்சுக் கொண்டிருந்தது. லேவ்போய் வாசம்... மேரிஅன்ரி றஜினி அக்காவைக் கூப்பிட்டா. என்ன நடக்கப்போகுது என்று எனக்குத் தெரியும். றஜினி அக்கா வந்து கேத்திலைப் பாத்தா. ''கேத்திலுக்கை சவுக்காரம் இருக்குது. எப்படி வந்தது எண்டு எனக்குத் தெரியல்லேயம்மா...''

றஜினிஅக்கா பயந்தபடியே தான் நடந்தது. ''என்னடி தெரியேல்லை என்று சொல்லுறுய்? எல்லாம் கவனக் குறைவுதான்...'' விறகுத்தடி யொண்டாலை விளாசினு. ''ஐயோ... அம்மா விடுங்கோ அம்மா...'' மேரி அன்ரியைக் கட்டிப் பிடிச்சுக்கொண்டு கெஞ்சினு. எனக்குப் பார்க்க சந்தோசமாய் இருந்தது. காலமை அந்தக் கண்ணுடிப் பீப்பாவை என்னட்டைத் தாங்கோ எண்டு கெஞ்சியும் தரேல்லைத்தானே. அவவுக்கு வேணும். நல்லா அடி விழ வேணும். பிறகு இரவும் அடி விழுந்தது. நான் எங்கடை வீட்டிலை முழிச்சுக் கொண்டிருக்கிறன். றஜினிஅக்கா அழுற சத்தம் கேட்குது. எனக்கு சந்தோஷமாய் இருக்கு. அந்த நிம்மதியோடையே அண்டைக்கு நித்திரையாகிப் போனன்.

அடுத்தநாள் விடிஞ்சு கன நேரமாப் போச்சு. அண்டைக்கு ஆச்சியின்ரை திவசம். நான் பள்ளிக்கூடக்துக்கும் போகேல்லை. பக்கத்து வீட்டுக்கும் போனன். கதவைத் திறந்து கொண்டு றஜினிஅக்கா வெளியிலை வந்தா. றஜினிஅக்காவும் அண்டைக்குப் பள்ளிக்கூடத்துக்குப் போகேல்லைப்போல இருக்கு. அவ பெரிய பள்ளிக்கூடத்திலை பன்ரண்டாம் வகுப்புப் படிக்கிறு. நான் சின்னப் பள்ளிக்கூடத்திலை அஞ்சாம்வகுப்புப் படிக்கிறன். ''என்ன குஞ்சு...?'' றஜினிஅக்காவோடை எனக்குக் கதைக்க விருப்பமில்லை. அந்தக் கண்ணுடிப்பீப்பாவை ஒருக்கால் எண்டாலும் தொட்டபிறகு தான் அவவோடை கதைக்கிறது எண்டு முடிவு செய்திருக்கிறன். பதில் ஒண்டும் சொல்லாமல் உள்ளுக்கை போறன்.

குசினிக்குள்ளை நிம்மி, பமிலா சாப்பிட்டுக்கொண்டிருக்கினம். பெரிய அலுமினியம் பானையிலை தண்ணி சுட்டுக்கொண்டிருந்தது. றஜினிஅக்கா சுடு தண்ணியிலை குளிக்கப்போகிறு எண்டு நான் நினைச்சது சரிதான் றஜினி அக்கா அந்தப்பானையில் சுடுதண்ணியை பாத்றூம் தொட்டிக்குள்ளை இருந்த பச்சைத்தண்ணியோடை கலந்துவிட்டுப் போனு. கொஞ்சநாளைக்கு முந்திப்பார்த்த ''நெஞ்சத்தைக் கிள்ளாதே' படம் ஞாபகத்துக்கு வந்தது. அதிலை ஒரு அக்கா தன்ர அண்ணி குளிக்கிற தண்ணிக்குள்ளே மிளகாய்த்தூளைக் கொட்டி... எனக்கு ஐடியா வந்திட்டுது... இவவுக்கு நல்லா

கண் எரியட்டும். நிம்மியும் பமிலாவும் சாப்பிட்டுட்டு முன் விருந்தைக்குப் போகினம். மிளகாய்த்தூள்ப்பேணியை மெல்லமா எடுத்து தண்ணித் தொட்டிக்குள்ளே கவிட்டுக்கொட்டிக் கலந்து விட்டன். ஒரு அடையாளமும் இல்லாமல் வடிவா எல்லாம் கழுவினபிறகு தூள்ப்பேணியை முந்தியிருந்த மாதிரியே வைச்சிட்டு வெளியிலே வாறன். நல்லவேளை, றஜினிஅக்கா என்னைக் கவனிக்கேல்லை குளிக்கிற போது போடுற சட்டையையும் போட்டுக் கொண்டு துவாயையும் எடுத்துக் கொண்டு பாத்றூமுக்குப் போகிறு. நானும் நிம்மி பமிலா அவையளை ஒருமாதிரி பாத்றூம் பக்கம் கூட்டிக் கொண்டு வந்தன். பாத்றூமுக்குக் கதவில்லே. றஜினிஅக்கா தொட்டிக்குள்ளை கையை வைச்சுப்பாத்தா. கணக்கான சூடு...

கண்ணை மூடிக்கொண்டு பிளாஸ்டிக் வாளியாலே தண்ணியை அள்ளி தலேயிலே சளசளவெண்டு ஊத்தினு. இன்னும் கொஞ்ச நேரத்திலே என்ன நடக்கப் போகிறது எண்டு நினைச்ச எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வந்தது. பேசாமல் அடக்கிக் கொண்டிருந்தன். விடாமல் தொடர்ந்து நாலுதரம் தண்ணி ஊத்தின பிறகு கண்ணைத் திறந்தா ''ஐயோ...!'' எண்டு குளறிக்கொண்டு திரும்பக் கண்ணைமூடினு. ''ஐயோ... கண்எரியுது... கண்எரியுது'' எண்டு கத்தினு. கண் சிவந்து வீங்கிப் போயிருந்தது. எனக்கு நல்ல சந்தோஷம். இவவை நல்லாப் பழிவாங்கியாச்சு.

அண்டைக்குப் பின்நேரம் எங்கட வீட்டை என்ர சிநேகிதி மாலினி வந்தா. தான் றஜினி அக்காவுக்குச் செய்த குறும்புகளை மாலினியிடம் சொல்லிக் கொண்டிருந்தன். அறைக்குள்ள இருந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்த ராசா மாமாவுக்கு எல்லாம் கேட்டுட்டுது. எழும்பி வெளியே வந்தார். ராசா மாமாவுக்கு சின்னப்பிள்ளையள் பொய்சொன்னல் பிடிக்காது. அடிப்பார். அதனுல் அவரிடம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டு விட்டன். 'குஞ்சு இனி ஒருநாளும் இந்தமாதிரிச் செய்யாதை. நீ சின்னப்பிள்ளை. உனக்கு இத்தமாதிரிப் பழிவாங்குற எண்ணங்கள் இருக்கக்கூடாதம்மா. இண்டைக்கே போய் 'நான் தான். இப்படியெல்லாம் செய்தனுன் றஜினி அக்கா. என்னை மன்னிச்சுக் கொள்ளுங்கோ' எண்டு மன்னிப்புக்கேள். பெரியவையளை எப்பவும் மதிச்சுநடக்கப் பழகு ..'' எண்டு புத்திமதி சொன்னூர். இவருக்கென்ன தெரியும். இருபத்தஞ்சு வயதாகியும் இன்னும் ஒரு வேலையும் கிடைக்கேல்லை எண்டிருக்கிருர். நாளைக்கு எப்பிடியும் கண்ணுடிப் பீப்பாவை எடுக்கிறது எண்டு நான் முடிவு செய்திட்டன். பிறகென்ன இவர்...

செவ்வாய்க்கிழமை பின்நேரம் மேரி அன்ரி அந்தோனியார் கோவிலுக்குப் போயிட்டா. றஜினிஅக்கா பூமரங்களுக்குத் தண்ணி ஊத்திக் கொண்டிருந்தா. நிம்மியும் பமிலாவும் பெரிய அறைக்குள்ளை விளையாடிக்கொண்டிருக்கினம். நானும்போய் அவையளோடை சேர்ந்து விளையாடினன். கண்ணுடிப்பீப்பா இப்போதும் அலுமாரிக்கு மேலேதான் இருந்தது. நிம்மியையும் பமிலாவையும் மெல்ல வெளியிலை அனுப்பிவிட்டுக் கதிரையை

நான் -

இழுத்துக்கொண்டு வந்து அலுமாரிக்குக்கிட்ட வைச்சன். அந்தக்கதிரைக்கு ஒருகால் சழண்டிருந்தது. கதிரையிலே நிக்க மட்டுமட்டாகக் கையெட்டினது. கண்ணுடிப்பீப்பாவை எடுத்தன்.

என்ரை கெட்டகாலம் அந்தநேரம் கதிரை சரிஞ்சு கண்ணுடிப் பீப்பா வோடை 'டமால்' எண்டு கீழை பாடாக விழுந்தன். பீப்பா துண்டு துண்டா நொருங்கிப் போயிற்றுது. தலையிலே பிசுங்கான் வெட்டிப்போட்டுது கால் துடையிலேயும் குத்திப்போட்டுது ரத்தம் வருது! ''ஐயோ...!'' எண்டு குளறினன். றஜினி அக்கா வந்து பாத்தா" ஐயோ! குஞ்சுவுக்குப் பிசுங்கான் வெட்டிப் போட்டுது. ஓடிவாங்கோ...' எண்டு சத்தம் போட்டா. எனக்குத் தலையெல்லாம் ரத்தம் காலைப்பாத்தன் 'ஐயோ அம்மா..." எண்டு முனகினன். றஜினி அக்கா என்னைத் தூக்கினு எனக்கு தலைசுற்றியது நான் மயங்கிட்டன்.

கண்முழிச்ச போது இந்தக்கட்டிலே தான் படுத்திருந்தன். தலையில பெரிய கட்டுப் போட்டிருந்தது. என்ரமுகத்தை றஜினி அக்கா தடவிக் கொண்டிருந்தா. நான் நிமிர்ந்து பாத்தன், அவ அழுது கொண்டிருக்கிரு எனக்கு ஒண்டும் விளங்கேல்லை ஏன் இவ அழுகிரு? ஏதோ விளங்குகிற மாதிரியும் இருந்தது. றஜினி அக்கா ஏன் அழுதீங்கள்...?', எண்டு கேட்டன் "இல்லைக்குஞ்சு நீங்கள் அதைக் கேட்ட பொழுதே ஒருச்கால் நான் தந்திருந்தால் இப்படியெல்லாப் வந்திராது. நான் தராதபடியால் தானே நீங்கள் அதை எனக்குத் தெரியாமல் எடுக்கப்போய் இவ்வளவெல்லாம் நடந்தது. குஞ்சு உங்கடை தலையிலேயும் காலிலேயும் இருக்கிற காயம் ஆறினுலும் இரண்டிடத்திலும் உள்ள தழும்புகள் மறையாதே ஐயோ... என்னுலை தானே எல்லாம் வந்தது. எண்டு குலுங்கிக் குலுங்கி அழுகிரு. அவவைப் பாக்கப் பாவமா இருக்கு, எனக்கும் கண்ணீர் வருது.

நான் றஜினிஅக்காவிலை எவ்வளவு கோபமா இருந்தன் ஆனுல் அவமட்டும் எப்பவும் போலவே என்னிலை அன்பாக இருக்கிரு. நினைக்க வேதனையாக இருக்கு. நான் இவவுக்கு எவ்வளவு துன்பம் செய்தன் இப்ப அதை நினைத்து அழுகிறன். அண்டைக்கு ராசாமாமா சொன்னதை அலட்சியப் படுத்தினதாலை தானே எனக்கு இந்தத் தண்டனை கிடைச்சது. அவர் சொன்னது மாதிரி அண்டைக்கே நான் மன்னிப்புக் கேட்டிருந்தால் எனக்கு இப்பிடியெல்லாம் நடந்திருக்காது கடவுள் எனக்கு நல்ல பாடம் படிப்பித்து விட்டார்.

றஜினி அக்கா என்னை மன்னிச்சிருங்கோ எண்டு கதறவேணும் போல இருக்கு. ஆசுப்பத்திரியிலை மற்றவை எங்களைப் பாத்துக்கொண்டு நிக்கினம் நான் றஜினி அக்காவின்ர கண்ணைத் துடைச்சுவிட்டன்.

இப்போது நான் ஒரு புதிய குஞ்சு நான் முந்தியைப் போலப் பிடிவாதம் பிடிக்கமாட்டன் யாரையும் பழிவாங்க வேணும். எண்டு ஒருபோதும் நினைக்கமாட்டன். பெரியவர்கள் எது சொன்னுலும் அலட்சியம் செய்யமாட்டன். நான் புதியவன்...

கண்ணை முழிச்சுப் பாக்கிறன். இப்ப தலையிடி குறைஞ்சிருக்கு. ஆசுப்பத்திரி மணி அடிக்குது நேரம் பன்ரண்டு மணி வழக்கம்போல றஜினி அக்காவும் அம்மாவும் வருகினம்.

(யாவும் கற்பனை)

தென் புலோலியூர் க. முருகானந்ததாஸ்

# புதிய கணக்கு

வாய்ப்பாடுகளுக்கே வழியில்லாது.
வாழ்க்கையை நாங்கள்
கடன் வாங்கியே கழிக்கின்றோம்.
இந்த கூட்டு வட்டியோ
செல்வத்தை சிலரிடம் மட்டும்
கூட்டும் வட்டியாய் இருக்கிறதே தவிர
எங்கள் துன்பங்களின் பெருக்கலை
கழிக்கவே முடியவில்லை
விலைவாசியோ ஏறுவரிசையில்
வாழ்க்கைத் தரமோ இறங்கு வரிசையில்
இவ்வரிசைகளின் வேகத்தை
எண்ணிப்பார்க்கவோ
எண்ணாலோ எழுத்தாலோ
எழுத எவராலும் இயலாது.
மடங்கு கணக்காய் மடங்கி
நாங்கள் உழைத்த பிறகும் கூட
கால், அரை வயிற்று பின்னங்களாகவே
பின் தங்குவதன் காரணி என்ன?
ஆனால் பூஜ்ய உழைப்பு செய்யும்
சிலரின் செல்வ பரப்புக்கள் மட்டும்
விரிவடைவது எந்த சூத்திரத்தால்
வறுமை கோடுகள் வெட்டி சாய்ந்த
எம் வாழ்வின் கோணத்தை
எந்த பாகைமணியும் அளந்து
பார்ப்பதேயில்லை. புரிந்துவிட்டது.
வீணாய் மனக்கணக்கு போடும்
பழைய சமன்பாடுகளோடு
இனியும் எமக்கு உடன்பாடில்லை.
எமக்குத்தான்
வர்க்கமூலத்தின் வழிதெரிந்து விட்டதே
நாங்கள் வகுத்த புதிய கணக்கில்
எமக்கு இனி நூற்றுக்குநூறு
''மார்க்ஸ்'' தான்

- எம். கவணகன் -
தமிழ் நாடு, இந்தியா.

# ஏன் சிரிக்க வேண்டும்?

நீற்ரு குணநாயகம்

நாம் வீணுகக் கவலைப்படுவதால் உள்ளம் அங்கலாய்த்து, சோர்விழந்து வானமே இடிந்து விழுந்தாற் போல் வாழ்வே கசந்து விடுகிறது. எண்ணில்லா உடல்நோய்களுக்கும் ஆளாகி விடுகிறோம். கவலைகளாலேயே எமக்குக் கூடுதலான நோய் வருவதாக உளவியலாளர் கூறுகிறார்கள்.

கவலைப்படுவதால் எமது உள்ளமும், உடலும் இறுகிக் கடினமாகிறது இதனுல் உடல் உறுப்புக்கள் சரியான முறையில் இயங்க மறுத்து விடுகின்றன. இதுவே எமக்கு வித்தியாசமான வலிகளையும், நோவுகளையும் உண்டாக்கின்றது. இதற்கு மாற்று மருந்தாக இருப்பது சிரிப்பு;

"இலகுவான இதயம் நீண்டநாள் வாழும்'' என்கிறார் ஷேக்பியர், எமது சிரிப்பால் நாம் மட்டுமல்லாது மற்றவர்களையும் குணப்படுத்துகிறோம். "யாரும் என்னைப் பார்த்து ஓர் புன்னகை செய்யமாட்டார்களா?...... என்று ஓங்கியே அழுகின்றன எத்தனையோ உள்ளங்கள். எனவே சிரிப்போம். சுவாசப்பையில் இருந்த ஈரல், இருதயம், வயிறு எல்லாவற்றையும் சிரிப்பானது குலுங்க வைக்கின்றது. இதனுல் இரத்தம் உடல் முழுவதும் ஓடுகிறது. இருதயம் விரைவாகத் துடிக்கிறது. உணவு சமிபாடு அடைகின்றது. இதனுல் பசி உண்டாகிறது. அதனுல் தான் சிரித்து உண்; செரித்து விடும்' என்று கூறுகிறார்கள்.

சிரிப்பினுல் கண் ஒளி பெறுகின்றது. இதனுல் முகமே மலர்கின்றது. நெஞ்சு விரிவடைகின்றது. சுவாசப் பையில் இருக்கும் அசுத்தகாற்று வெளியேறுகின்றது.

சிரிப்பின் ஒலியைக் கேட்கும் உள்ளம் உவகை கொள்கின்றது. உள்ள உறுதியும், நம்பிக்கையும் வலுவடைகின்றது. ஆகவே சிரிப்போம்... "நான் கடவுளைக் கண்டேன் ஓர் குழந்தை வடிவிலே...... என்று கவிஞன் பாடுவதும் உண்மையே. குழந்தையின் உள்ளம் மகிழ்ச்சியின் வெள்ளம். அது தெய்வத்தின் அரியாசனம். சிரிப்பு கவலை என்ற இருளை அகற்றி மகிழ்ச்சி என்ற நீரைப் பாய்ச்சுகின்றது. இதனுல் எமது உள்ளம் பண்படுத்தப்படுகிறது. சிரிப்பவனுல் தான் வாழ்க்கையை முழுமையாக அனுபவித்து வாழமுடியும். இயற்கையின் அழகை இரசிக்க முடியும்.

பெண்கள் அணியும் நகைகளில் எல்லாம் விலை உயர்ந்ததும் மதிக்கத்தக்கதும் 'புன்னகை'யே இது இறைவனுல் எமக்குத்தரப்பட்ட கொடை. இதை நாம் எப்படி எம்மிடம் இருந்து பிரித்துவிட முடியும்? இது எமது உரிமைச் சொத்து அதை நாம் தாராளமாக உரிய இடத்தில், உரிய முறையில் பயன்படுத்துவதற்கு எமக்கு முழு சுதந்திரமும் கடமையும் உண்டு.

நாம் ஒவ்வொரும் சிரித்து சிங்காரமாக வாழ வேண்டும். கவலைகளால் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்க வேண்டும். என்பது முறை திட்டம் அன்று. சிரிக்கத் தெரியாதவர்களின் உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதி அற்றுப்போகும். இவர்களுக்கு நண்பர்கள் என்று இருப்பவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். மற்றவர்களின் நட்பைப் பெறமுடியாமல் திண்டாடுவார்கள்.

மனம் விட்டு சிரிக்கத் தெரியாதவர்கள் வெகுவிரைவில் முதுமையை ஒட்டிவிடுவார்கள். அன்னை திரேசா முதுமையிலும் இளமைததுடிப்புடன் இருப்பதன் இரகசியமே புன்னகை பூத்த முகமேயாகும். அநேகமாக தாழ்வுமனப்பான்மை உடையோர், சிரிப்பதற்கு அஞ்சி தமது வாழ்க்கையைப் பாலைநிலமாக்கி விடுகிறார்கள். நாம் சிரிப்பதால் எதையுமே இழந்து விடுவதில்லை. மாறாக உடல், உள நலம் பெற்று வாழக்கற்றுக் கொள்ளுகிறோம்.

எனவே சந்தர்ப்பம் கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் வாய்விட்டு சிரித்து மகிழ்வோம். எமது குறைகள், தவறுகள், தோல்விகள், சோதனைகள் யாவற்றையும் மலைபோல் எண்ணாது மடுவாக உருவாக்குவோம்: உரியவர்களுடன் பகிர்ந்து கொள்வோம். அப்பொழுது எமது வாழ்வில் மலர்ச்சியும், மகிழ்ச்சியும், மனநிறைவும் தோன்றும். வெற்றி நமதே சிரிப்போம். வாழ்வோம்.

'சிரித்து வாழவேண்டும் - பிறர்
சிரிக்க வாழ்ந்திடாதே

றீற்று குணநாயகம்


வெளி வந்து விட்டது!

1984இன் "நான்" இதழ்கள் தொகுக்கப்பட்டு, அழகாகக் கட்டப்பட்டு பல்லாண்டு நிலைக்கக்கூடிய வகையில் வெளிவந்துள்ளது. குறிப்பிட்ட சில பிரதிகள் மட்டும் எம் கைவசம் இருப்பதனால் ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ள இன்றே வாங்க முயலுங்கள்.

ஒரு புத்தகதின் விலை ரூபா: 25-

# "நான்" இற்கு ஒரு மடல்

மனைவியின் நெஞ்சக் குமுறல்
கணவனுக்கு ஒரு மடல்
கணவனின் அங்கலாய்ப்பு
மனைவிக்கு ஒரு மடல் - என்ற
மடல் வடிவங்களால்
பல நெஞ்சங்களின்
உள்ளக் குமுறலைக் கிளப்பி
சிந்தனையைத் தூண்டிய
உனக்கு
நான் ஒரு மடல் வரையலாமா?

இன்னல் மிகு இறுதியாண்டினை
துயரங்களுடன் கழித்து
இன்னும் நீதியில் நம்பிக்கை கொண்டு
மலர்ந்த ஆண்டுதனை
ஏக்கத்துடன் வரவேற்று
எம் மக்கள் நிற்கும்
இவ்வேளைதனில்
உன் தயவு வேண்டி
நான் இம்மடலை வரைகின்றேன்.

கடந்த ஆண்டில்
குழந்தை, இளமை
தாம்பத்தியம், குடும்பம்
முதுமை என்கின்ற
ஐந் தலைப்புக்களில் - நீ
மொழிந்திட்ட
கரு நிறை அறிவுரைகள்

தடுமாறி நின்ற இளமைகள்
புரிந்துணர்வற்று குழம்பிய குடும்பங்கள்
ஆதரவற்று தவித்த முதுமைகள்
ஆகியோரின்
சிந்தனைகளைத் தூண்டியது
என்னவோ உண்மைதான்.

ஆனால்
ஒரே கேள்விகளுக்கு
பதிலளித்து
சில வேளைகளில் ஏமாற்றமும்
நீ தந்தாய்
குறை நான் கூறுவதையிட்டு
கறை நீ கொள்ளமாட்டாய்
குறைவற்று நீ வளர்ந்தால் - நான்
நிறைவுற்று வளர்வேன்

தடுமாற்றங்கள், ஏமாற்றங்கள்
இழப்புக்கள், இன்னல்கள்
தவிப்புக்கள், தாகங்கள்
ஏக்கங்களுடன் காத்திருக்கும்
எம் மக்கள்
நம்பிக்கைதனை நீ யூட்டி
நல் வழிகாட்டியாய்
திகழ்ந்திட வேண்டும்.

வாழ்க நீ! வளர்க நாம்!
தொடர்க உன் பணி.

கி. கிறிஸ்தோப்பர்
எட்டியாந்தோட்டை.

# உறங்காத உண்மைகள்

-கமலா இளங்கோவன்-
குருநகர், யாழ்நகர்.

காலை எனது அலுவலக அறைக்குள் நுழைந்தபோது பால் உறைகளும், பேப்பர்களும் என்னை வரவேற்றன. வாராந்த பத்திரிகையொன்றை நடாத்துபவனும், அப்பத்திரிகையின் ஆசிரியனுமான என்னுடைய அறை வேறு எப்படி இருக்கும்? அதுவும் அண்மையில் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டிக்கு வந்திருந்த சிறுகதைகளினால் அறை நிரம்பி இருந்தது. நான் எனது பத்திரிகையில் புது விதமாக சிறுகதைப் போட்டியை நடாத்தியிருந்தேன். கதையின் முடிவு வாக்கியத்தைக் கொடுத்து அதற்குப் பொருத்தமான கதை எழுதும்படி கேட்டிருந்தேன். ''வனிதாவின் வீட்டிலிருந்து புறப்பட்ட ஸ்டெலாரீச்சர் தனது கடந்தகால வாழ்க்கைக்காக வெட்கமடைந்து தனது வாழ்க்கையை புதிய நோக்கில் செலுத்த உளம் மாற்றம் அடைந்தவராக தனது வீடு நோக்கிச் சென்றார்'' என்பதாகும். போட்டியில் அநேகர் சிறப்பானகதைகளை எழுதியிருந்தனர். மிகவும் சிரமப்பட்டு முதலாம் பரிசுக்குரிய கதையை நானும் என் குழுவினரும் தேர்ந்தெடுத்தோம். ''தாமரைச் செல்வி'' என்ற பெயரில் எழுதப்பட்டிருந்த அக்கதையை மீண்டும் ஒரு முறை வாசிக்க வேண்டுமென ஆவல் தூண்டவே கதிரையில் அமர்ந்து அக்கதையை எடுத்து வாசிக்கலானேன்.

அது ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்கும் பாடசாலை. மாணவர்கள் குழுக்களாக நின்று கதைத்துக் கொண்டிருந்தனர். ''டாண், டாண்'' என பாடசாலை மணி ஒலித்தது. ''மேரி, வா, விரைவாக போவோம். அந்த சிடுமூஞ்சி வகுப்புக்கு வந்து விடும்'' என்றாள், ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் புஸ்பா ஸ்டெலாரீச்சருக்கு சிரிக்கவே தெரியாது'' என்றாள் விஜயா, ''சிரிக்கத் தெரிந்தால் முகம் இப்படி வந்திருக்குமா வெறுப்புடன் கூறினாள்'' ஜெனிட்டா. ''நேற்று சீடு மூஞ்சியிடம் வாங்கினது போதாதா? இன்றைக்கும் வாங்கப் போகிறீர்களா? வாருங்கள் சீக்கிரம் போவோம். அதோ வருகிறார். சிரிப்புத் திலகம் ஸ்டெலாரீச்சர்'' என மாணவர்கள் கூட்டத்திலிருந்து முரளி கூறவும் அனைவரும் வகுப்பறையை நோக்கி ஓடினர்.

ஸ்டெலாரீச்சரின் வருகையை நிசப்தம் அறிவித்தது. கையில்

பிரம்புடன் கடுகடுத்த முகத்துடன் முப்பத்தைந்து வயதுடைய ஸ்டெலாரீச்சர் வகுப்பறைக்குள் நுழைந்தார். குட்மோனிங் ரீச்சர் எனக் கூறிய மாணவருக்கு பதிலளித்து விட்டு தான் போட்டிருந்த மூக்குக் கண்ணாடியினூடாக ஒவ்வொரு இருப்பிடங்களுக்கும் பார்வையைச் செலுத்தினர். தம்மை விட்டு பார்வை அகலும் மட்டும் உடல் நடுங்க நின்றனர் மாணவர். பெண்களின் மூன்றும் வரிசையில் ஒரு இருக்கை வெறுமையாக இருப்பதைக் கண்டதும் முகத்தில் மேலும் கடுமை யேற "எந்தக் கழுதை இன்னும் வரவில்லை'' என மாணவரைக் கேட்டார். ஒருவாறு திடத்தை வரவழைத்துக் கொண்டு மேரி எழுந்தபோது வாசலில் நிழலாடியது. அனைவரின் பார்வையும் அங்கே சென்றது. அங்கே வனிதா தயங்கி தயங்கி உள்ளே நுழைந்தாள். 'வாடி இங்கே பாடசாலைக்கு போகிறேன். என்று வீட்டில் கூறிவிட்டு எங்கே சுற்றி விட்டு வருகிறாய்'' என்று அதட்டிக் கேட்கவும் ''இல்ல ரீச்சர் இப்பதான் வாறேன் ரீச்சர்'' பயந்தவாறு பதில் கூறினாள் வனிதா. இதனைக் கேட்டு முகம் கோணிய ரீச்சர், ''என்னடி எதிர்த்தா கதைக்கிறாய். அவ்வளவிற்கு வாய் வந்துவிட்டதா'' என ஏசியபடி பிரம்பை எடுத்து இருகைகளிலும் படீர் படீர் என விளாசித் தள்ளினர். பின் ஓய்ந்தவராக ''எனிமேல் பிந்தி வந்தால் நான் பொல்லாதவளாகி விடுவேன்'' என ஸ்டெலாரிச்சர் கூறவும். 'ஏன் இப்போது நல்ல ரீச்சராக இருக்கிறீங்க'' என குமார் கூறியது பக்கத்திலிருந்த மாணவ மணிகளுக்கு கேட்டும் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டனர். நல்லவேளை ரீச்சருக்கு கேட்க வில்லை. அதனால் குமார் தப்பிக் கொண்டான். வனிதா வரத்துடித்த கண்ணீரை அடக்கிக் கொண்டு சென்று இருப்பிடத்தில் அமர்ந்தாள்.

மறுநாள் மாணவர்கள் வகுப்பில் அமர்ந்திருந்தனர். ஸ்டெலா ரீச்சர் வரவில்லை. வனிதாவும் வரவில்லை. ரீச்சர் வருவதற்கு முன் வனிதா வந்துவிடவேண்டும் என எல்லோரும் தவித்துக் கொண்டிருந்தனர். ''ஆண்டவரே வனிதாவைக் காப்பாற்று'' என வேண்டிக் கொண்டாள் மேரி. சரக், சரக் என்ற செருப்புச் சத்தத்தை தொடர்ந்து ரீச்சர் வகுப்பறைக்குள் நுழைந்து கொண்டிருந்தார் மாணவர்கள் இன்று என்ன நடக்குமோ என்ற படபடப்புடன் தம் இருப்பிடங்களில் எழுந்து நின்று கொண்டிருந்தனர். நுழையும் போதே ஒவ்வொரு இருப்பிடங்களையும் பார்வையிட்டபடி வநது கொண்டிருந்த ரீச்சர் இன்றும் வனிதாவின் இடம் காலியாக இருக்கவே, மாணவர் வணக்கம் கூறியதையும் கவனிக்காது கோபத்துடன் சென்று புத்தகங்களை மேசை மீது படாரென வைத்தார், இன்று வனிதாவின் கதி அதோ கதிதான் என மாணவர்கள் இரக்கப்பட்டுக் கொண்ட

னர். "கழுதைகளுக்கு எப்படிச் சொன்னாலும் கேட்காதுகள் நேற்று எவ்வளவு கத்திச்சொல்லியும் அவள் நேரத்திற்கு வரவில்லை. அவ்வளவு திமிர் வரட்டும் இன்றைக்கு" என ரீச்சர் கத்தி முடியவும், வியர்த்து, களைத்த தோற்றத்துடன் பயந்த வண்ணம் வனிதா வகுப்பறைக்குள் நுழையவும் சரியாக இருந்தது. அமைதியாகிவிட்ட வகுப்பறையை "வாடி இங்கே கழுதை" என்ற ஸ்டெலாரீச்சரின் கடூரமான குரலொலி கலைத்தது. கோபம்நிறைந்த கொடுமையான ரீச்சரின் பார்வையை பார்க்க முடியாதவளாக தலையைக் குனிந்து கொண்டு உடல் நடுங்க மெல்ல, மெல்ல அருகே சென்ருள் வனிதா. ராணியார் அன்ன நடையுடன் வருகிருர்" என ரீச்சர் நளினம் காட்டவும் "ரீச்சர் ரொம்ப நல்லா நடிக்கிருர்" என்று மாணவன் குமார் கூறவும் வகுப்பறையில் சிரிப்பொலி கிளம்பியது. அதனை மேலும் தொடரவிடாது ரீச்சரின்பார்வையின் கடுமை தடுத்தது.

ஏதும் பேசாது தன் முன் தலை குனிந்து கொண்டு நிற்கும் வனிதாவைப் பார்த்து 'ஏண்டி நான் சொல்வது காதினுள் நுழையாதோ? "எனக் கத்திய ரீச்சர் வனிதாவின் தலைமயிரைப் பிடித்து கன்னத்தில் பளீர், என தன்கைகளினுல் மாறிமாறி அடித்தார். இன்னும் ஆத்திரம் தாளாதவராக "நான் எனபாட்டில் கேட்டுக் கொண்டே நிற்கிறேன். நீ உன்பாட்டில் பேசாது நிற்கிருய்" என அவள் அணிந்திருந்த கவுணில் பிடித்து உலுக்கவும் கிறீச் என்ற ஒலியுடன் கவுண் தோளடியில் கிழிந்தது. அதுவும் போதாது என்று தன்னுல் முடிந்த மட்டும் வனிதாவைத் திட்டித் தீர்த்தார். கவுணின் கிழிந்த பகுதியினுடாக தெரியும் தன் மேனியை புத்தகங்களினுல் மூடிமறைத்துக் கொண்டு அவமானத்தினுல் கூனிக் குறுகியவளாக அடக்க முடியாமல் தன்னையும் வெளி வந்துவிட்ட கண்ணீர் துளிகள் கன்னங்களில் வழிந்தோட தனது இருப்பிடம் நோக்கிச் சென்ருள்.

அடுத்த நாள் ஸ்டெலாரீச்சர் தனது வழமையான தோற்றத்துடன் வகுப்பறை நுழைந்தார். அன்றும் வனிதா இன்னும் வராததைக் கண்டார். தன் பேச்சை உதாசீனம் செய்யும் அவள் இன்றைக்கு வரட்டும் என மனதில் கறுவிக்கொண்டவராக தனது கடமையைத் தொடர்ந்தார். ஆனுல் அன்று வனிதா வரவில்லை. அடுத்தநாள், அடுத்தநாள் வருவாள் என வனிதாவின் வருகையை எதிர்பார்த்து காத்திருந்த ரீச்சருக்கு வனிதா வராதது பெரும் ஏமாற்றமாக இருந்தது. வாரம் இன்று கடந்தும் வனிதா வரவில்லை. ஆரம்பத்தில் கோபத்தில் அசட்டையாக இருந்தாலும் நாட்செல்லச் செல்ல வனிதாவைப் பார்க்க வேண்டுமென்ற என்ற ஆவல் ஸ்டெலாரீச்சருக்கு ஏற்பட்டமையினுல் இதுபற்றிக் கேட்டார். "நல்லதோ கெட்டதோ ஒன்றின் மேல் ஆவல் ஏற்பட்டு விட்

டால் அதனை பார்க்கவேண்டுமென்றோ, அடைய வேண்டுமென்றோ மனம் எதிர்பார்க்கின்றது, துடிக்கிறது.'' இந்த மனவெழுச்சியுடன் இருந்த ஸ்டெலாரீச்சர் மாணவர்களிடம் வனிதாவின் வருகை தடைப்பட்டது பற்றிக் கேட்டதில் வியப்பேதுமில்லை. ஆனால் எவரிடமிருந்தும் சரியான பதில் கிடைக்கவில்லை.வாரங்கள் இரண்டும் கடந்துவிட்டன. வனிதா ஏனோ வரவில்லை. ஆனால் ரீச்சரின் ஆவல் தணியவில்லை. வனிதாவின் நண்பர்களிடம் விலாசத்தைக் கேட்டார். சரியான விலாசத்தை எவரும் கொடுக்காவிட்டாலும் வனிதாவின் கிராமத்தின் பெயரைக் கூறி அங்கே போய் கேட்டால் காட்டுவார்கள் என்றனர்.

அன்று சனிக்கிழமை ஸ்டெலாரீச்சர் குறிப்பிட்ட கிராமத்திற்கு புறப்பட்டார். மூன்று மைல் தூரத்திலுள்ள அக்கிராமத்தை பஸ்ஸில் சென்றடைந்தார். அக்கிராமம் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடத்தினைப் போன்று பலவீடுகள் எரிந்தும், உடைக்கப்பட்டும் பல இடங்கள் அழிவுற்ற நிலையிலும் தோற்றமளிப்பதைக் கண்டார். இந்தச் சூழலில் வனிதாவின் வீட்டை எங்கே போய்த் தேடுவது எனத் தடுமாறி ரீச்சர் நின்றபோது, சற்றுத் தூரத்தில் தன்னை நோக்கி நடுத்தர வயதுப் பெண்மணி ஒருத்தி வருவதைக் கண்டார். வந்த பெண்மணி "யாரைத் தேடுகிறீர்கள்'' என ஸ்டெலாரீச்சரை வினவினாள். ரீச்சர் வனிதாவைப் பற்றிக் கூறவும் ''நவமணியக்காவின் வீட்டையா தேடுறீங்க? வாங்க காட்டுகிறேன்'' என அழைத்துச் சென்றாள். அவருடன் நடந்துசென்ற ரீச்சர் கிராமத்தின் அலங்கோல நிலைபற்றி விசாரித்தார். ''அந்த அநியாயத் கதை ஏன் கேட்கிறீர்கள்! ஏதோ குண்டு வெடித்து ஜீப்பில் வந்தோர் சிலர் இறந்து போனார்களாம். அதனைத் தொடர்ந்து நடந்த அட்டகாசம்தான் இக்கிராமத்தின் தோற்றத்தை மாற்றிவிட்டது என பெருமூச்சுடன் அப்பெண்மணி கூறவும் அப்போது தான் ரீச்சருக்கு சில மாதங்களின் முன் தான் பத்திரிகைகளில் படித்த செய்தி ஞாபகம் வந்தது. அக்கிராமம் இது தான் எனப்புரிந்து கொண்டார். அழைத்துச் சென்ற அப்பெண்மணி ஓர் குடிசை முன் நின்று ''நவமணி நவமணி'' எனக் கூப்பிட்டாள். அது குடிசை என பெயரளவில் தோன்றினாலும் அதற்குக் கூட தகுதியற்ற நிலையில் அக்குடிசை தோற்றமளித்தது. அப்போது "யாரது" எனக்கேட்டுக்கொண்டு உள்ளிருந்து ஒரு பெண்மணி வெளியே வந்து ரீச்சரைக் கண்டதும் சற்றுத் தயங்கினாள். வனிதாவின் பாடசாலையில் படிப்பிக்கின்ற ரீச்சராம். வனிதாவைப் பார்க்க வந்திருக்கிறாங்க என்று ரீச்சரை அறிமுகப்படுத்தி வைத்தார் அழைத்து வந்த பெண்மணி. ''அப்படியா வாங்க ரீச்சர் என உள்ளே அழைத்துச் சென்றார் வனிதாவின் அம்மா. உள்ளே சென்ற ரீச்சர் வீட்டில் ஆட்சிபுரியும் வறுமையைப்புரிந்து

கொண்டார். கூரையினூடாக ஆங்காங்கு தெரியும் நீலவான மும் வீட்டில் உள்ள நிலையும் தெளிவுபடுத்தியது.

''உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்'' என்ற பேச்சை ஆரம் பித்து வைத்தார் ரீச்சர்.''எனக்கு இரண்டு பெண்களும் ஒரு பொடி. யனும்தான் ரீச்சர். மூத்தவள் வனிதாதான்'' என்றாள் வனி வின் தாயார். ''வனிதாவின் அப்பா என்ன செய்கிறார்'' எனப் பேச்சை தொடர்ந்தார் ரீச்சர் ''வனிதாவின் அப்பாவா? அவர் ...அவர்'' எனத்தடுமாறியவனிதா வின் தாயின் கண்ணீர்கள் பதில் கூறின. கண்ணீரைக் கண்டு சங்க டப்பட்ட ரீச்சர் ''நான் ஏதும் தவறாக கேட்டிருந்தால் என்னை மன்னித்து விடுங்கள்'' எனக் கூற ''அப்படி ஒன்றுமில்லை ரீச்சர்'' எனக் கூறிய வனிதாவின் தாயார் தன் கண்ணீரை சீலையினால் துடைத்துக் கொண்டு தான் மறக்கமுயன்றும் முடியாது தவிக் கும் தன் துன்பப்படலத்திற்கு வார்த்தை வடிவம் கொடுத்தார்.

''நைந்து, நொந்து இருக்கும் உள்ளத்தின் உணர்வுகள், அனு தாப வார்த்தை, அக்கறையான உரையாடலைக் கேட்டதும் சுமுறலு டன் வார்த்தையாக வெளிப்படுவது மனிதவாழ்வின் இயல்பு'' அந்த இயல்பு தான் வனிதாவின் தாயாரை தன் நிலையைக் கூற வைத்தது:— ''நாம் பெரும் செல்வச் செழிப்புடன் வளரா விட்டாலும் ரீச்சர். நாளாந்த சீவியத்திற்கு கஷ்டமில்லாது வாழ்ந்து வந்தோம். அவர் கூலி வேலை செய்தாலும் குடும்பப் பொறுப்பு மிக்கவராக இருந்தார். ஆனால், யார் கண்பட்டதோ தெரியாது. எமது குடும்பத்திற்கு இந்தநிலை வந்தது.'' என்று சற்று நிறுத்தினார். மீண்டும் 'அன்று காலை வழமைபோல் அவர் வேலைக்குப் போனார். காலை9 மணி போல் பெரும் வெடிச்சத்தம் கேட்டது. சில நிமிட இடைவெளி யின் பின் பல வெடிச்சத்தங்கள் கேட்டன. அதனைத்தொடர்ந்து சுடுகிறாங்க, வீட்டை உடைக்கி, றாங்க' என மக்கள் கூக்குரலு டன் ஓடினார்கள். நாங்களும் அவர்களைத்தொடர்ந்து ஓடினோம் உடல் நடுங்க பயத்துடன் அன்று முழுவதும் காட்டில் ஒளித்திருந் தோம். மறுநாள் நாம் அனைவ ரும் ஒரு கோவிலில் தஞ்சமடைந் தோம். வேலைக்குப் போன வனி தாவின் அப்பா என்ன ஆனார் என நான் தவித்துக் கொண்டி ருந்தேன். அன்று மாலை வந்தது. என் தலையில் இடிவிழுந்த அந்தச் செய்தி. வேலை முடிந்து வரும் வேளை அவர் சூடுபட்டு இறந்து போனாராம். பிரேதத்தையும் எரித்துப் போட்டனராம்.'' எனக் கூறிய வனிதாவின் தாயார் குலுங்கிக் குலுங்கி அழுதார். பின் ஓய்ந்தவராக தொடர்ந்தார் ''அவர் விட்டுச்சென்ற பெரும் சொத்து மூன்று பிள்ளைகள்தான் எப்படிக் கஷ்டப்பட்டென்றாலும் வனிதாவை படிக்க வைக்க வேண்டும் என்று முயற்சித்தேன்.

அனல் ரீச்சர் அதற்கும் மண் விழுந்து விட்டது. 'ஏன் என்ன நடந்தது?' எனக் கேட்டார் ரீச்சர். "நாம் ஏதோ வயிற்றை நிரப்புவதற்கு அப்பம் சுட்டு விற்கிறேன். நான் சுடுகின்ற அப்பத்தை விடியப்புறத்திலே கடைக்குக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டுத்தான் வனிதா பாடசாலைக்குப் போவாள். இங்கிருந்து ஓட்டமும் நடையுமாகவே செல்வாள். பஸ்சில் போவதற்கு வசதியில்லை. அதனுல் சிலவேளைகளில் பாடசாலைக்குப் பிந்திவிடுவாள். இப்படி ஒருநாள் பாடசாலைக்கு பிந்தி சென்றமையினுல் வனிதாவின் வகுப்பு ரீச்சர் அவளுக்கு கன்னம் கன்னமாக அடிஅடியென அடித்ததும் இல்லாமல் அவளின் ஒரு கவுணையும் கிழித்து விட்டார். தன்னிடமுள்ள ஒரே ஒரு கவுணுக்கும் இந்த நிலை ஏற்பட்டுவிட்டதனை எண்ணிக் கவலையடைந்த வனிதா 'இனி நான் பாடசாலைக்குப் போகவில்லை. யெனக் கூறிப்படுத்தவள்தான் அன்று பிடித்தகாய்ச்சல்இன்னும் விட்டபாடில்லை. "நான் இனி பாடசாலைக்குப் போகமாட்டேன். ரீச்சர் அடிப்பார்" என இடையிடையே புலம்புவாள்' எனக்குத்தெரிந்த கைவைத்தியம் எல்லாம் செய்து போட்டேன். ஆனுல் நோய்விட்டபாடில்லை. இறைவன் ஏன் என்னை இப்படிச் சோதிக்கின்ருரே எனக் கண்ணீருடன் வனிதாவின் தாய் கூறினுர்.

ஸ்டெலா ரீச்சரின் முன் வனிதாவின் பரிதாபமான முகம் அவள் தோற்றம் எல்லாம் தோன்றி மறைந்தது. நான் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை சென்று மாணவர் வழிநடத்தல் உளவியல் எல்லாம் கற்று என்ன பயன்? ஒருகுழந்தையின் நிலையை சரியாக புரிந்துணராது தான் நடந்துகொண்ட மிருகத்தனமான முறைகளையெண்ணினுர். உளவியல்தாக்கங்களை புரியாது. இன்னும் எத்தனை மாணவர்களை நான் பாழடித்திருக்கின்றேனே என மனத்தால் தன்னையே சாடிக்கொண்டிருந்த ஸ்டெலா ரீச்சரின் சிந்தனையை நிறுத்துவது போல் வனிதாவின் தாயாரின் குரல் ஒலித்தது. "மிகவும் களைத்துப்போய் வந்திருக்கும் உங்களுக்கு குடிப்பதற்கு ஒன்றும் தராது என்னுடைய குடும்பக் கதையைக் கூறி உங்களையும் துன்பப்படுத்தி விட்டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் ரீச்சர்" எனக்கூறி உள்ளே செல்ல முயன்ற வனிதாவின் தாயாரை தடுத்த ரீச்சர் "இப்போது ஒன்றும் வேண்டாம். எங்கே வனிதாவைக் கூப்பிடுங்க பார்ப்போம்" எனக் கேட்ட ரீச்சரின் குரலில் ஆவல் தெரிந்தது. "இருங்க ரீச்சர் எழுப்பிவிடுகின்றேன்' என அறைபோல் தோற்றமளித்த குடிசையின் பகுதிக்குச் சென்ருர். அங்கே வனிதாவை தட்டி எழுப்புவதும் வனிதா இயலாமையால் முனகுவதும்

ஸ்டெல்லா ரீச்சருக்குக் கேட்கவே "எழுப்பவேண்டாம் நானே வருகின்றேன் எனக் கூறி அங்கே சென்றார்.

ஒரு கந்தல் பாயில் சுருண்டு போய்க் கிடந்தாள் வனிதா. 'படுத்திருப்பது வனிதாவா? எப்படித் துரும்பாக இளைத்துவிட்டாள். அவளின் இந்நிலைக்குக் காரணம் தான் தான் என உள்ளம் வெதும்ப கண்கள் பனித்தன. ஸ்டெல்லா ரீச்சரைக் கண்டதும் எழுந்திருக்க முயன்ற வனிதாவைத் தடுத்த ரீச்சர் வனிதாவின் பக்கத்தில் அமர்ந்தார். ''ரீச்சர் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். என்னால் பாடசாலைக்கு வரமுடியவில்லை'' அழுதவாறு புலம்பினாள் வனிதா. "இப்ப பாடசாலைக்கு ஒன்றும் அவசரமில்லை. நீர் ஆறுதலாக வரலாம்' எனக்கூறி, வனிதாவை அணைத்து ஆறுதல் படுத்தினார். வனிதாவின் உடல் இன்னும் தணலாக கொதித்துக்கொண்டிருப்பதை உணர்ந்து "நகரத்திலுள்ள இலவச அரசாங்க வைத்தியசாலையில் காட்டியிருக்கலாமே" எனத் தாயாரைக் கேட்டார் காட்டியிருக்கலாம்தான் ரீச்சர். ஆனால் இன்றைய சூழ்நிலையில் வாகனவசதியுமில்லை, மாட்டு வண்டிலில் போகலாம் என்றாலும் அளவுக்கு மீறிக் கேட்கின்றார்கள். கேட்கின்றதை எப்படியாகிலும் சேர்த்துக்கொண்டு காட்டலாம் என்று இருக்கிறேன்'' எனத் தனது இயலாமையை மறைக்முடியாதவளாக கூறினாள்.

சற்று நேரம் சிந்தித்த ரீச்சர் வனிதாவினிடம் விடை கூறி விட்டு தாயாரை வெளியே அழைத்துவந்தார். "நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாதீர்கள். வனிதாவை டாக்டரிடம் காட்டி குணப்படுத்துங்கள். பாடசாலை விடயத்தை நான் கவனிக்கின்றேன்" எனக்கூறி வனிதாவின் தாயார் எவ்வளவோ மறுத்தும் அவர் கையினுள் ஐம்பதுரூபா தாள் ஒன்றை வைத்துவிட்டு புறப்பட்டார் ஸ்டெலாரீச்சர். வனிதாவின் வீட்டிலிருந்து புறப்பட்ட ஸ்டெலாரீச்சர் தனது கடந்தகால வாழ்க்கைக்காக வெட்கப்பட்டு தனது வாழ்க்கைக்காக வெட்கப்பட்டு தனது வாழ்க்கையை புதிய நோக்கில் செலுத்த உளம் மாற்றம்அடைந்தவராக தனது வீடு நோக்கிச் சென்றார்.

"ஆசிரியன் வெறும் ஏணி மாத்திர மன்று எதிர்காலத்தை உருவாக்கும் ஒரு வழிகாட்டியாகவும் தன்வாழ்வை எடுகோளாக்கும் ஒரு தியாகத்தோன்றலாகவும் திகழவேண்டும்" என மனம் சொன்னது.

நான் பனித்த கண்களுடன் உணர்ச்சிகள் நிறைந்த உள்ளத்தோடும் கதையை வாசித்து முடிக்கவும் என் அன்னை காப்பியுடன் அறைக்குள் நுழையவும் சரியாக இருந்தது.

---

தூங்காத மனமும் வீங்காத தலையும் தாங்கிய மனிதனே தேவை

---

# மலர்ந்தும் மலராத

'துஷி'

நல்லூர்த் திருவிழாவிற்கு ஏகப்பட்ட ஜனக் கூட்டம். கோயிலை நிறைத்தபடி இருந்தது. உள்ளே பூஜை நடப்பதற்கு அறி குறியாகக் கண்டாமணி ஓசை காதை நிறைத்தது. "அரோகரா" ஒலி காற்றோடு தவழ்ந்து மனதை பக்திக்கு அப்பாற்பட்ட, இறைவனோடு சங்கமமாகக் கூடிய ஒரு நிலையை, யாவருக்கும் உண்டு பண்ணிய அதேவேளையில், ராதா தனியே ஒரு மூலையில் நின்று அங்கும் இங்கும் பார்த்தாள். அவளது கருவிழிகள் யாரையோ தேடுவது போலிருந்தது. 'அப்பனே, முருகா! எப்படியாவது அவர் வந்திடணும். இல்லேன்னாலும் அண்ணன் கண்ணில என்னைத் தென்பட வச்சிடாதே. இரண்டு பேருக்கும் நடுவில இருந்து தவிக்கும் இரண்டும் கெட்டான் நிலைமையை எனக்கு உண்டாக்கிவிடாதே'' கையில் கண்ணீர்த் துளிகள் சொட்ட, அவசர அவசரமாகக் கண்ணைத் துடைத்தாள். அவள் பக்கத்தில் ஒரு சூட்கேஸும் 'அவர்' வரவை எதிர்பார்த்தபடி இருந்தது. நரேன் சரியாக 6—15க்கு வந்து விடுவதாகக் கூறியிருந்தான். இப்போது 6மணி கூட ஆகவில்லை. யாருமே கவனிக்கக் கூடியதல்ல அவள் நின்றிருந்த இடம். அவள் மனம் நேரத்தைக் கடத்துவதற்காக வீட்டை நோக்கிப்பறந்தது.

ராதாவின் குடும்பம் பணம் படைத்தது என்று கூறமுடியாது. ஆனால் வறுமை அவளை என்றுமே பாதித்ததில்லை. பெற்றோரற்ற ராதாவையும் அவள் தங்கை உஷாவையும் அண்ணன் ரகு தான் ஒரு சாதாரண கிளார்க் தொழிலில் இருந்தபடி பிழைக்க வைக்கிறான் ரகு முற்கோபக்காரன். ஆனால் தங்கைகளிடம் உயிரையே வைத்திருப்பவன். குடிப்பழக்கம் அவனிடம் தஞ்சமாயிருந்ததால் அவன் தங்கைகளின் எதிர்கால வாழ்வை சிறிதும் எண்ணிப்பார்க்கவில்லை இதனால் இருபத்தியொரு வயதையடைந்துள்ள ராதா தனக்குத் தகுந்த கணவனைத் தானே நிர்ணயித்தாள்.

நரேனின் வருகை நல்லூர் மின்சாரவசதியைப் படியேற்றுவதாகக் அமைந்தது. மின்தொழிலாளியாக வந்தவன் ராதாவிடம் மனதைப் பறிகொடுத்தான். அண்ணனின் குணமறிந்தும் ராதா தன் காதலை உறுதிப்படுத்தினாளேயன்றிப் பிரிவை ஏற்பதாகவில்லை. அதனால் நரேனுடன் சென்றுவாழ முடிவு செய்தே இன்று அவள் இங்கு மூட்டை முடிச்சுடன் வந்திருந்தாள்.

''நானே தீர்மானிச்ச இந்த வாழக்கையைப் பற்றி, இனி யாரும் கவலைப்படலாம். ஏற்றுக் கொள்ளலாம். பெண்களுக்கு அழகிருக்கலாம்,பணமிருக்கலாம், குணமிருக்கலாம், ஆனுல் அவள் வாழ்வு மலர வேண்டுமெனில் நெஞ்சம் நிறைந்த கணவன் தேவை. எனக்கு, நானே தேர்ந் தெடுத்த நரேன் நிச்சயம் என் னைக் கைவிட மாட்டான். அது எனக்குத் தெரியும். ஆனுல் ஊரு லகத்துக்குத் தெரியாது. என் செயலால எத்தனையோ பேருக்கு மனக்கஷ்டம் ஏற்படலாம். அது காலப்போக்கில் சரியாயிடும். ஆனு, இந்த ஊரில எனக்குக் கிடைக்கப் போகும் பட்டந்தான் மறையாத வடுவாக உருவாகப் போகுது. அதனுலென்ன? ஊருக்கு, என் கல்யாணத்தை நடத்தித் தர முடியலை வாயால் கொட்டுற வார்த்தைகளை நெஞ் சில கூத்தூசியாக குத்தத்தான் முடியுது. இரு உள்ளங்கள் மத் தியில் வளரும் அன்பை ஆதரிக்க முடியலை. ஆனு அவ்வுள்ளங்க ளின் இணைப்பில் இடைவெளிகளை உருவாக்கப் பசப்பு வார்த்தை களைச் சொல்லி, ஒவ்வொரு மன சையும் குழப்பத்தான் முடியுது. அவங்கவங்க வாழ்க்கையில நடக் கிற ஒவ்வொரு சம்பவங்களையும் திரை போட்டு மறைச்சிடுறுங்க. ஆனு மற்றவங்க வாழ்க்கையை அம்பலப்படுத்துறுங்க. இதனுல யாருக்குத்தான் நன்மை?

''எண்ண மூட்டத்தைக் கலைத்த படி, முருகன் வள்ளி, தெய்வானை சகிதம் உலாவர. பக்தர்கள் ''அரோகரா'' கோஷமிட்டபடி பின்தொடர்ந்தனர்.

''நானும் நரேனும், இணை யப் போகின்ற வாழ்க்கை பசு மையா, செழிப்பா உருவாக ணும் முருகா!'' என்று மனமு ருகி நின்ருள் ராதா. தாவணி உடுத்தி, மலர்ச்சரங்கள் கூந்த லில் புரள, ஒரு இளம் பெண்கள் கூட்டம், சுவாமியைத் தரிசிக்க வந்தது. அதைக்கண்ட ராதா வுக்குத் தங்கையின் ஞாபகம் வர கண்ணீர் இமைகளைச் சுட்டது.

''உஷா! நான் போறே னம்மா. என் செயலைக் கேட்டுக் கொதிப்படையும் அண்ணனை நீ தான் சமாதானப் படுத்தணும். ஒரு பெண்ணின்கனவுகளைப்புரிஞ் சுக்கமுடியாதஒரு ஆண்மகன் தா ன் எங்கண்ணன்.என்னுலே, என் செலால அதை அண்ணு புரிஞ் சிட்டார்னு உன்வாழ்வு விடிஞ்சி டும். நான்தான் அவசரப்பட்டுட் டேன். என் மனம் நிறைஞ்சவ ரோடதான் வாழப்போகின்றேன் அதனுல நீ என்னைப்பத்திக் கவ லைப்பட்டுக் கொண்டிராதே. அண்ணுவின் குணம் தெரிஞ்சும் ஆசைகளை அடக்காது, துணிவா கப் புறப்பட்டுட்டேன். இனி இம்மியளவு கூட, திரும்பறதற்கு மனசு இடம் தராது. அண்ணன் கொதிப்பை அடக்கிற குளிர்நீரா நீ மாறணும். வேதனைகளையும் சுமைகளையும் உன் தலையில் ஏத் திட்டு போறேனம்மா உன் அக்கா; தயவுசெய்து என்னை மன்னிச்சிடம்மா'' குமுறிக்குமுறி அழுதாள் ராதா. கன்னங்களும்

கண்களும் சிவக்க அழுதபடி அன்றொரு நாள் தனது தோழி சென்னது ஞாபகத்துக்கு வந்தது.

''ராதா! என் அக்கா தன் ஆசைகளை மறுக்காது எவனே ஒருத்தனேடை ஓடிட்டாடி. வறுமையின் பிடியில் சிக்கித் தவிக்கிற எங்களை ஒருகணம் நினைச்சுப் பார்த்தாளா? அவளுக்குக்கீழே இன்னும் மூன்று தங்கச்சிகளைப் பெத்திட்டுக் காலும் கையும் ஓடாகப் படுத்திருக்காளே எங்கம்மா. அவ நிலைமையை நினைச்சுப் பார்த்தாளா? கல்யாண வயசில மூன்று குமர்களை வச்சிருந்த எங்கம்மாவுக்கு ஒரு சுமை குறைஞ்ச மாதிரித்தான். ஆனு... ஆனு... என் வாழ்க்கை என் தங்கச்சிங்க வாழ்க்கை எல்லாமே மண்ணுயிடுச்சே'' மடைதிறந்த கண்ணீர், வெள்ளமாக அழுதாள் தோழி. ''ஏன் மங்கா. போயிட்டான்னு எப்படி உங்க வாழ்க்கை பாதிக்கும்? எனக் கொண்ணும் புரியலையே என்று ராதாகேட்டபோதுஅவளதுபதில் அவளை திக்குமுக்காட வைத்து விட்டது. ''ராதா! இந்த ஊரில அவளுக்கு 'ஓடுகாலி' என்கிற பட்டம் நிரந்தரமாயிடுச்சு. அதனுல நம்மைத் தேடிவரும் ஒரு சில வரன்களும் பெண்பாரக்கும் நிலைவரை வந்தபின்பு 'ஊர்மக்கள் பட்டத்திற்கு உரியவளின் தங்கைக்கு அவள் குணம் சிறிதாவது இருக்குமே. இவளவையளை நம்பக்கூடாது. கட்டின புருஷனுக்குக் கண்ணகி மாதிரி நடிப்பாளையள். என்று வாய்க்கு வந்தபடி பேசிட்டுப் போகிருர்கள் பாரு ராதா! அக்கா நம்ம நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தாளா?'' என்று விம்மிய வாறு ராதா மடியிலே சரிந்தாள். அன்று நடந்த அந்த சம்பவம் இன்று ராதாவை நடுங்கச் செய்தது: தலை சுற்றியது; ஒருவாறு தன்னை ஆசுவாசப் படுத்தியபடி மரத்தில் சாய்ந்து நின்றாள்.

''என் தங்கச்சிக்கு இப்படி ஒரு நிலை வரக்கூடாது. என்னுல அவளுக்கு அண்ணன் ஒரு வாழ்வை அமைப்பான்னு நெனச்சுத்தான் நான் புறப்படத் துணிந்தேன். ஆனு என்னுல உஷா வாழ்வு பாதிக்கக்கூடாது. நான் 'ஓடுகாலி'ன்னு என் தங்கச்சியும் மங்கா மாதிரி யார்கிட்டேயும் சொல்லி அழுவா. வேணும் உஷா. நான் நரேன் கிட்ட சொல்லிட்டு வந்துடறேம்மா. தெய்வம்மாதிரி மங்கா நினைவு வந்திச்சு. இல்லேன்னு உன் வாழ்வு பாழாகியிருக்குமே ''முடிவுக்கு வந்தவளாக எழுந்த ராதாவின் கைக்கடியாரம் 6.20 என்றது இருள் சூழ ஆரம்பித்த அவ்வேளையில் உலா சென்ற முருகன் கோயிலுள்ளே பக்தர்கள் புடைசூழ திரும்பிச் சென்ருன்.

''ராதா! இதோ வந்திட்டேன். புறப்படலாமா?'' வியர்வைத் துளிகள் முகத்தில் படர வினுவினுன் நரேன். ராதா நரேனின் அன்பை உதறமுடியாது. திக்குமுக்காடினுள். ''ஏன் ராதா கோபமா? ஓ 5 நிமிட தாமத

மென்றுதானே. I am sorry ஆமா, பஸ்ஸிற்கு நேரமாச்சே. புறப்படு ராதா. அவசரப்படுத்தினான் நரேன்.

''நரேன்'' எனக் கண்கலங்கினாள் ராதா. ''உன் அன்பு எனக்குப் புரியுது நரேன். உன் காதல் மனசு எனக்குத் தெரியுது நரேன். என்னால உன்னை வெறுக்கவோ, பிரியவோ முடியலை. துணிவா இருந்த என் மனசு குழம்பிடுச்சே. என் காதலை, வாழ்வை நான் அமைச்சுடலாம். ஆனா என் தங்கச்சி வாழ்வு பாழாயிடும். நரேன்! நீ ஒரு ஆண் உனக்கு எந்தவித எதிர்ப்பும் இந்த சமுதாயத்தில் இருக்காது. ஆனால் பெண்ணாகப் பிறக்கிற ஒவ்வொருத்தியையும் இந்த சமுதாயம் தன் வாயில போடக் காத்திருக்குது, என்னால என் தங்கச்சி வாழ்வு பாழாயிடக் கூடாது. நீ ஆண். உனக்குத் தலைநீட்ட எத்தனையோ பெண்ணுங்க வருவாங்க. நான் உன் கூட வந்திட்டேன்னா, என் தங்கச்சி தலைநீட்டினாலும் தாலி கட்ட யாரும் வரமாட்டாங்க. என்னை மன்னிச்சிடு நரேன். நான் உன்னைக் காதலிச்சது உண்மைதான் அது தூய்மையான காதல்தான் அதில் எந்தவித சந்தேகமும் இல்லை நரேன். நான் இனி வாழப்போகின்ற வாழ்க்கை உன்னை நெனச்சபடி வாழும் ஒரு தலை வாழ்க்கை தான்'' கண்கலங்கினாள்.

''அண்ணன் ரகு புத்தி,, திசை திரும்பும் வரை நீ கொஞ்சம் பொறுமையாயிரு. அண்ணன் பெண்களைப்பத்தி நினைக்கிறதில்லை. அவங்க கனவுகள் ஏக்கங்களைப் பத்தி அவனுக்கு எதுவும் தெரியாது. உண்ண உணவு, உடுக்க உடை, மானம் கௌரவம் இருந்தால் போதும் என்பது அவனது நினைப்பு நரேன் இருட்டிடுச்சு. என்னை மன்னிச்சுடு. நான் உனக்காக எப்போதும் காத்திருப்பேன். அப்படி நான் உனக்குக் கிடைக்காவிட்டால் நீ வேறொருத்தியைக் கல்யாணம் செய்து சந்தோசமாய் வாழ்...'' தொடர முயன்ற ராதாவை நிறுத்தினான் நரேன். 'ஸ்டாப் இட். ராதா. எனக் உன் நிலைமை புரியுது. மேலும் சொல்ல வேணும். நான் கூட உன்னைத்தான் திருமணம் செய்கிறதா இருக்கேன். இருக்கிறேன் இருப்பேன். நீ போயிட்டு வா என்று ஆதரவுடன் சூட்கேசை எடுத்து அவளிடம் கொடுத்தான்

அவள் புறப்பட்டுப் போக அவன் கண்களில் திரண்ட நீர்த்திரையில் அவளுருவம் மங்கலாகத் தெரிந்தது.

(யாவும் கற்பனை)

# மனம் விமர்சிக்கப்படுகிறது

ஜீவனதாஸ் பெறுண்டோ
யாழ் பல்கலைக்கழகம்

மனிதன் ஒரு சமூகப்பிராணி என்று கூறிவிட்டுச் சென்றுன் ஒரு ஞானி. பலமனிதர்கள் சேர்ந்ததுதான் ஒரு சமூகம். ஆகவே தனிமனிதனுக்கு என்னென்ன குறைகள் உண்டோ அந்த சமூகத்திற்கும் உண்டு. அதே சமயத்தில் ஒருவனை சிறந்த மனிதனுக உருவாக்கும் கடமையும் சமூகத்திற்கு உண்டு. இங்கு தனிமனிதனதும் சமூகத்தினதும் வளர்ச்சியானது அவர்களது செயற்பாடுகளில் அல்லது நடவடிக்கைகளில் இருந்தே கணிக்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளுக்கு அல்லது செயற்பாடுகளுக்கு மையமாக அல்லது காரணமாக இருப்பது அவனது மனமேயாகும். ஆகவே ''மனம் என்பது சிருஷ்டிகளிலே ஆபத்தான ஓர் அம்சம்'' என்று ரவீந்திர நாததாகூர் கூறிய கருத்து சிந்திக்க கூடியதாக இருக்கிறது.

மனித மனம் விமர்சிக்கப்படுகின்றது என்பதை நோக்கு முன்பு ஒரு விமர்சனம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதையும் அது எந்த வழியில் மனிதனுக்கு உதவி செய்யமுடியும் என்பதனையும் கவனித்தல் வேண்டும். எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும் விமர்சனமானது நிதர்சனமாகவும் நியாயமானதாகவும் தூய்மை நிலையை கொண்டுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். (அந்த வகையில் மனித மனதை மனிதன் மனிதனுல்தான் விமர்சனம் செய்ய முடிகின்றது.) விமர்சனத்தின் போது குறைநிறைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு. விமர்சனத்தின ஆரம்பப்படியாக மனிதன் தன்னைத்தானே விமர்சனத்திற்கு உள்படுத்திக் கொள்ளும் தன்மையை பெற்றிருத்தல் வேண்டும். தன்னைத்தானே (மனிதனையும் மனச்சாட்சியினையும்) விமர்சிக்கும் போது நிறைகள் மாத்திரமல்ல எமது குறைகளும் (பெலவீனங்கள்) எமக்கு தெளிவு படுத்தப்படுகின்றது. ஆனுல் விமர்சனத்தின் போது அறியப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். மேலும் தன்னைத்தானே விமர்சனம் செய்வது மாத்திர மல்லாமல் மற்றவர்களுக்கும் தன்னை விமர்சனம் செய்யும் அனுதியையும் அளித்தல் வேண்டும்ம இந்த நிலை காணப்படின் தனி மனிதர்களின் குறைகள் விமர்சிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுவதுடன் சமூகத்தின் குறைகளும் நிவர்த்தி செய்யப்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

## எல்லோரும் நல்லவரே:

இவ்வாறு மனித மனம் சூழ்நிலை, குடும்பம் என்பவற்றைக்கொண்டு மனிதனைப் பார்க்கும்போது, எல்லா மனிதர்களுமே நல்லவர்களாக இருக்கிறார்கள். ''மனிதன் இயற்கையாகவே நல்லவன். ஆனால் நாடி நரம்புகளுக்குள்ளே அடங்கி வாழ்கின்றான். ஆனால் நாடி நரம்புகளுக்கு அடிமையாக வாழ்கின்றான். மனம் பண்பட்ட அறநெறியை நாடுகின்றது. ஆனால் நாடி நரம்புகள் பழக்க வழக்கங்களையே நாடுகின்றது. மனம் உண்மையையும் நன்மையையும் தேடுகின்றது. ஆனால் நாடி நரம்புகள் உண்மையையும் களிப்பையும் தேடுகின்றன.'' என்று டாக்டர் மு. வரதராசன் சித்தரிக்கின்றார். நாடி நரம்புகள் பழக்கவழக்கங்களை நாடினாலும் அதுகூட அவன் குடும்ப சூழ்நிலைகளைக் (Heredity) கொண்டே அமைக்கப்படுகின்றது. மேலும் இந்த வழியில் ஒருவனைக் கெட்டவன் என்று கூறினாலும் அல்லது பலர் ஒதுக்கினாலும் அவனுக்கும் நண்பர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஏனெனில் எந்த ஒரு மனிதனும் உலகத்தில உள்ள எல்லா மக்களாலும் ஒதுக்கப்படவில்லை. ஏதோ ஒருசில விடயங்களில் மனிதர்கள் மாறுபடுவது போல் தோன்றினாலும் அடிப்படையில் எல்லோரும் சமமாகவே இருக்கிறார்கள். இங்கு ஒருவனைப்பற்றிய ஒருவனது எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப் படும் போதுதான் மனிதனைப்பற்றிய குற்றச் சாட்டு எழுகின்றது. மேலும் எதிர்பார்ப்பு என்பது மனம், குடும்பம், சூழ்நிலை என்பவற்றுடன் நோக்கப்படும்போது அங்கு சுமூகமான நிலையே காணப்படும்.

## மனமும் மனிதனின் தரமும்:

மேலும் இந்த விமர்சனத்தின் மத்தியில் மனிதனது தரம் எவ்வாறு கணிக்கப்பட வேண்டும் என்பது பிரச்சினைக்குரிய விடயமாகவே இருக்கிறது. உண்மையில் மனிதனது தரம் என்பது அவனது அந்தஸ்து, வசிக்கிற சூழ்நிலை, பிறந்த குலம் என்பவற்றால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக அது மனிதனை மனிதனாக புரிந்து கொள்ளும் தன்மையினால் தான் தீர்மானிக்கப்படுகின்றது அதாவது ஒருவனது மனநோக்கு அதனூடாக அவனது வாழ்க்கை முறை என்பவற்றைக் கொண்டே கணிக்கப்படல் வேண்டும். இங்கு மனிதனது ஆத்மார்த்தமான உள்ப் போக்கு நிலை எதிர்பார்க்கப்படுகின்றது. இங்கு ஜெயகாந்தன் கூறிய மனிதனை நேசிக்காதவன் எதைப்பயின்றும் எதனையும் அறிந்துகொள்ள முடியாது'' என்ற விமர்சன கண்ணோட்டத்தை சுட்டிக் காட்டக்கூடியதாக உள்ளது. இந்த ரீதியில் மனித குணங்களை ஆராய்பவனே மனித உணர்வுகளை மதிப்பவனே மனிதசாதனையை நம்புகிறவனாவான். அத்துடன் மனித குறைபாடுகளைக் கூட அவனாலேயே அறியமுடிகின்றது.

## மனமும் தீர்மானமும்:

மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு மனம் உண்டு என்பதை உளவியல் ஏற்றுக் கொள்கிறது. அந்த ரீதியில் ஒவ்வொருவனுக்கும் இடையில் உள்ள உளவியல் நடவடிக்கை வறுபட்டதாகவே இருக்கும். மனதினில் ஏற்படும் மாற்றம் தான் பெரும்பாலும் உடலை பாதிக்கின்றது என்பது பல அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்ட ஒன்றாகும். மேலும் இந்த நிலையில் தான் எடுக்கும் முடிவு தான் சரியான முடிவு என்று வாதிட முடியுமா? முடியாது. அப்படியாயின் என்ன செய்ய முடியும்? இதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சிறு உவமையைக் கூறுவதன் மூலம் விடை அளிக்க முயற்பிக்கின்றார். அதாவது "நெல்லைக்குத்தும் போது அவ்வப் போது குத்துவதை நிறுத்திவிட்டு உமி போயிற்றா என்று பார்ப்பது பால் மனத்தினையும் இடையிடையே சோதித்தல் வேண்டும்" என்று கூறுகின்றார். ஆகவே மனிதன் தன் இறுதித் தீர்மானத்தை அடைய முன்பு தன் மனதில் கொண்டுள்ள தீர்மானத்தை இடையிடையே சோதித்து சரி பார்த்தல் வேண்டும். மேற்கூறப் பட்ட நிலைப்பாட்டின் ஊடாக ஒரு தீர்மானத்தை எடுக்கும் போது 'மனம்' அலசி ஆராயப் பட்டு, விட்டுக்கொடுக்கும் தன்மையும் குறைநிறைகளை ஏற்றுக் கொள்ளும் தன்மையும் அதற்கும் கிடைக்க வாய்ப்புண்டு. விட்டுக் கொடுக்கும் தன்மை வாழ்க்கை அவசியம்தேவை. ஏனெனில் மனிதர்கள் அடிப்படையில் ஒன்றாக காணப்பட்டாலும் மனம் என்ற ரீதியில் இவர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனி உலகத்தினைச் சார்ந்தவர்களே.

## மனமும் தூய்மையும்:

மனதினை மனிதன் எப்போதும் தூய்மையுடன் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் மனம் தூய்மை குன்றும்போது வாழ்க்கை விரக்தியாகவும் சூனியமாகவும் இருக்கும். வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டால் உடல் பாதிக்கப்பட்டு நோயுறும் நிலை ஏற்படும். மேலும் ஒருவன் உங்களைப் பார்த்து 'நீ இப்போது என்ன நினைத்துக்கொண்டு இருக்கிறாய்' என்று கேள்வி கேட்டால் ஒழிவு, மறைவு இன்றி இதைத் தான் நினைத்துக்கொண்டு இருக்கிறேன்' என்று சொல்லக்கூடிய அளவுக்கு தூய்மை நிலையை மனம் பெற்றிருத்தல் வேண்டும். அறிஞர் அண்ணா தூய்மையற்ற அல்லது பாழ்பட்ட மனிதனை ஒரு பாலைவனத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகின்றார். அவர் 'பாலைவனத்தில் பயிரேது? மலர் ஏது? அது போல் பாழ்பட்ட மனதிலே சிந்தனைக்கு இடமேது? உரிமை உணர்ச்சியேது? எதுவும் முடியாது" என்று அழகாக கூறுகின்றார். மேலும் மனம் தூய்மை குன்றும் போது சிந்தனையின் வேகம் குறைக்கப்பட்டு அதன் மூலம் உற்சாகமும் குன்றிவிடும்

## மனமும் அழகும்:

மேலும் புதிய உளவியல் பிரதி வாதங்கள்படி அழகு அழகின்மை என்பது எமது கண்ணோட்டத்தில் தான் தங்கியுள்ளது. இவ்வாறே நன்மை, தீமை என்பதும் முடிவு செய்யப்படுகின்றது. அதாவது எந்த ஒரு பொருளையும் அது அழகு என்று நினைத்துப்பார்த்தால் அழகானதாகவும் அழகில்லை என்று நினைத்துப் பார்த்தால் அழகற்றதாகவும் இருக்கும் என்று கூறப்படுகின்றது. இந்த ஒரு கருத்தினையே கௌதமபுத்தர் இவ்வாறு எடுத்துக் கூற முயற்சிக்கின்றார்.

"Our thoughts make things beautiful,
Our thoughts make things ugly,
The whole world is in our mind."

ஆகவே புத்தரின் கண்ணோட்டத்தின்படி அழகல்லாதவை எனக் கூறப்படுவனவற்றை நாம் அழகானது என்ற மனநிலையுடன் நோக்கினால் அது அழகுள்ளதாக இருக்கும் என்று ஏற்றுக்கொள்ளப் படுகின்றது. இதற்கு ஏற்றாற்போலவே இந்தியாவின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுபாஸ் சந்திரபோஸ் கூறிய "நம்முடைய மனப்பான்மையே துன்பத்தை இன்பமாகவும் இன்பத்தை துன்பமாகவும் எடுத்துக் கொள்கிறது" என்ற கருத்தினையும் இங்கு குறிப்பிடக்கூடியதாக உள்ளது.

## மனமும் தியானமும்:

முனிவர்களது அல்லது துறவிகளது வாழ்க்கையை உற்று நோக்கும்போது அவர் நீண்ட நாட்கள் சாப்பிடாமலும் மற்றவர்களுடன் கதைக்காமலும் தியானத்தில் இருக்கிறார்கள். இந்த நீண்ட தவநிலைக்கு காரணம் மனித மனம் என்றே கூற வேண்டும். சாதாரண மனிதர்களால் இதனைச் செய்ய முடியாது. சாதாரண மனிதன் நரம்புகளின் உணர்ச்சிக்கு அடிமையாக்கப் பட்டு இருப்பதனால் அவனால் தன்னை அடக்கிக்கொள்ள முடியாது இருக்கின்றது. "உடம்புக்கு மனிதரின் மேல் உள்ள செல்வாக்கு பொதுவாக அதிகம். அது குறைய வேண்டும், மனதிற்கு உடம்பின் மேல் உள்ள செல்வாக்கு மிகவேண்டும்" என்ற டாக்டர் மு. வரதராசனின் கருத்தை உற்று நோக்கும்போது முனிவர்களது வாழ்க்கையின் இரகசியம் புரியவரும். அவர் கூறியது போலவே முனிவர்களும் தங்கள் மனதினையும் சிந்தனையையும் கட்டுப்படுத்தி அதன்மூலம் பெறப்பட்ட சக்தியை கொண்டு நரம்புகளினால் ஏற்படும் வேட்கையை கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். இந்த நிலையில் அவர்களால் தங்கள் மனச்சக்தியினைக் கொண்டு நீண்டகாலத்திற்கு சாப்பிடாமல் மௌனமாக தியான நிலையில் இருக்க முடிகின்றது.

## மனமும் இலட்சியமும்:

ஒரு மனிதனால் எல்லோரும் திருப்திப்படும் விதமாக வாழ

முடியாது. அப்படி வாழ முயற்சிப்பவன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள முயற்சிக்கிறான். ஆகவே தனக்கென்று ஒரு திடமான கொள்கையை (அதுவும் சமுதாய நலன் கருதி எடுக்கப்படும் கொள்கையாய் இருந்தால் நல்லது.) வகுத்து அதனைத் தன் வாழ்நாளில் கடைப்பிடிக்கமுயற்சிப்பவன் என்றுமே மகிழ்ச்சியாக இருப்பான். இப்படியானவர்களுக்கு சமுதாயம் பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி அவர்களைக் கொலைக்களத்திற்கும் அனுப்பலாம். இந்த நேரத்தில்தான் மனத்தூய்மையும் தைரியமும் வாழ்க்கைக்கு அவசியமாகின்றது இந்த இலட்சிய வாழ்வில் இவன் இறந்தாலும் சமூகத்தில் இருந்து ஒரு நிலைக்கு உயர்த்தப்பட்டு தானும் சமூகத்தில் சங்கமமாகி சமூகத்தினை தன்வயப்படுத்தும் மனிதனாக மாறுகின்றான். இப்படியாக இலட்சிய தீர்மானம் எடுத்தவர்கள் அற்ப ஆசைகளுக்கும் அற்ப விஷயங்களுக்கும் இடமளிக்காது மனதினை உயர்ந்த நிலையில் வைத்துக்கொள்பவர்கள் இப்படியாக சமுதாயத்திற்கு தனது வாழ்க்கையை அர்ப்பணிக்கும் போதுதான்,

(1) காந்திக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு

(2) கெனடிக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு

(2) இந்திராவுக்கு அளிக்கப்பட்ட துப்பாக்கி வேட்டு;

போன்ற வேட்டுக்களை பெற வேண்டியிருக்கும். இந்த நிலையில் தான் மனித வாழ்க்கை என்பது பூரணப்படுத்தப் படுகின்றது.


விரைவில் வெளிவருகிறது

"மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும்"

'நான்' இல் பிரசுரமான சிறந்த கட்டுரைகளில் சிலவற்றை உள்ளடக்கி நூல் வடிவில் சிறப்பாக வெளிவருகிறது. குறிப்பிட்ட பிரதிகள் அச்சேற இருப்பதால் உங்கள் பிரதிக்கு முந்துங்கள்.

# மனமருத்துவ முறை
## (PSYCHOTHERAPY)

அருட்பணி. S. டேமியன் OMI. M. A.
(உளவளத்துணையாளர்)

அன்றாட வாழ்க்கையிலே மனிதன் பலவிதமான நோய்களி னாலே பீடிக்கப்பட்டு அவதியுறுகின்றான். மனிதனை பீடிக்கும் நோய் களை நாம் இரண்டுவகையாகப் பிரிக்கலாம் ஒன்று உடல் சார்ந்த நோய்கள், மற்றயைது மனம்சார்ந்த நோய்கள். உடல்நோயிலும் பார்க்க மனநோயானது மனிதனை முழுமனிதனாக வாழவிடாது, வளரவிடாது, அவன் வளர்ச்சியை வரட்சியடையச் செய்து விடு கிறது. உளஇயல் பிரச்சினைகள் நம் எல்லோருக்கும் உண்டு. சில நேரங்களில் நாம் கவலைப்படுகின்றோம், ஏக்கமடைகின்றோம். குற் றப்பழி உணர்வு மனதை குத்திக்கொண்டிருக்கக் காணுகின்றோம் கோப உணர்வுக்கு அடிமையாவதைப் பார்க்கிறோம். இவை உணர்சசிகளில் ஏற்படும் மாறுபாடாகும். தூக்கமின்மை, உண வில் சீர் இன்மை, மலச்சிக்கல், காலத்தவறிய மாதவிடாய், உடல் எடைகுறைவு, பலவீனம். நெஞ்சுவலி, வயிற்றுவலி, தலைவலி, பாலுணர்வில் பற்றுக்குறைவு, போன்றவை உடலில் ஏற்படும் மாறுபாடுகளாகும். தன்னைப்பற்றிய தப்பெண்ணம், உலகைப் பற்றிய தப்பெண்ணம், தன்னையே குறைகூறுதல். முடிவெடுக்க இயலாமை, போலி நம்பிக்கை, உதவியற்றநிலை போன்றவை சிந் தனையில் ஏற்படும் மாறுபாடுகளாகும். அழுகை, ஒதுங்கியிருத்தல் கண்ணோட்டத்தில் மாறுபாடு, மனமுதிர்ச்சியில்லா செயல்கள் கலக்கம், குழப்பம் இவை செயலில் ஏற்படும் மாறுபாடுகளாகும் மேலே கூறப்பட்ட பிரச்சினைகள் அளவுக்கு மீறும்போது, தாங் கொணாதவையாக மாறும்போது காலகட்டத்தில் மனநோயாக மாறுகிறது. அத்தகைய சந்தர்ப்பத்தில் நாம் ஒரு மனமருத்து வரை நாடுவது அவசியமாகும்.

### யார் இந்த மனமருத்துவர் (Psychotherapist)?

மனமருத்துவ முறையைக் கற்று அத்துறையில் பயிற்சிபெற்றுத் சிறந்த தேர்ச்சியடைந்தவரே மனமருத்துவராவார். அவர் மன வியாதிகளை ஆராய்ந்து அவற்றை மாற்றுவதற்கு குறிப்பாக உள

யியல் நுட்பங்களைக் கையாண்டு அதன்மூலம் சிகிச்சை அளிக்கிறார். சாதாரணமாக இவர் மருந்து கொடுப்பதில்லை. அப்படியாயின் மருத்துவத்துறையிலும் இவர் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நரம்புத்தளர்ச்சி நோயிலிருந்து (Neursosis) மனநோய் (Pscyhosis) வரை ஈறுகவுள்ள நோய்களுக்கு இவர் மன மருத்துவமுறைகளைக் கையாண்டு சிகிச்சை அளிக்கிறார்,

## *மனமருத்துவ சிகிச்சை* (PSYCHOTHERAPY)

மனமருத்துவ சிகிச்சை என்றால் ஆளுமை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கும், தன்னுணர்வற்ற போராட்டங்களுக்கும் அளிக்கப்படும் கிகிச்சை முறையர்கும். சுருங்கச் சொல்லின் மனச்சோர்விலிருந்து மனவியாதிவரை உள்ள நோய்களுக்கு உளவியல் முறைகளைக் கையாண்டு அளிக்கப்படும் சிகிச்சையாகும். இச்சிகிச்சையில் முக்கிய இடம்வகிப்பது நோயாளிக்கும் மருத்துவருக்கும் இடையில் நடைபெறும் பேச்சுப்பரிமாற்றம் அல்லது உரையாடலாகும். இந்த உரையாடலின் மூலமாக மனமருத்துவர் நோயாளி உபயோகிக்கும் சொற்கள், உணர்வுகள், நடத்தைகள், எண்ணல்கள் இவற்றைக் கூர்ந்து கவனித்து, ஆராய்ந்து இதன் வழியாக நோயாளின் ஆழ்மனத்தில் புதைந்து கிடக்கும் மனப்போராட்டங்களை அறிந்து, அவற்றிற்குரிய காரணங்களை அறிந்து நோயாளியின் ஒத்துழைப்போடு தக்க சிகிச்சை அளிக்கிறார்.

அண்மையில் அமெரிக்காவில் புள்ளிவிபரப்படி நூற்றுநாற்பதுக்கும் மேற்பட்ட மனமருத்துவ முறைகள் இருப்பதாக கணிக்கப்பட்டிருக்கிறது. என்றாலும் அறுபத்தாறு மனமருத்துவ சிகிச்சை முறைகளே மனமருத்துவ நிபுணர்களாலும் உளவளத் துணையாளர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அநேகமாக எல்லா மனமருத்துவ முறைகளும் பின்வருவனவற்றையே மையமாகக்கொண்டு மனநோயாளருக்கு சிகிச்சை அளிக்கின்றன.

❋ திகிச்சை பெறவரும் நோயாளியின் பிரச்சனைகளையும் நடத்தைகளையும் ஆராய்ந்து அப்பிரச்சனைகளை ஒரு புதிய கண்ணோட்டத்தில் நோயாளி காண உதவுதல்.

❋ சிகிச்சை பெறவருபவரின் தன்னொருமைப்பாட்டைப்பற்றி நன் மதிப்புக் கொள்ளச் செய்தல்.

❊ மனதில் எழும் முரண்பாட்டுப் போராட்டங்களை விளக்கி அவற்றிற்கு தீர்வுகாண முனைதல்.

❊ விரும்பத்தகாத பழக்கங்களை மாற்றச் செய்தல்.

❊ உறவுகாரணமாக ஏற்பட்ட பாதிப்புக்களை உணர்ந்து மீண்டும் அந்த உறவை ஆழப்படுத்துதல்.

❊ தன்னைப்பற்றியும் உலகைப்பற்றியும் கொண்டுள்ள தவறான கண்ணோட்டத்தில் இருந்து விடுபடச்செய்தல்.

❊ அர்த்தமுள்ளதும் நிறைதரும் வாழ்க்கையை வாழ அடிகோலுதல்.

## மனமருத்துவருக்கு ஏற்புடைய திறன்கள்

மனநோயாளி, மனமருத்துவரின் திறமை, நம்பிக்கை நல் மனம் ஆகியவற்றை மனதில் கொண்டே சிகிச்சைபெற வருகிறான். ஏற்கனவே நோயாளி மனதில் வேதனையுற்று, மனக்கீறல்களோடு, மனச்சுமையோடு மனமருத்துவரை நாடி வருகின்றார் அப்படி வருபவரின் சுமைகளை, கீறல்களை மேலும் பாரமாக்கி விடாமல் பாதுகாத்துக் கொள்வது மனமருத்துவருக்குரிய முக்கிய கடமையாகும். அத்தோடு துணை நாடி வருபவரை இன்முகத்தோடு ஏற்று அவரை எளிதில் அணுகக்கூடிய பண்பும், அவரை ஏற்று புரிந்துகொள்ளக்கூடிய திறனும் தேவை. முதலில் உண்மைத் தொடர்பு— உணவு நிலையே மனமருத்துவ முறைக்கு ஆரம்பக்கட்டமாகும். இங்கே மருத்துவர் பிரச்சனைகளால் 'பாதிக்கப்பட்டவரை முழுமையாக அறிந்து கொள்கிறார். அவனோடு தன் உள்ளத்து உணர்வுகளை பகிர்ந்து கொள்கிறார். நோயாளியைப் புரிந்துகொண்டு, அவர் சொல்வதைக்கேட்டு அவரது உடலசைவுகளையும், பேசும் மொழியையும் கூர்ந்து கவனிக்க வேண்டும். அடுத்ததாக நோயாளி சொல்பவற்றையெல்லாம் காது கொடுத்துக் கேட்க வேண்டும். சிகிச்சை அளிப்பவர் திறந்த மனம் கொண்டவராக இருக்க வேண்டும். மற்றவரை மதித்து அவர் சொல்வதைக் கேட்கவேண்டும். வருபவரை எந்தவிதத்திலும் எடைபோட்டுத் தீர்ப்பிடுதல் கூடாது. வருபவரை அவரது குண நலங்களோடும் குணபாடுகளோடும் அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ள மனப்பக்குவம் அடைந்தவராக இருத்தல் வேண்டும்.

**Fr. S. Damaian O. M. I, M.A**
(Counsclling Psychologist)

# மௌனங்கள் கலையும்போது...

(யாழ். பாலன்)

ஊர் அடங்கும் வேளையிலும் தான் உறங்காது சிந்தனையில் ஆழ்ந்திருந்தார் அதிபர் ஆறுமுகம். காரணம் வாழ்க்கைச் செலவு வரவை மிஞ்சியதாகவும் மைந்தன் மூர்த்தியின் கல்வியை தொடர, மகள் புவனாவின் எதிர்கால வாழ்க்கை அமைக்க மனைவியின் ஆறுதல் வார்த்தையை தவிர வேறு எதுவும் சேர்த்து வைக்க இல்லை. அதிபர் தன் கல்லூரியின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி பலரது முன்னேற்றத்திற்கு ஏணிப்படியாக இருந்தாரே ஒழிய தன் பிள்ளைகளின் எதிர்காலத்தை இதுவரை அதிகம் சிந்திக்கவில்லை. "ஊரார் பிள்ளைக்கு ஊட்டிவளர்த்தால் தன்பிள்ளை தானே வளரும்; என்று அடிக்கடி கூறுவார். அதுபோலவே மூர்த்தியும் புவனாவும் தங்கள் கல்விச்சிறப்பால் சான்றுபகரும் பண்பும் பரிவும் தந்தைக்கு பெருமை தரும் சொத்து. கட்டுப்பாடும் கடமையும் தந்தையாரிடம் கற்றுக்கொண்ட பாடங்கள். மைந்தன் மூர்த்தி தந்தையின் சிந்தனைகளை உணரக்கூடிய வயது. தனது உயர்தரக் கல்வி பரீட்சையின் முடிவை எதிர்பார்த்திருந்தான். எதிர்காலத் திட்டங்களை நிறைவேற்ற தன்மீது உள்ள பொறுப்புக்களை எண்ணியவனாய் பத்திரிகையில் வேலைதேடும் முயற்சியில் மும்முரமாக ஈடுபட்டான். உள்ளூர் உழைப்பை விட வெளி நாட்டு ஊதியம் தான் இன்று பலர் மனதில் படுவதில் இவன் மனமும் ஊறியது. பத்திரிகையில் வரும் விளம்பரங்களை கண்டு முயற்சித்தான். அவனது முயற்சியின் பயனை உடன் விபரங்களுடன் கொழும்பு வர அழைப்பு வந்தது. நாட்டுநிலை பதட்டமாக இருந்தாலும் வீட்டுநிலை கலக்கமாக இருப்பதனை உணர்ந்து தந்தையின் அனுமதி கேட்டு முடிவு செய்ய காத்திருந்தான். தந்தையிடம் தாயாரை தூது விட்டான்.

> பழிவாங்கல், பிரிவு, வெறி, தாழ்வுமனப் பான்மை, எதிர்பார்ப்பு ஆகிய அம்சங்களைக் கொண்டமைந்த தொடர்கதையே
> **"மௌனங்கள் கலையும்போது..."**
> இதன் ஆரம்பக் கட்டம் இதோ! மீதி உங்கள் கற்பனைகளில் பிறக்கட்டும்.

அதிபர் ஆறுமுகம் வீட்டிலும் நிர்வாகம் நடத்துவது. நேரசூசி படியேகாலையில் தன அறையில் பத்திரிகை புத்தகங்களை புரட்டி தனது சிந்தனையை "நான்" மஞ்சரியில் சஞ்சரிக்க விடும்போது காலைக்காப்பியின் சூட்டுடன், மைந்தனின் கோரிக்கையும் சேர்த்துக் கொடுத்தாள் அன்னை அன்போடு. அதிபர் பல கோணத்தில் கேள்விகளை தொடுத்து ஈற்றில் வெளிநாட்டுமுகவர் ஏமாற்று பேர்வழிகள். பிரயாண வசதிகளில் உள்ள இன்னல் என்றுமே செல்லாத மூர்த்தி முதல்முறை எப்படி கொழும்பு செல்வது. மகனை கூட்டிச்செல்ல அதிபருக்கு கல்லூரி கடமை முக்கியமாக உள்ளதையும் உணர்த்தி கொள்ளை, கொலை, பதட்டநிலைகளை தாண்டிச் செல்லும் துணிவு இருந்தால் செல்லலாம் என அனுமதியும் அளித்தார். அன்று மாலையே புறப்படத் தயாரானான் மூர்த்தி. பிரயாண செலவுக்கு தந்தை பல இடங்கள் சென்று 500 ரூபாவுடன் வந்தார். "மூர்த்தி உனது பிரயாண புகையிரத சீட்டு இதோ செலவுக்கும். தங்கையின் பாடப்புத்தகம் ஒன்றும் கொழும்பில் நீ செல்லும் இடத்தில் உள்ளதால் வாங்கி மறு நாளே திரும்பிவிடு" என 500 ரூபாதாளை மேசையில் வைத்தார் பிரயாணத்தில் பிற்பொக்கட் பேர்வழிகள் அதிகம். அருகில் இருப்பவர்களுடன் அவதானமாகவும் நித்திரை கொள்ளாது, உன் பொருட்களில் கவனமாக இருக்கவும். 500ரூபா கொழும்பில் சென்று மாற்றலாம். வழியில் எதுவும் வேண்டவேண்டாம், ஏமாற்றி விடுவார்கள்." என கூறியபோது தன் பிரயாண முதல் அனுபவத்தை வென்றுவர மனத்திடனுடன் ஆயத்தமானான்.

அன்னையும் புவனாவும் தங்கள் உதவிகளை உணவு பார்சலாகவும் தூங்காது விழித்திருக்க சில சஞ்சிகைகளையும் அப்பாவிடமிருந்து எடுத்து வைத்தார்கள். "அண்ணா எப்படியும் உடன் திரும்பிவிடு. எனது பிறந்ததினம் 14ம் திகதி அதற்குள் வந்துவிடு. உனது பரிசைத்தான் எதிர்பார்த்துள்ளேன்." என குறும்பு செய்தாள் புவனா.

முண்டியடித்து ஏறி ஒரு மூலையில் ஆசனம் கிடைத்ததே ஓர் வெற்றி என எண்ணியவனாய் அருகில் இருப்பவரை ஒரு நோட்டம் பார்த்து, அன்னையிடமும் தங்கையிடமும் கையசைத்து புறப்பட்டான். தந்தையின் அறிவுரையும் அவன்மனதில் அடிக்கடி நினைவூட்ட ஆனையிறவை கடப்பது இதுவே முதல்தடவை. இதுவரை வாழ்க்கை புத்தகஒரு பூச்சியாகவே கட்டுக்கோப்புக்குள் வாழ்ந்தவன். இன்று சிறகடித்து பறக்கும் பறவை போன்று புறப்படும் புது அனுபவம் புகையிரதத்தில் எவரையும் சந்தேகத்துடன் நோக்க வைப்பதில் வியப்பில்லைதானே.

அருகில் பலர் இருந்தும் பலரது சம்பாஷணை நோக்கும் அவனுக்கு அருகில் இருப்பவர் கௌரவமான உடையும் எடுப்பான தோற்றமும் ஓர் உயர் பதவி வகிப்பவர் என்பதை கூறும் அளவுக்கு இருந்தது. ஒருமுறை அவர் புகையிரத சிற்றுண்டிசாலையில் உணவு அருந்தச் செல்லும்போது மூர்த்தியிடம் தன் பொருட்களைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிச் சென்றார். அவனும் தலையசைத்து இருந்து விட்டான். பின்னர் திரும்பி வந்து நன்றி கூறி, நலம், நிலை, சொந்த இடங்களை வினவினர். அளந்து கூறி தன்கதைகளை குறைக்க முயன்றாலும், அவரது தொடர்பு மிகவும் நெருங்கிவர அதிபர் ஆறுமுகத்தின் சேவைதான் காரணமாக இருந்தது. அப்பாவுக்கு தெரிந்தவர் ஆதலால் அவர் அப்பாவின் நலங்களிலும் அவர் சேவையின் பெருமைதனையும், பறைசாற்றும் விதம் மூர்த்திக்கு பெருமை தரும் நினைவாக மலர்ந்தது. அதிபரின் நினைவை மூர்த்தியின் தோற்றத்திலும் அவருடைய பண்பான கதைகளிலும் காண்பதாக பாராட்டி பயணம் தொடர்ந்தது. நல்ல மனங்கள் கலந்த பிரயாண அனுபவம் கோட்டையில் நிற்கும்போது அதிகாலை 5மணியாதலால் உடன் புறப்படத்தயங்கிய மூர்த்தி சற்று நிலையத்தில் தங்கிச் செல்ல எண்ணினன். அந்தப் பெரியவரோ தனது பெயரை எழுதி தன்னையும் தந்தையிடம் நினைவுபடுத்தக்கூறினர். அவரது பெயர் டேவிட் என்று சொன்னால் அதிபர் ஆறுமுகத்திற்கு தெரியுமாம். எனக்கூறி சற்று தன் பையையும் சூட்கேசையும் மூர்த்தியிடம் கொடுத்து அருகில் உள்ள தண்ணீர்குழாய்க்கு சென்றார். மூர்த்தி தனது பொருட்களையும் உடைகளையும் சரிபார்த்து தன்பணத்தை ஒருமுறை பார்த்தான். திகைத்தான் செய்வதறியாது துடித்தான் சிந்தனையின் சிதறல் திகைப்பைக் கொடுத்தது. தன்வசமுள்ள டேவிற்றின் கைப்பையைத் திறந்து பார்த்தான். அவன் பையில் அந்தப்பணம் 500ரூபா இருப்பதனைக் கண்டு உடன் அவனது வருகையை கண்ணோட்டம் விட்டவனாய் தன்பைக்குள் அதனை எடுத்து திணித்து முன்பிருந்தபடியே சரிசெய்கையில் எதிர்ப்புறம் ஒருவரது குரல்கண்டு தன்பதட்டத்தை குறைத்து குரலுக்கு செவிமடுத்தான். ''தம்பி, காலை கண்டி செல்லும் வண்டி எத்தனை மணிக்கு வரும்?'' எனக் கேட்டார். "ஓ! அதுவா? இதுவரை ஒன்றும் செல்லவில்லை. இனிமேல்தான் போலும். தயவு செய்து அதுவரை நிற்பீங்களா? ஓர் உதவி செய்ய முடியுமா?'' என வினவினன். ''என்னப்பா உன் கதை?'' என்று பெரியவர் வினவ, ' என்னுடன் வந்த ஒருவருடைய இப்பொருட்களை தந்து தற்போது தண்ணீர்தாங்கி பக்கம் சென்றுள்ளார். அவர் வரும் வரை நின்றால் நான் செல்லும் பஸ் புறப்பட்டுவிடும். தயவு

செய்து இதனை அவரிடம் கொடுப்பீர்களா?'' என அவசர அவசரமாக அவரிடம் கொடுத்துவிட்டுப் புறப்பட்டான் மூர்த்தி.

தங்கை புவனு அண்ணனின் வரவு ஆனந்தத்தை தரும் எனக்காத்திருந்தாள். அன்னையோ தினம் வரும் செய்திகள் கொலே, கொள்ளே, வழிப்பறி செய்திகள் திகில் தரும் வதந்திகள் இவற்றை தாண்டி மகன் வந்தாலே போதும். இனி எங்கும் செல்ல வேண்டியதில்லே. என இறைவனே துணைக்கு வேண்டி பிரார்த்தனை செய்தவண்ணம் காத்திருந்தாள் தந்தையோ புதிய தொரு விதத்தில் தான் அதிபர் பணியில் தண்டனைகளே எப்படிக் கொடுக்கலாம் என்று சிந்தித்தார். உடன் வரக் கூறினேன் சென்றதும் பதில் வரையவில்லே. தன்பொருட்களே கவனமாக எடுத்துச் செல்லாது, நற்சான்றிதழ்களே விட்டுச் சென்று விட்டுவிட்டானே. எப்படி உருப்படப்போறுன் உன் மகன். என அவரது மேசைமீது இருந்த என்வலப்பை பார்த்து திட்டியவராய் அதனைத் திறந்து பார்த்தார். அவ்வேளே மூர்த்தியும் தங்கைக்கு பிறந்தநாள் பரிசும், அன்னுசிப்பழக்கட்டும் தங்கைக்கு அப்பா கூறிய புத்தகம் ஏனைய பொருட்களுடன் முன் நின்றுன். அன்னேயோ வெளிநாட்டால் வந்த மகனே கண்டதுபோல் தங்கையோ தனது பரிசுப்பொருட்கள் மகிழ்வை தருவது போல், தந்தையோ தான் கொடுத்த 500ரூபா என்வலப்பினுள் அப்படியே இருப்பதனைக்கண்டு பலவாறு சிந்திக்கலானுர். ''மூர்த்தி உனக்கேது பணம் இத்தனையும் வாங்க?'' ''அப்பா, நீங்கள் தந்த பணத்தில் தான் அத்தனையும் வங்கினேன்.'' 'மிகுதிப்பணம் இதோ' என சோதனை மேல் சோதனை. இவற்றை தாண்டி வந்ததே பெரிய சாதனை என அன்னைக்கும் தங்கைக்கும் தன்னைத்தானே புகழ்ந்து மூர்த்தி கூறினுன்.

''மூர்த்தி, பொய்யும்பேசி, களவும் செய்ய எப்போ துணிந்தாய்? இதோ உனக்கு நான் தந்த பணம். இதனை கொண்டே செல்லாது என்ன திமிர், உனக்கு இப்படி கூற? நீ எனது மகன் என்று கூற?'' என வார்த்தைகளேத் தொடர்ந்தார்.

தாயுள்ளம் கண்ணீர் வெள்ளமாய் திகைப்பாய் பார்த்தது. தங்கை புவனு புதிர் புரியாது திண்ணேயில் மௌனமானுள். மூர்த்தியின் நினைவு அலே புகையிரத நினைவுடன் சங்கமித்தது. யாரிடம் யார் பழிவாங்குவது? இதனுல் பழிவாங்கப்பட்டவர் நிலே என்ன? எல்லோர் மனமும் ஓர்கணம் மௌனமானது.

(தொடரட்டும்)

# மலருகின்ற மனமும் மகிழ்கின்ற மனிதனும்

வின்சென்ற் பற்றிக் O.M.I. , B.A.

"வையத்து வாழ் படைப்புக்கள் அனைத்திலும் மனிதன் மாத்திரமே தன்னுடைய இறுதி இலக்கின் அமைப்பாளன். தனது மனத்தின் உள்ளக மனப்போக்குகளை மாற்றுவதன் மூலம் தனது வாழ்க்கையின் வெளிப்புற அம்சங்களை மாற்ற முடியும் என்பதே எமது சந்ததியின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும்." என்கிறார் உளவியலாளர் வில்லியம்ஸ் யேம்ஸ்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்று முதுமொழி கூறுவது போல மனிதனின் வெளிப்புறத் தோற்றம், அவனில் ஏற்படுகின்ற மாற்றம், அவனது செயற்பாடுகளில் மிளிருகின்ற ஏற்றம், அவனது மனம் எனும் அகச் சக்தியிலேயே பெரிதும் தங்கியுள்ளது. மனத்தின் மாட்சியே மனிதனின் மாட்சியாகக் காணப்படுகின்றது. உள்ளம் கள்ளமின்றி வெள்ளையாயிருக்கும் போது வெளிப்படும் வார்த்தைகள் வசீகரமானவை; நெறிப்படும் செயற்பாடுகள் நேர்த்தியானவை; பரிணமிக்கும் உறவுகள் பரிசுத்தமானவை.

"முழுமையாக உயர்வாழும் மனிதனே இறைவனின் மாட்சிமை ஆகும்" என்கிறார் ஓர் அறிஞர். "ஓ இறைவா என் தந்தாய். நிஜமாக நான் வாழவும் நிஜமாக நான் அன்பு செய்யப்படவும் முன்னர் என்னை இறக்கி விடாதேயும்" என்று என்றும் தவறாது தான் செபிப்பதாக அறிஞர் ஜோண்பவெல் கூறுகின்றார். ஒவ்வொரு மனிதனும் தான் வாழவும், வளரவும் அகமகிழவும், அன்பு செய்யப்படவுமே விரும்புகின்றார்கள். அவனது எதிர்பார்ப்புகள் நிறைவ செய்யப்பட வேண்டும். மற்றவரது நலனே தனது நலன் என்றும் மற்றவரது இன்பமே தனது இன்பம் என்றும் மற்றவரது வளர்ச்சியே தனது வளர்ச்சி என்றும் மற்றவர்களை மையமாக வைத்து அவன் வாழ முற்படும்போது மனித வாழ்க்கை முழுமை பெறும்.

முழுமைபெற விளைகின்ற மனித வாழ்க்கையில் நிரந்தரமாக நிம்மதி நிலைப்பதில்லை. சலனங்களும் சச்சரவுகளும், விழுகைகளும் வீக்கங்களும், எதிர்பார்ப்புகளும் ஏக்கங்களும் தொடரத்தான் செய்கின்றன. அழுகைகளும் ஆர்ப்பாட்டங்களும், பிதற்றல்களும் பித்தலாட்டங்களும் நிகழத்தான் செய்கின்றன. நொந்துபோன உள்ளங்

களுக்கும் வெந்துபோன நெஞ்சங்களுக்கும் வருந்துகின்ற வாலிபர்களுக்கும் உதிர்ந்து நிற்கும் முதியோர்களுக்கும் ஆறுதல் அளிக்க உளச் சிகிச்சை, உளவளத்துணை தேவை. உளவியலாளர்கள் பலவகையான உளச்சிகிச்சை முறைகளை முன்வைத்துள்ளார்கள். இவற்றுள் காட்சி உளச்சிகிச்சை (Vision Therapy) ஒன்றாகும். இது சுயசிகிச்சை அமைப்பைக் கொண்டமைந்ததாகும். இதன்படி புலன்கள் வெறுமனே காட்சிகளாகும். தவருன கருவூலத்திற்கு அறிகுறி [illegible]யான புலன்வெளிப்பாடேயாகும். ஆரோக்கியமான பண்பமைப்பாக்குகளினாலும் அனுகூ[illegible] சிந்தனைகளாலும் தவ[illegible] கருவூலத்தினை நீக்குவதே இதன் நோக்கமாகும். முழுமை [illegible]டைந்த, மகிழ்வான வாழ்க்கைத் திருப்தியினாலும் வளர்ச்சியினாலுமே காட்சி உளச்சிகிச்சையின் வெற்றி கணிப்பிடப்படுகிறது. மேலும் நான், மற்றவர்கள் வாழ்க்கை, உலகம், கடவுள் சார்பாக மேற்கொள்ளப்படுகின்ற நேரிய, தியாகச் செறிவான மனப்போக்குகளின் வளர்ச்சியே இதன் எழுச்சியை உறுதிப்படுத்துகின்றது. இவ் மனநிலைகளின் தொகுப்பே ஒருவனது யதார்த்த மெய்யின் காட்சிப் போக்காகும். காட்சி சீரானதாகவும் நலமானதாகவும் அமைந்திருப்பின் ஒருவன் உண்மையிலே மகிழ்வான முழுமனித வாழ்க்கையினை அனுபவிக்க முடியும்.

எமது வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்வுகள் எப்படி பிழையான நம்பிக்கை அமைப்பை ஏற்படுத்துகின்றன என்றும் அதனை மாற்றி அமைப்பதன் மூலம் புனரமைப்பு பெற்ற வாழ்க்கையை எய்திட காட்சி உளச்சிகிச்சை பயன்படுகிறது என்றும் அல்பேட் எலிஸ் (Albert sllis) பின்வருமாறு விளக்குகின்ருர்.

A: செயற்றிறன் ஊட்டும் நிகழ்ச்சி:

i ஒருவன் தகாத முறையில் என்மீது குற்றம் சாட்டுகின்ருன்.

ii தொடர்ந்து தோல்வி என்னைத் தழுவுகின்றது.

B: நம்பிக்கை அமைப்பு (Belief System)

i நான் எல்லாராலும் அன்பு செய்யப்பட வேண்டும் என்றும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றும் ஏங்குகின்றேன்.

ii தொடர்ச்சியான தோல்வி என்ருல் திருத்தமுடியாத பலவீனமே என்று கருதுகின்றேன்.

C; விளைவுப் புலன்கள் (Conesquent Emotions)

i விரக்தி, சோகம்.

ii ஏமாற்றம். சோர்வு.

D: நம்பிக்கைஅமைப்பில்உள்ள தவருன வியாக்கினத்தை முறியடித்தல்.

i எல்லாரையும் மகிழ்வூட்ட வேண்டிய அவசியமில்லை. என்மீது குற்றம் சாட்டிய

யவரிடம்தான் பிரச்சனை யுண்டு. என்னிடமல்ல.

ii வெற்றிக்கு மூலக்கல் தோல்வியே. தோல்வியிடம் நான் சரணடைய மாட்டேன் எனது முயற்சிகளில் தோல்வியடைந்தது உண்மை தான். எனினும் எனது வாழ்க்கை ஒரு தோல்வி அல்ல.

E; மறு மதிப்பீட்டினால், மறு வியாக்கியானத்தால் புதுத் தோற்றம் பெற்ற நிகழ்ச்சி மூலம் தவறான கருவூலத்தை தீர்த்தல்,

i மாறுபட்ட புலன் தாக்கம் தொடர்ச்சியான தன்னம்பிக்கை தன்னமைதி, குற்றம் சாட்டுவோர் மீது பரிவு.

ii ஆர்வத்தோடும் உற்சாகத்தோடும் முயற்சி செய்தல்.

"நீ லாயக்கற்றவன், நீ மோசமானவன், நீ ஒரு தனிப் பிறவி, நீ பிறர் வாழ்வைக் குலைப்பவன்" என்று மற்றவர்கள் கூறி விட்டார்கள் என்பதற்காக அவற்றைத் தனது விசுவாசப் பிரமா ஏற்று, மாற்றுச் சிந்தனை ஏது மில்லாது ஒருவன் வாழ முற்படும் போது தனது வாழ்வின் அழிவினையே உறுதிப்படுத்தியவனாகின்றான். தாழ்வுச் சிக்கலில் மூழ்கடிக்கப்படுவான், பிறரது கண்டனங்களையும் தரிசனங்களையும் விமர்சகக் கண்ணோட்டத்தோடு எதிர்கொள்வதோடு தவறான வியாக்கியானத்தை ஈடு செய்யப் புதிய சிந்தனைகளை, அனுகூலமான எண்ணக் கருக்களை உருவாக்க வேண்டும்.

முழுமையான மனித வாழ்க்கையினை முழுமையான உயிர் துடிப்புள்ள வாழ்க்கையினை எய்துவதற்கு கையாள வேண்டிய செயற்பாட்டுத் தொகுப்பை பின் வருமாறு அறிஞர் ஜோன் பவல் நிரைப்படுத்துகின்றார்.

1 திறந்த மனப்பான்மையும் மாறுபடும் தன்மையும்:

உனது வாழ்க்கை உன்னைக் கேள்வி கேட்கின்றது. உன் மனச் சான்றினைத் தொடுகின்ற ஒவ்வொருநாளும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு மனிதனும் உன்னைக் கேள்வி கேட்கின்றார்கள். உன்னை நீ அன்பு செய்கின்றாயா? உன்னிலே நீ மகிழ்வு கொள்கின்றாயா? மற்றவரிலுள்ள மனிதத்துவத்தை, தனித்துவத்தை உண்மையாக உன்னால் கண்டுவர முடிகின்றதா? மற்றவாகளின் மகத்துவத்தை உன்னால் புரிய முடிகின்றதா? மற்றவர்களை உன்னால் அன்பு செய்ய முடிகின்றதா? இப்படியான கேள்விகளுக்கு பொருத்தமான பதில் உனது திறந்த மனப்பான்மையை, விட்டுக்கொடுத்து விளங்கிக்கொள்ளும் தன்மையினை வெளிப்படுத்தும்.

2 புலன் செறிவுத் தன்னுணர்வு:

(Sensory Eniotional Awareness

புலன் தரும் தரவுகளைச் சரியாகக் கேட்பதோடு உனது வாழ்க்கை சார்பாக நீர் காண்பவற்றையும் கேட்பவற்றையும் மணப்பவற்றையும், ருசிப்பவற்றையும், தொடுபவற்றையும், சுய சிந்தனையோடு உன் உள்ளத்தில்

பதிவு செய்தல் அவசியமாகின்றது. புலன் செறிவுத் தன்னுணர்விற்கு தேவையானது உடற்பாங்கான தன்னுணர்வேயாகும். ஏனெனில் புலன், உடற்பாங்கான உளமெய்யேயாகும். உடலில் பாதி, உள்ளத்தினில்பாதி புலனின் இருத்தலேயாகும். புதிய புலன் தரவுகளின் தன்னுணர்வே சகல மனநோய்க் குளப்பங்களையும் தீர்ப்பதற்கு போதுமானது என்கிறார் உளநிபுணர் பிறிற்ச் பேர்ள்ஸ், (Fritz Perls)

புலன்செறிவுத் தன்னுணர்வு ஆழமான உணர்ச்சி வெளிப்பாடுகளைத் தோற்றுவிக்கலாம். உணர்ச்சிகளுக்கு நீ அடிமையாகவும் கூடாது. அவற்றை அடிமைப்படுத்தவும் கூடாது. சிந்தனைகளைச் சீராக்கி உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதன் மூலமாக உனது உள்ளத்தின் வளர்ச்சிகளில் வளமை காண முடியும். மனித செயற்பாடுகள் பொதுவாக புலன்செறிவு மிக்கவையாய் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அல்லது ஒருசீராய் ஒழுங்கமைந்த உணர்வுகளை வெளிப்படுத்துபவையாய் அமைகின்றன. புலன்களின் ஒருங்கமைப்பு, உணர்ச்சிகளின் ஒரு சீர்மை, சிந்தனைகளின் ஒருமை, உள்ளத்தின் அமைதியினையே நிலைப்படுத்தும்.

3 நம்பிக்கைக்குரிய நண்பன்:

முழுமனித வளர்ச்சிக்குரிய இன்னுமொரு இன்றியமையாத காரணி, ஒழிவு மறைவின்றி உள்ளம் திறந்து உறவு கொள்ளக் கூடிய நம்பிக்கைக்குரிய நண்பனேயாவான். காட்சி சிகிச்சையின் வெற்றிக்கு கட்டாயமாக வேண்டியவனாக இவன் காணப்படுவதற்கும் விசேடமான காரணங்கள் உள. அந்நியோன்னிய நட்பு இல்லாத ஒரு நபரிடம் உனது உள்ள அந்தரங்கங்களை அம்பலப்படுத்த விரும்பமாட்டீர் அப்படியே அவரிடம் அன்று நடந்த நிகழ்ச்சியை அழுதழுது கூறி உனது மனச்சுமையை இறக்கி வைக்கின்றீர் என்று வைத்துக் கொள்வோம். அந்நாள் ''அழாதையுங்க மனிதரின் வாழ்க்கையில் பிரச்சினை வருவது சகஜம் தான். இதனையெல்லாம் பெரிது படுத்தக் கூடாது. என்று கூறி உனது உணர்ச்சிகளை உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துவதற்கு சாதகமான ஒரு சூழலை உனது சுதந்திரத்தை உருவாக்க மாட்டார், உண்மையான நம்பிக்கைக்குரிய நண்பனால்தான் உன்னை அறிந்து. போதிளவு அன்பு செய்து உனது உள்ளத்தை உள்ளபடியே சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு ஏற்புடைய ஒரு சிறந்த சூழலை ஏற்படுத்திக்கொடுக்க முடியும்.

''தவறுகளை எதிர்கொண்டு விளங்கிக் கொள்வதற்கு வேண்டிய துணிவை ஆட்களுக்கு கொடுப்பதற்கு இன்றியமையாதது உயிர்த்துடிப்பான மனித உறவுகளும்.'' என்று உளவியலாளர் அட்லர் (Adler) கூறுகின்றார். நிபந்தனையில்லாத எமமை அன்பு செய்ய சிலர் இருக்கின்றார்கள். என்ற அனுபவ அறிவே

உளச்சிக்கல்களை (Psychological Complexes) எதிர்கொள்வதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும் உதவியளிக்கின்றது என்பது காள் ரேயர்ஸ் (Carl Rogers) இன் உளவளத் துணைக் கோட்பாட்டின் எடுகோள்களில் ஒன்றாகும். எமக்கு வெளியேயுள்ள ஒருவர் எம்மை விளங்கிக்கொள்கின்றார், ஏற்றுக் கொள்கின்றார் என்பதைத் தெரியும்போதே எம்மை நாம் யதார்த்தமாக விளங்கிகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் முடியும்.

நம்பிக்கைக்குரிய நண்பனோடு செய்கின்ற உரையாடலும் உறவாடலும் உனது உள்ளத்தின் அடித்தளத்தில் தேங்கிக்கிடக்கும் ஏக்கங்களை தெரிந்துகொள்வதற்கும் புரிந்துகொள்வதற்கும் ஏதுவாயிருக்கும். பிரச்சினைக்கு வார்த்தை வடிவம் கொடுக்கவும், தீர்வு கொடுக்கும் நேரான விழுமியங்களை உள்ளத்தில் ஏற்படுத்தவும் நல்ல நண்பனால்தான் முடியும். "நீ நல்லவன்தான். உன்னால் நிச்சயமாக முடியும்! இதோ நீ துணிந்துவிட்டாய்!" என்று உனது நண்பன் அடிக்கடி நினைவூட்டுவதன் மூலம் உனது வாழ்க்கையில் உளச் சமநிலையை ஏற்படுத்துவான்.

4 அமைதியான மீள் ஆய்வு:

புதிய நோக்கில் சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும், உந்துசக்தி ஒவ்வொரு நாளின் இறுதிக்கட்டத்திலும் ஓய்விற்காக, மீள் ஆய்விற்காக, மீள்மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படும் நேரத்திலிருந்தே கிடைக்க முடியும். எந்நேரமும் பரபரப்புடன் இயந்திரம் போல செயற்படுதல் மனித தத்துவம் நலிவுற்ற, தொழிற்செறிவுள்ள மனிதனையே தோற்றுவிக்கும். திட்டமிட்டு ஒதுக்கப்படும் நேரத்தைத் தவிர நடைமுறை வாழ்க்கையில் அடிக்கடி எதிர்பாராமல் கிடைக்கும் நேர இடைவெளிகளையும் சக்திச் சேமிப்பு நேரங்களாக பயன்படுத்தி புதிய சிந்தனைத் தோற்றங்களையும் புதிய காட்சிகளையும் உருவகிக்க வேண்டும். பதட்டமான மனநிலையை நீக்கி பக்குவமான மனோநிலையை நிலைப்படுத்துவதற்கு மீளாய்வு நேரங்கள், ஓய்விற்கான ஒதுக்கீடுகள் போன்றவற்றை அதிகரிப்பது அவசியமாகும்.

5 நாளாந்தப் பயிற்சி:

காட்சிச் சிகிச்சையின் பயனளிப்பு நாளாந்த பயிற்சியிலேயே தங்கியுள்ளது. திறந்த மனப்பான்மை, புலன் செறிவுத் தன்னுணர்வு நம்பிக்கைக்குரிய நண்பன் மீளாய்வு, ஓய்வு போன்றவற்றை ஒழுங்குத் கிரமமாக வளம்பெறச் செய்வதன் மூலம் நம்பிக்கை அமைப்பு (Belief System) வலிதாக்கப்படுகின்றது. மேற்படி செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும்போது உன்னைப்பற்றி பிறர் கொண்டுள்ள தவறான கருத்துகள், பிழையான புலன் தரவுகள் நீக்கப்படுவதோடு நேரிய சிந்தனைகளினால் ஊட்டம் பெற்று உள்ளம் நிறைவு பெறும்.

"நானே எல்லாம்; நான் இல்லாமல் அவர்களால் எதுவும் முடியாது. நானே சகலகலாவல்லவன் என்ற நோக்கோடு மற்றவர்களது பிரச்சினையில் அநாவசியமாகத் தலையிட்டால், அனைவரது பிரச்சனைகளுக்கும் நீயே தீர்வு வழங்க முற்பட்டால் அது ஆபத்தில் முடியும். மற்றவர்களை அவஸ்தைப்படச் செய்வதோடு நீயும் அவதிப்படுவாய். "அந்தரங்கம் புனிதமானது.'' என்று எழுத்தாளர் ஜெயகாந்தன் குறிப்பிடுகின்றார். பிறரது பிரச்சனைகளில் அழைக்கப்படா விருந்தாளியாக உள்நுழைவதும், அவர்களது அந்தரங்கங்களை அம்பலப்படுத்த தீவிரமாய் செயற்படுவதும் தீராத மனநோயினையே எண்பிக்கின்றது.

மனச் சஞ்சலமுடையோரில் மனநோயாளரில் பொதுவாக காணப்படும் அறிகுறிகள் 11என அல்பேர்ட் எலிஸ் கூறுகின்றார். அவை பின்வருமாறு:

1. எனது சமூகத்திலுள்ள எல்லோராலும் குறிப்பாக மேல் மட்டத்திலுள்ளவர்களால் நான் அன்பு செய்யப்பட வேண்டும். ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என விரும்புதல். (விளைவு— விரக்தி)

2 எனது மதிப்பீட்டைப் பற்றிச் சிந்திக்கும் முன்னரே நான் எதிலும் பூரண வெற்றியாளனாகத் திகழ வேண்டும் என ஆசைப்படுதல். (விளைவு— தோல்வி)

3. என்னுடைய மகிழ்ச்சி பிற காரணிகளிலேயே முற்றிலும் தங்கியுள்ளது. நான் அதற்குப் பொறுப்பல்ல. எனது வாழ்க்கையில் ஏற்படும் சவால்களையும், பொறுப்புகளையும் தவிர்த்துக் கொள்வதற்காக என் மனம் கூறுகின்ற பொய்யே இது.

4. எனது நிகழ்கால வாழ்க்கையினையும் செயற்பாட்டினையும் இறந்தகால அனுபவங்களும், வாழ்க்கை நிகழவுகளுமே நிர்ணயிக்கப்படுகின்றன.

6. எனது பிரச்சினைகள் ஒவ்வொன்றிற்கும் சரியான, பூரணமான ஒரேயொரு தீர்வு மட்டுமே உண்டு. இதனைக் கண்டு பிடிக்காவிட்டால் எனக்கு அழிவுதான்

6. நிகழக்கூடிய போராட்டங்களையும், பயங்கர அழிவுகளையும் எதிர்கொள்ள சதா ஏக்கத்தோடு காணப்படுகின்றேன்.

7. நான் மற்றவர்களில் தங்கியிருத்தல் வேண்டும். அதோடு என்னையும்விட வலிமைமிக்கவரே எனது நம்பிக்கைக்குரியவராய் இருத்தல் வேண்டும். (விளைவு — தன்சிதைவு)

8. நான் திட்டமிட்ட வடிவத்தில் எனது வாழ்க்கை முறை அமையாதபோது அது மிகவும் மோசமானது. எனது எதிர்பார்ப்புகள் எல்லாம் எப்பொழுதும் ஏமாற்றத்திலேயே முடிகின்றன. (விளைவு — குடற்புண்)

9. சில கஷ்டங்களையும், பொறுப்புக்களையும் எதிர்கொள்வதை விட அவற்றைத் தவிர்த்

துக் கொள்வதே சிறப்பானது. (விளைவு—தன்னம்பிக்கையீனம்)

*10.* சிலஆட்கள் கூடாதவர்கள் பொல்லாதவர்கள்; அவர்கள் கட்டாயமாகக் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

*11.* மற்றவர்களது பிரச்சினைக யும் கண்டு நான் மிகவும் அவ திப்படுகிறேன்.

ஆட்களுக்கு தொந்தரவு அளிக்கின்ற மேற்படி மனஅரிப் புகளை எலிஸ் மூன்று வகைக்குள் உள்ளடக்குகின்றுர்.

*1.* நான் பாவம்! நான் பிர பல்யமான திறமைசாலியாய் இருந்திருக்க வேண்டும். ஆனுல் நான் இப்படியல்ல. எனவே நான் பயனில்லாத வேண்டப்படாத ஒரு தனியாள்.

*2.* புத்தியில்லாத மற்றவர் கள் பாவம்! என்னை மற்றவர்கள் மேதை மரியாதையுடன் கட் டாயமாக கரிசனை காட்டியிருக்க வேண்டும். ஆனுல் அவர்கள் அப் படி நடந்து கொள்ளவில்லை. ஆகவே இவர்கள் மோசமானவர் கள. அழிய வேண்டியவர்கள்.

*3.* மூடத்தன வாழ்க்கையும் உலகமும் பாழ்! துன்பத்திற்குப் பதிலாக எனது வாழ்க்கையில் இன்பத்தைத்தான் அனுபவித்தி ருக்க வேண்டும். உலகும் இப்படி யான வாய்ப்பைத்தான் அளித் திருக்க வேண்டும். ஆனுல் நான் அல்லல்படுகிறேன்; அவதிப்படு கின்றேன்; ஆகவே, உலகமே பாழ்!


உன்னைப்பற்றி, மற்றவர்க ளைப்பற்றி, வாழ்க்கையைப்பற்றி, உலகத்தைப்பற்றி, கடவுளைப் பற்றி நீ கொண்டிருக்கின்ற தப் பபிப்பிராயங்கள் மாற்றப்பட வேண்டும். இவற்றைப் பற்றிய நோக்குகள் திருத்தம் செய்யப்ப டும்பொழுது உனது வாழ்க்கை யிலே புதுத்திருப்பம் ஏற்படும், புதிய தோற்றத்தை பெரியமாற் றத்தை உன்னிலே நீ காணுவாய்.

''வாழ்க்கை, இயக்கச் சக் தியை தனதாகக் கொண்டுள் ளது. அது வளர்வதற்கு வெளிப் படுத்துவதற்கு, வாழப்படுவ தற்கு முற்படும். இத் தூண்டு கோல் துண்டிக்கப்பட்டால் அது அழிவிற்கே இட்டுச் செல்லும். வாழ்க்கையில் ஆக்கப்பட்டுச் சக்தி கூடுதலாக தாக்கப்படும் பொழுது அழிவு உந்தலின் வலிமை குறைக்கப்படும், வாழப் படாத வாழ்க்கையின் வெளிப் பாடே அழிவாகும்'' என்கிறுர் எறிக் புறெம் (Erich Fromm)

எதிர்காலத்தில் நம்பிக்கை, வளைந்து கொடுக்கும் இயல்பு, விரைவாக தீர்மானத்திற்கு வரும் எண்ணம், புன்னகை செய் யும் முகம் என்பவையே நிறை வான வாழ்க்கைக்கு வழிமுறை கள் என்பது அண்ரு கார்ணிஜி யின் கருத்தாகும். பொருத்த மான வார்த்தைகளை தேர்ந்தெ டுத்துப் பேசுதல், வெற்றியில் வெறிகொள்ளாமலும், தோல்வி யில் சோர்ந்து விழாமலும் வாழு தல், திறன்களை விருத்திசெய்தல் பிறரது திறமைகளைப் பாராட்டி பெருமனதோடு வாழுதல் போன் றவை பெரு மகிழ்ச்சிக்கு இட்டுச் செல்லும் விழுதுகளாகும்.

"இப்பொழுது சிறு விஷயங்களைச்செய். நாளடைவில் பெரிய விஷயங்கள் உன்னை நாடி நிறைவேற்றி வைக்கும்படி கேட்கும்" என்று பாரசீக பழமொழி கூறுகின்றது. சிறு விஷயம் தானே என்று அலட்சியப்படுத்தாது சிறு விஷயங்களையும் சிறப்பாகச் செய்வதன் மூலம் நிறைவு பெறலாம். எளிய காரியமாயினும் சரி பெரிய காரியமாயினும்சரி அது உள்ளத்தின் நிறைவினின்றே எழுதுவது அவசியமாகின்றது.

வாழ்வில் ஏற்படும் நிகழ்வுகளை ஒருவர் எந்த மனநிலையில் எப்படி ஏற்றுக் கொள்கிறார் என்பதில் தான் மனமகிழ்ச்சி தங்கியுள்ளது. "வாழ்க்கையின் வெயிலில் கொஞ்சம் காய்ந்தும் மழையில்கொஞ்சம் நனைந்தும் வந்ததால் எனக்கு நன்மையே ஏற்பட்டிருக்கிறது." என்பது வாங் பெல்லோவின் கூற்று. ஏமாற்றங்கள், பிரச்சினைகள், முறிவுகள் ஏற்படும்பொழுது அவற்றிலிருந்து தப்பி ஓட முற்படாது அவற்றை எதிர் கொண்டு வெற்றிகொள்வதே வாழ்க்கைப் புதுத் தென்பைக் கொடுக்கும்; வாழ்க்கையில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தும். பிறரன்பு, இறைசிந்தை, கனிவு, கருணை, கரிசனை, போன்றவை உள்ளத்துக்கு உரமாக அமையும்பொழுது, அவன்-அவள் யது என்ற படர்க்கை நிலை மறைந்து 'நானும்' 'நீயும்' சேர்ந்த 'நான்' என்ற சமத்துவ உறவுநிலை வளரும். பொழுது மனித மனம் மலரும். மனிதன் நிறைவான மகிழ்ச்சியை எய்துவான்.



**உங்கள் கைவண்ணத்தில் உருவாகிய ஓவியங்கள்**

**(இந்தியன் மையினால் தீட்டப்பட்டது)**

**"நான்" ஐ அலங்கரிக்க முயற்சி**

**எடுங்கள். சிறந்தவை 'நான்**

**இன் அட்டைப்படமாக**

**வெளிவரும்.**

## பருவங்கள் மாற

## உருவங்கள் சந்திக்கின்றன.

''சொற்கள் புத்தியினுல் பிறக்கின்றன
செயல்கள் ஆன்மாவினுல் உதயமாகின்றன''

மனிதன் எப்படிப்பட்ட துன்பச் சூழலில் வாழ்ந்தாலும் அவனிடம் புதைந்து கிடக்கும் 'சக்தி'க்கு விலைமதிப்புமில்லை, அச்சக்தி மங்கிவிடுவதுமில்லை என்பதை மனோதத்துவ அறிஞர்கள் எடுத்தியம்புகின்றூர்கள்.

'மனிதனின் இறந்த கால எண்ணங்கள்
நிகழ்காலத்தில் பேச்சாகி எதிர்காலத்தில்
செயல் வடிவம் பெறுகின்றன'

இவ்வுடன்பாட்டை இன்றைய சிந்தனையாளர் எழுத்தாளர் இளம் தலைமுறைகள் தங்கள் செயல்கள் மூலம். ஆற்றிவரும் பணிகள் மூலம் எடுத்துக்காட்டுகின்றூர்கள். ஆகவே மனிதன் வாழப்பிறந்தவன் என்பதை புலனுக்குகின்றூர்கள். இவர்களுடைய ஆழ்ந்த, உயர்ந்த சிந்தனைகள் எதிர்காலத்தில் தம்மக்களுக்கு வளமான வாழ்வு உண்டு என்பதையும் உறுதிப்படுத்துகின்றன.

''பிறப்பால் பயன் இல்லையேல்
அதனுல் என்ன பலன்''

ஒவ்வொரு மனிதனும் தனது பிறப்பால் அர்த்தமுண்டு நன்மையுண்டு என்ற உண்மையை சுதந்தரித்துக் கொள்கிறுன். இந்த ஆர்வம் நம் ஒவ்வொருவருடைய இரத்த நாளங்களிலும் இழையோடவேண்டும். குழந்தைப்பராயம் தொட்டு நமது பெற்றோர், உற்றூர், உறவினர், நண்பர்கள் நமக்கு ஊட்டிய அன்பு, அரவணைப்பு பரிவு, தியாகசிந்தை, பெருந்தன்மை, சான்றூண்மை, ஆகிய இறை பண்புகள் நம்முடன் இணைந்து விடுகின்றன. இவையாவும் நமது நெறியூட்டப்பட்ட கல்வியினுல் வழிநடத்தப்படும்போது நாம் பூரண மனிதத்தன்மையின்பால் நம்மையே வழிநடத்தவும் மற்றவர்களை உளவலிமையுடன் வளர்த்தெடுக்கவும் தேவையான மனப்பக்குவத்தைப் பெறுகின்றோம். இதனுல்தான் நமது வாழ்க்கையில் சிலரைப்பார்த்து 'அவன் தியாகசிந்தை உடையவன்',

'தன்னலமற்ற தியாகி', நற்குண இயல்புடையோன்', 'சான்றோன்' 'உலகின் கண் தன்னை அர்ப்பணித்தவன்' என்றெல்லாம் புகழ்ந்தும் போற்றியும் வருகின்றோம். இவைகட்டாயம் வரவேற்கத்தக்க விடயங்களேயானாலும், அவை எங்கே உதயமாகின? எதற்காக உதயமாகின? அதன் தாற்பரியம் என்ன? என்பதை இலகுவில் அறியவோ, உணரவோ முடியாதுள்ளது. அவற்றை ஏனோதானோ என நாம் தட்டிக்கழித்து விடுவதுமுண்டு.

'நான் தவழ்ந்த தொட்டில்
என்னை வளர்க்கும் கலைக்கூடம்'

வாழ்க்கையின் ஆரம்பம் அன்னையின் உதிரத்திலும் அவளது, அரவணைப்புத் தொட்டிலிலும், தந்தையின் தன்னிகரற்ற இரத்த வியர்வையிலும் என்பதை மறந்துவிடலாமா? இவ்விருவரின் அன்பும் அரவணைப்பும், தியாகசிந்தையும் தான் என்னே! அவர்களுடைய சுய இச்சைகளையும், ஆசைகளையும், உணர்ச்சிகளாலான இன்பங்களையும் எவ்வளவு தூரம் அவர்கள் அர்ப்பணமாக்கியிருக்கின்றார்கள்! தங்கள் அன்புச் செல்வங்கள் இலட்சிய புருஷராகும் பணியில் அவர்கள் இட்டுச்செல்ல துடியாய் துடிக்கின்றார்கள். இதனால் நமது பெற்றோர் தங்கள் உள்ளங்களில் சில எதிர்பார்ப்புளை ஆழமாகப் பதித்து விடுகின்றார்கள். அத்துடன் தங், கள் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு உள நிறைவுடன் கூடிய உயர்ந்த இலட்சிய வாழ்வாக அமைந்து விடவேண்டும் என ஆசிக்கின்றார்கள். அதில் தவறொன்றும் இல்லை. ஆனால் வரையறைகள் உண்டு.

'குழந்தையின் உள்ளம்
வெண்திரையின் அரங்கம்'

சிறுவயது தொட்டு பள்ளிப்பராயம் வரை நாம் தியாக சிந்தையை நமது பெற்றோர், ஆசிரியர், நண்பர்களிடத்திலிருந்து பெற்றும், அனுபவித்தும் நம் வாழ்க்கையில் அதை இழையோட விடுகின்றோம். இதனால் எளிதில் மக்களுக்காக சமூக சிந்தனையுள்ள, பொறுப்புள்ள, நிறைமனம் உடையோனாக மாறுகின்றோம். இங்குதான் நாம் வைத்தியனாக, ஆசிரியனாக, சேவையாளனாக, துறவியாக, நடமாடவும், தன்னலமற்ற செயல்கள் பல புரியவும் எங்களை மற்றவர்களுக்குக் கொடுக்கின்றோம். அவ்வாறே எங்களை நாங்களே வழிநடத்தக்கூடிய மனவலிமையை, உளஉறுதியைப் பெறுபவர்களாகின்றோம், மற்றவர்களையும் ஆக்க விழைகின்றோம்.

'வாலிபப்பருவமடி (வாலிபப்) அங்கே
ஏக்கங்கள் எண்ணிலடங்கிடுமோ'

இளம் பராயத்தில் நம் உள்ளங்களில் இளமை ததும்பும் ஆசைகள், துடிப்புகள், எதிர்பார்ப்புகள் உணர்ச்சிகள் வடிவெடுத்து சிற்றுறுகளாக ஓட ஆரம்பிக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதென்றால் இலேசான காரியமல்ல. ஆயினும் அவற்றின் தரங்களுக்கேற்ப, 'இளம்பராய உளவியல் தேவைகள்' (Ps chological needs of an adolescent) என உளவியலாளர் வகுத்துள்ளனர். இப்பருவத்தில்தான் மனித உளவளர்ச்சியில் மூன்றில் இரண்டு பங்கு முற்றாக உருவாகின்றதெனவும், இங்கு பல இலட்சிய வரைகள் காணப்பட்டபோதும் 'காதல்' என்ற எதிர்கால மனமும் வீச ஆரம்பித்து விடுகின்றதெனவும் கூறுகின்றனர்கள். இதில் சிக்கி வேதனைப்படுபவர்கள் பலர், தேர்ச்சி பெறுபவர்கள் சிலர், அதிலும் ஒருவரை ஒருவர் அறிந்தும், புரிந்தும் இன்புற்ற வாழ்வைச் சுவைக்கின்றவர்கள் ஒருசிலரே, இங்குதான் ஒருவர் மற்றவருக்காகத் தியாகம் செய்கின்ற உறவு நிலை மலர்கின்றது அது அன்பின் ஒரு கிளை ஆற்றில் சுடராக விருட்சம் பெற்று 'காதல்' என்ற தூய அரவணைப்பில் சங்கமமாகின்றது இக் காதல் உறவு எங்கு உதயமானது? எப்போ அரும்பியது? எதற்காக மலர்ந்து. எங்கே சங்கமமானது? என வினு எழுப்பி நம் உள் உணர்வுகளுடன் உரையாட, அவை கூறும் கருத்துக்களைக் காது கொடுத்துக் கேட்கத் தவறிவிடுகின்றோம். இது காதலர்களுக்கே பரியாத புதிராகத்தான் தென்படும். ஆயினும் தங்களை ஒருவருக்கொருவர் தியாகம் செய்து பகிர்ந்து வாழ ஒன்றிணைகின்றோம் என்ற உறவுவழி அலசி ஆராயப்பட்டு பொறுப்புணர்வுடன் புரிந்துகொண்டு, அனுபவத்தினூடாக கண்டு செயற்படும் ஆற்றல் பெற்றிருந்தால் எதிர்காலத்தில் இருவரும் எதிர்நோக்கும் வாழ்க்கைச் சுமைகளை சிறுசிறு பிரச்சினைகளை எளிதில் முறியடித்து விடலாம்.

'காதலில் விழுந்தவர்களெல்லாம்
கரை சேர்ந்தவர்களல்ல'

'காதல்' என்னும் காலப்பருவம் அனைவருடைய வாழ்க்கையிலும் தோன்றி மறைகின்றது. இதில் இறங்குபவர்களெல்லாம் வெற்றி பெறுபவர்களல்ல. வெற்றி பெறுகின்றவர்களெல்லோரும் குடும்ப வாழ்வை மகிழ்ச்சி நிறை வாழ்வாக மாற்றுபவர்களுமல்ல. இவர்கள் இரு உள்ளங்களின் ஒன்றிணைப்பையும், தியாக

சிந்தையையும் கருத்தில் கொண்டு உணர்வுகளை மதித்து நடக்கும்போது தங்கள் வாழ்க்கையின் மகிமையைக் கண்டவர்கள். தாங்கள் வாழப் பிறந்தவர்கள், வாழ்ந்து காட்டி வழிகாட்டப் பிறந்தவர்கள் என்ற நம்பிக்கை உள்ளங்களில் உதயமாகும் போது அவர்கள் ஒருவர் மற்றவரில் தங்கி வாழும் மன எழிலைப் பெறுகின்றார்கள். தங்கள் இன்பதுன்பங்களில் தாம் ஊற்றிய தியாகத்தின் சுடரைக் காணக்கூடியதாய் இருப்பதுடன், அவற்றின் அர்த்தங்களை அறிந்துகொள்ளக் கூடிய மனதையும், குடும்ப நலப் பொறுப்பை ஏற்று வாழக்கூடிய மனத்திடனையும் பெறுபவர்களாகின்றார்கள்.

எனவே இளம் பராயத்தவர்கள் தங்கள் எதிர்காலம் கருதி சமூகக் கண்ணோட்டத்துடன் வாலை- வாலிபப்- பருவங்களை நெறி தவறாது அமைப்பதில் முயலவேண்டும் என்பது புலனாகிறது. இவற்றையெல்லாம் விடுத்து, தற்கால 'கிளிக்கல்' (சினிமா) உடையுடனும் நடையுடனும் இணைந்து, கற்பனைக் கதைகளுடன் சங்கமமாகி, அவற்றின் போக்குக்குத் தாளம்போட்டு வாழ்ந்த வாழ்க்கையைச் சிந்திக்கவும் தவறிவிடக் கூடாது. 'நாம் வாழப் பிறந்தவர்கள்' என்ற மனநிலை நம் ஒவ்வொருவருடைய உள்ளங்களில், சிந்தனைகளில் ஒலிக்கும்போது நம்மை நாம் வெறுத்தொதுக்கும் நிலை மன விரக்தியால் தள்ளப்படும் நிலை, நம்மை நாம் மாய்த்துக் கொள்ள எடுக்கும் முடிவுகள் அனைத்தும் புதுத் திருப்பம் பெறுகின்றன. புது வழிகளை எம் மனங்களில் பதித்து விடுகின்றன என்பதை உணர்ந்து மற்றவர்களுக்கும் எங்களுக்கும் நிகழ்காலமும் எதிர்காலமும் உண்டு என்ற மனத்துணிவுடன் வாழ்க்கையைச் சந்திப்போம்— அதில் வெற்றி காணுவோம்.

"அறியாமை இரகசியத்தின் தாய், துன்பத்தின் பிறப்பிடம்,
குருட்டு நம்பிக்கையின் அன்னை, சங்கடம் தோன்றிய இடம்,
அழிவும் வறுமையும் வாழும் தாயகம்"

இங்கர்சால்

# உன் அன்புக்கு என் நன்றி

~ F. L. N. இரேல் ~

வருடங்கள் பல வாழ்ந்துவிட்டேன்
வாழ்க்கையின் அர்த்தம் புரியாமல்.........

அன்புக்காக ஒங்ட நின்றேன்
அதுவும் எனக்கு கிடைக்கவில்லை
அரவணைப்பை எதிர்பார்த்தேன்
அதையும் எவரும் தரவில்லை
தந்துவிட்டாய் இன்று நீ
இரண்டையுமே ஒன்ருய் சேர்த்து.

உன் அறிமுகம் கிடைத்தது இன்று
என் வாழ்வை அது மாற்றியது.........

தனிமையில் நான் வாடினேன்
என்னருகில் நீ இருந்தாய்
உற(வினர்களை) வுகளை இழந்து நான் தவித்தபோது
உடன் இருந்தாய் நீ என்னோடு.
கவலையில் மூழ்கி கண்ணீர் நான் விட்டபோது
கண்ணீரை துடைத்து ஆறுதல் நீ சொன்னுய்
என் வாழ்வின் உயர்வைக் கண்டு
பலர் பொருமை கொண்ட போதும்
என்னை நீ பாராட்டி என் உயர்வில் மகிழ்ச்சி கண்டாய்.
தோல்வி பல தொடர்ந்து என்னைத் தோற்கடித்தபோது
தோல்வியே வெற்றி என்று தோள் தட்டி நீ நின்ருய்......

உன் அறிமுகம் கிடைத்தது இன்று
என் வாழ்வை அது மாற்றியது.........
பலர் என்னை வெறுத்த போதும்
என்னை நானுய் ஏற்றுக்கொண்டாய்
பொறுமையிழந்து கத்தியபோதும்
பொறுமையுடன் என்னை நீ ஏற்றுக் கொண்டாய்.

உன்னை நான் வேண்டாமென்று உதறித்தூரே தள்ளிய போதும்
என்னை விட்டு பிரிந்து நீ என்றுமே விலகவில்லை
உன்னை புகழ்வது போல் நான் இகழ்ந்த போதும்
மௌனியாக மாறி என்னை வென்றுவிட்டாய்.
என் வரவை என்றும் எதிர்பார்த்தாய்
நானோ என் வழியே சென்றுவிட்டேன்
உன் வரவை எதிர்பார்த்தேன் - நீயோ
உரிய நேரம் வந்துவிட்டாய்.

நீ சொன்ன ரகசியத்தை
பலரிடம் நான் உளறிவிட்டேன்
நான் சொன்ன ரகசியத்தை
நீயோ யாரிடமும் சொல்லவில்லை
என் புகழ் சொல்லி என்னை நீ உயர்த்திவிட்டாய்
உன் குறை நான் சொல்லி உன்னைக் குறைத்துவிட்டேன்
மனதில் ஒன்று செயலில் ஒன்று கூடாதென்றாய்
அதுதான் சரியென்று நானும் ஏற்றுக் கொண்டேன்
என் உணர்வுகளை மதித்து நீ என்னை ஏற்றுக்கொண்டாய்
உன் உணர்வுகளை அறிந்தும் உன்னை நான் உதறிவிட்டேன்
வாழ்வை நான் வெறுத்து வெருண்டு நின்றபோது
வாழ்வுக்கு வரைவிலக்கணம் நீ தந்தாய்.
உண்மை அன்புவைத்து நீ வாழ்ந்தாய்
உண்மையென்று ஏதையும் நான் ஏற்கவில்லை
உண்மையை உள்ளம் திறந்து நீ சொன்னாய்
உன்னையே மறுத்து நான் மகிழ்ச்சி கண்டேன்
அன்பை நீ செயலில் காட்டி உயர்ந்துவிட்டாய்
அதையே நான் நடித்துக்காட்டி குறைத்துவிட்டேன்
கொடுத்த வாக்கை இறுதிவரை காத்து நின்று
களங்கமிலா மனத்துடனே நீயிருந்தாய்
எடுத்த எடுப்பில் கொடுத்த வாக்கை மறந்து நானும்
அடுத்தடுத்து குற்றங்கள் புரிந்துவிட்டேன்

என் தவறை என்னிடமே நீ சொல்லி
என்னை நீ வாழவைத்தாய்
உன் தவறை பலரிடம் போய் நான் சொல்லி
உன்னை நான் வாட வைத்தேன்
பிறருடன் நீ நட்புறவு கொண்டபோது
மனதில் நான் பொறாமையை வளர்த்துக் கொண்டேன்
''எல்லோருடனும் அன்புறவு கொண்டு வாழ்'' என்ற
என் தத்துவம் பறந்துவிட்டதே ஒரு நொடியில்.

என்னை எவரும் அன்பு செய்வதில்லை......
என்றால் எதுவுமே இயலாது......
எவருமே என்னை புரிந்து கொள்கிறார்களில்லை......''
என்றெல்லாம் என்னைப்பற்றி
கொண்ட தாழ்வு மனப்பான்மையை நீக்கி
வாழ்வை வளமாக்க நீ தந்தாய் உன் உறவை.

என்னை நீ சந்தித்து
என் வாழ்வுக்கு புது அர்த்தம் தந்து
புது உறவுக்கு அழைத்துச் செல்லும்
உன் இனிய அன்புக்கு
என் இதய நன்றிகள் பல......

---



# எண்ணப் பொறிகள்

**கனவுகள்:-**

நினைவிருக்கும் போது ''டெவலப்'' செய்ய முடியாத மனித ஏக்கங்களின் 'நெகட்டிவ்கள்'

**திருமண அழைப்பிதழ்:-**

உள்ளச் சேர்க்கை இல்லாவிடினும் உடல் சேர்க்கைக்கு அளிக்கப்படும் 'உத்திரவாதப் பத்திரம்'

**உதடுகள்:-**

அன்பும், ஆசையும், இன்பமும் அத்தாட்சி பெற இறைவன் கொடுத்த தானியங்கி 'ரப்பர் ஸ்டாம்'

**மயானம்:-**

உயிரோட்டம் இருந்தபோது ஒன்றுசேரா மனிதரெல்லாம் உயிர்மூச்சு ஓய்ந்த பின்னே வந்து கூடும் 'ஒன்றியம்'

- P. ஜெகநீஸ் யாழ்.



# "ஒரு புயல் தென்றலாகிறது"

ஷாந்தி கஜேந்திரா, உரும்பராய் தெற்கு.

"இரைந்து கொண்டு செல்லும் பேருந்து வண்டியுள் ஒரே சன நெரிசல். காலை நேரமாதலால் பலவித தேவைகளுக்காக செல்லும் பிரயாணிகளால் வண்டி நிறைந்திருந்தது. கம்பியில் பிடிக்க முடியாமலும் நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் நின்றிருந்த வதனா தனக்குரிய இடம் வந்ததும் மிகவும் சிரமப்பட்டு இறங்கி நீண்டதொரு பெருமூச்சை விட்டாள். தான் வேலைபார்க்கும் அலுவலகத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள். தேவையான பொருட்களை கொண்டு வந்த பொதியை அடுத்த தோளிற்கு மாற்றி விட்டு நேரத்தைப் பார்த்தாள். நேரத்தைப் பார்த்ததும் அவளின் கால்கள் சிறிது வேகம் காட்டின. அலுவலகத்திற்குள் பிரவேசித்ததும் "குட்மோர்ணிங்" என பல குரல்கள் அவளை வரவேற்றன. பதிலுக்கு தானும் "குட்மோர்ணிங்" சொல்லி விட்டு தனது இடத்தை அடைந்து அங்கு உட்கார்ந்து நிம்மதியாக ஒரு நீண்ட மூச்சு விட்டாள்.

சிறிது நேரத்தில் அவளை அவளின் சக சிநேகிதிகள் சூழ்ந்து கொண்டார்கள். விமலா கேட்டாள்: "ஏனடி இவ்வளவு லேட்"? வதனா தன் கண்களை ஒரு தடவை மூடித் திறந்து களைப்பைத் தெரிவித்தாள்: "ம்... அம்மாக்கு கதைக்கக் கூட முடியேலையோ" எனக் கேட்டபடி அருகில் வந்த தாட்ஷா "நான் வந்த பஸ்சிலை பார்த்தன் உன்னைக் காணேலை" என்றபடி அவளருகில் அமர்ந்தாள் தாட்ஷா வதனாவின் நெருங்கிய சிநேகிதி, எங்கு என்றாலும் இருவரையும் ஒன்றாகக் காணலாம். அப்போது கல கல என கதைத்த படி வந்த தேவி "ஏன் வதனா இவ்வளவு லேட் வீட்டிலை பிள்ளையா குட்டியா? சீக்கிரம் வந்திருக்கலாமே" என்றபடி அப்பால் சென்றாள். வதனாவிற்கு மனம் ஒருதடவை நின்று வேலை செய்தது. "சரி சரி வேலைக்கு நேரமாச்சு" என்ற படி தாட்ஷா எழுந்து சென்றாள் கல்லாட்டம் உட்காந்திருந்தாள் வதனா. "ஆம் எனக்கு என்ன பிள்ளையா குட்டியா? அவள் உண்மையைத்தானே சொன்னாள். ஆனால்; ஆனால் என்னால் ஏன் அதைத் தாங்க முடியவில்லை" என அவள் மனம் அலைமோதியது. மனதை கட்டுப்

படுத்தி அது முடியாத விடத்து அவள் கண்கள் முத்து முத்தாக நீரைக் கொட்டியது மேசை மேல் கண்ணீர் கோலம் போட்டது. இப்படி எத்தனை தடவை கண்ணீர் அபிஷேகங்கள் நடந்திருக்கின்றன. அது அவளுக்கு மட்டுமே தெரியும். மனம் சிறிது ஓயும் வரை அழுதவள் பின் தன் வேலையைத் தொடர்ந்தாள்.

வதனாவிற்கு சுமார் 26 வயதிருக்கும் தனது 19 ஆவது வயதில் சேகரை காதலித்து திருமணம் முடித்தவள், காதலில் பூரண அன்பை பரிமாறிய இருவரும் காதலிக்கும் போது சமுதாயத்தின் சாதி சம்பிரதாயங்கள் குறுக்கிட்டன. எத்தனை கட்டுப்பாடுகள், குரோதங்கள் பழிவாங்கல்கள் இருந்தாலும் அவை ஒன்றாலும் அன்பை அழிக்க முடியாது. வாழ்க்கை என்ற அர்த்தமுள்ள வார்த்தைக்கு உயிரூட்டுவதற்காக மனிதர் படும் பாடு கொஞ்சமல்ல: அதில் இவர்களின் பங்கு அளப்பரியது. வேண்டாம் என சொந்தங்கள் ஒதுக்கின. ஏளனப்பார்வை சமுதாயக் கழுகுக்கு. ஈருடல் ஓருயிர் என ஒருவரை ஒருவர் புரிந்து வாழ்வுக்கடலில் ஆனந்தமாக வழி சென்றனர். சேகர் வதனா மேல் தன் உயிரையே வைத்திருந்தான். அவனின் அணைப்பில் இருக்கும் போது அவன் தன் மீது சொரியும் அன்பின் ஆழத்தினை அறிந்து தான் பட்ட துன்பங்களுக்கெல்லாம் விடிவு கண்டு விட்டவள் போல் பெருமையடைவாள்.

திருமணம் முடித்து ஆரம்பகாலத்தில் இல்லாத ஏக்கம் இப்போது இருவர் உள்ளத்திலும், பல வருடங்கள் கழிந்தும் தமக்கு ஒரு குழந்தை இல்லையே என்கிற ஏக்கம் அது. எல்லாம் கடவுள் விட்ட வழி, என்றாலும் குழந்தை இல்லாதது பெரும் குறையாகப் அவர்களுக்கு, ஆனாலும் தமது குறையை வெளிக்காட்டுவது இல்லை. முதலில் பேசாதவர்கள் பின்னர் கேலி செய்தது. மனதில் வேதனையைக் கொடுத்தது. ஒரு மனிதன் அடுத்தவன் மீது கோபப்படும் போது குறைகளைக் சுட்டிக் காட்டிப் பேசுவது வழக்கம். மனிதன் பகுத்தறிவு உள்ளவன்தான். ஆனாலும் சில வேளைகளில் மிருகத்தை விட கேவலமாக நடக்கிறான். மனிதனின் மனதில் உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டிப் பேசலாம் ஏனென்றால் அது அவனே தேடுவது தானே. ஆனால் உடலில் இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டுவது நியாயமாகுமா? ஆண்டவன் படைப்பில் அவர்களின் பங்கு அவ்வளவு தான் அதை அடுத்தவர் சுட்டிக் காட்டி மனதில் ரணங்களை ஏன் ஏற்படுத்துகிறார்கள்?

அன்று ஒரு நாள் சாப்பிடும் நேரம் தாட்ஷா தான் கர்ப்பவதியான சேதியைச் சொன்னாள். வதனாவிற்கு மிகுந்த சந்தோஷமாக இருந்தது. அவளை வாழ்த்தினாள். அப்போது சாப்பிட்டுக் கொண்டிருந்த தேவி வதனாவைப் பார்த்து, “நீயும் இருக்கிறாய்

ஏழெட்டு வருடமாச்சு இன்னும் ஒரு பிள்ளை கூட இல்லை. தாட்ஷா நீ கெட்டிக்காரி தான்'' என்றாள், எல்லோர் முன்னும் தன்னை வைத்து தேவி அப்படிப் பேசியது வதனாவிற்கு அவமானமாகி விட்டது. தொடர்ந்து சாப்பிடாமல் எழுந்தாள். அவர்கள் கேட்க தனக்குப் பசிக்கவில்லை என்று சொல்லி விட்டு அலுவலகத்தில் பின்னேரம் லீவு கொடுத்து விட்டு தனிமையில் நடந்து வந்தாள். மனம் தாக்குப்பட்ட வேகத்தில் செருப்பைக் கூட மறந்து போய் வீதியில் நடக்கத் தொடங்கினாள். மதியமாதலால் வெயில் சுளீரெனத் தாக்கியது. பூப்போன்ற பாதங்கள் வீதியில் பொசுங்கியது. ஆனால் உள்ளத்தைத் தாக்கிய சூட்டை விட இது அதிகமாக இருக்கவில்லை. பொசுக்கும் கால்களோடும் பொசிங்கிய இதயத்தோடும் வீட்டுக்குள் சென்றாள். அங்கு அப்போது தான் அலுவலகத்தால் வந்து களைப்பு மிகுதியில் அதே உடுப்போடு சேகர் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தான். அரவம் கேட்டு எழுந்த சேகர் வதனாவை பாத்தான். அவளோ ஓடிச் சென்று அவன் மார்பில் தன் முகம் புதைத்து ஓவென பலமாக கத்தி அழுதாள் அழுகைக்கிடையே தனது மனதில் பாரத்தை இறக்கினாள். அவளின் தலையைக் கோதி ஆறுதல் சொன்ன சேகரின் கண்களும் கலங்கின. ''உலகத்திலை பிறக்கிற ஒருவரும் குறைகள் இல்லாமல் இருப்பதில்லை. அதிலை இது ஒரு குறை நமக்கு. அவர்கள் கேலி செய்தால் நான் என்ன செய்ய? அடுத்தவரை துன்புறுத்துவதில் சிலருக்கு இன்பம் இருக்கலாம். அவர்களின் அறிவின்மைக்காகத்தான் நாம் கவலைப்பட வேண்டும். அவர்களின் மனதில் அறிவு ஏழையாகி விட்டதே என வேதனைப்பட வேண்டும். நீ அழாதை வதனா! உனக்கு நான் இருக்கிறன். குழந்தை என்ன பெரிய குழந்தை. அது இல்லாமல் ஒருதரும் வாழவில்லையா? என அணைத்து சேகர் ஆறுதல் கூறினான். தன்னையே தஞ்சம் என வந்து அழும் வதனாவைப் பார்த்து பெருமைப்பட்டான் சேகர். இப்படி எத்தனை தடவைகள், ஆனால் அத்தனை வேளைகளிலும் இருவரின் மனங்களும் மௌனமாக அழும்; இதை இந்த உலகம் புரியுமா?

ஒரு பெண் பிறந்து ஏற்ற வயதில் பருவமடையாது விட்டாலும் கேலி, ஏற்ற வயதில் திருமணம் செய்யா விட்டாலும் கேலி, திருமணம் முடித்து குழந்தை பெறாது விட்டாலும் கேலி இந்தக் கேலி ஒரு தொடர்கதை. ஒரு நாள் அன்று வேலை முடிந்ததும் தாட்ஷாவும் வதனாவும் பஸ் நிலையத்தை நோக்கி நடந்தனர். வதனா பேசாமல் வருவது தாட்ஷாவுக்குத் தனிமையைக் கொடுத்தது ''ஏண்டி வதனா என்னாச்சு உனக்கு மூச்சுப் பேச்சைக் காணன்'' என்றாள். ''சீ ஒன்றுமில்லை சும்மா தான்'' என்றாள் வதனா

இதற்கு தாட்ஷா "எனக்குத் தெரியுமடி: தேவி அப்பிடிக் கதைத் திருக்கக் கூடாது தான் அவள் அப்பிடித்தானடி இதுக்குப் போய் கவலைப்பட்டுக் கொண்டு" என்றாள். இதைக்கேட்ட வதனாவின் மனமோ, "நான் கவலைப்படலை. இப்படியான கேலிகளும் கிண்டல்களும் என்னை எப்போவோ சாகடிச்சிட்டுதடி இது எனக்குப் புதிதில்லை." என்றது. தாட்ஷாவோ "என்னடி நான் கதைக்கிறன் நீ பேசாமல் வாறாய். இப்ப உனக்கு என்ன? நீ கிழவியே இன்னும் காலம் இருக்கடி கவலைப்படாதேடி உன் குறை தீரும்" என்றாள். அவள் சொன்னது ஆறுதல் தான் ஆனால் அந்த ஆறுதல் வார்த்தைதான் மலடி தான் என்பதை ஒப்புவிப்பதாக இருந்தது. அவளுக்கு "சீ என்ன மனங்கள்" என சீறினாள். ஒவ்வொருத்தரும் இப்படி கேலி செய்யும் போது அவள் மனம் புயலெனச் சீறும். எப்போதும் போல புண்ணாகிய இதயத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

காலம் சுழன்றோடியது. அன்று கணவனை வேலைக்கு அனுப்பி விட்டிட்டு தானும் புறப்பட்டாள். அங்கு தாட்ஷா இல்லை. விசாரித்த இடத்து அவளுக்கு ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்திருக்கு "என தெரிந்து கொண்ட அவள் மதியம் எப்பிடியும் தாட்ஷாவையும் குழந்தையையும் பார்க்க வேண்டும் என நினைத்தவளாய் வேலையில் ஈடுபட்டாள். அப்போது அங்கு வந்த தேவியும் மற்றும் சினேகிதிகளும் வதனாவைச் சூழ்ந்து கொண்டார்கள். தேவி ஆரம்பித்தாள். "ம்......நீ எப்பதான் கற்கண்டு தரப் போறாயோ தெரியாது." என்றாள் அவள் மௌனமாக இருந்தாள். "என்னடி ஏழெட்டு வருடமாச்சு இனி எங்கை கற்கண்டு" என்றாள் மற்றவள். தேவியோ, "இனி என்ன செய்யுறது அனாதை மடத்திலை எண்டாலும் ஒரு பிள்ளையை வாங்கி வளர்க்கலாம் தானே" என்றாள். வதனாவிற்கு நெஞ்சு பிளந்து கொண்டிருந்தது. "குழந்தைக்கு லாயக்கு இல்லாதபடி நீ இனி என்ன செய்யுறது தாட்ஷாவிட்டை என்றாலும் வாங்கி வளர்" என்று கூறி விட்டு எல்லோரும் பலமாக சிரித்தார்கள். பலர் சுற்றியிருப்பதையும் பொருட்படுத்தாமல் இவ்வளவு காலமும் மௌனமாக அழுதவள். இப்போது வெளிப்படையாக அழுதாள் வாயில் எந்த வித சத்தமும் வராமல் கண்கள் நீரால் நிரம்பியது. நிரம்பித் தேங்கிய கண்ணீர் அடுக்கடுக்காய் உதிர்ந்து உடைந்தது. சிரித்தவர்கள் மௌனமாகி அவளை நோக்கினர். வதனாவின் மனமோ புயலெனச் சீறியது, அடக்க முடியாமல் துன்பம் மேலிட தேம்பித் தேம்பி அழுதாள். தாங்கள் கதைத்தது தப்பு என புரிந்த சினேகிதிகள் ஒன்றுமே பேசாமல் குற்ற உணர்வு நெஞ்சைக் குத்த ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

சிறிது நேரம் அழுத வதனா எழுந்து நேரத்தைப் பார்த்துவிட்டு வெளியே வந்தாள், புயலென சுழன்றது மனம், அவள் மனமோ''நான் இவ்வளவு காலமும் பட்டஅவமானமும் போதும், இனியும் இதைத் தாங்கிக்கொண்டு உயிரோடு வாழ முடியாது. இந்தப் பிரச்சனைக்கு என் சாவு தான் தீர்வு என சொல்லியபடி புகையிரதப் பாதைக்கு அருகில் தன் உயிரை மாய்க்க ஆயத்தமாக நின்றாள்.

புகைவண்டி வரும் ஓசை மெல்லியதாகக் கேட்டது. சிறிது நேரத்தில் புகைவண்டி வருவது தூரத்தில் தெரிந்தது அதையே கண் கொட்டாமல் பார்த்தாள் வதனா. அதில் சேகரின் முகம் அவள் மனத்திரையில் தெரிந்தது. அதில் அவன் முகம் அவளைப் பார்த்து ''வதனா இது என்ன முடிவு. என்னை அனாதையாக்க துணிஞ்சிட்டியா? வேண்டாம் வதனா. தயவுசெய்து என்னை விட்டுப் போகாதே. நீ இல்லாவிட்டால் எனக்கு யார் இருக்கிறார்கள். வதனா நான் சொல்வதைக் கேள்'' என கெஞ்சுவதுபோல இருந்தது. திடுக்குற்று சுயநிலைக்கு வந்தவள் புகைவண்டி தன்னை கடந்து செல்வதைப் பார்த்தாள்.

அப்போதுதான் அவளுக்கு புரிந்தது. ''சீ ஏன் நான் இந்த ஊர் உலகத்துக்காக வாழ வேண்டும். இவற்றிற்கு நான் ஏன் பயப்பிடவேண்டும். என் கணவர் என்னில் தன் உயிரையே வைத்திருக்கிறார். ஒரு குழந்தை இல்லை என்பதற்காக அவரைவிட்டு நான் சாவதா? என்ன கோழைத்தனம் இது. எனக்கு குழந்தை வேண்டாம். என் கணவர்தான் வேண்டும். எந்த சொந்த பந்த சிநேகிதமும் ஊர் உறவும் வேண்டாம். ''வாழ்ந்து இறக்கும்வரை அவருக்கு நான் குழந்தை. எனக்கு அவர் குழந்தை'' என தனக்குத்தானே சொன்னாள். அவமானத்தால் புயலென சீறிய அவள் மனம் சேகரின் அன்பை நினைத்து தென்றலென சாந்தம் அடைந்தது.

தன் மீது உயிரையே வைத்திருக்கும் தன் கணவனை நினைத்து கண்ணீர் உகுத்தாள். பின் தன் தெய்வமான சேகரை நோக்கி நம்பிக்கை நெஞ்சில் துளிவிட அவள் பாதங்கள் நடக்கத் தொடங்கின.

நன்றி.

## கவிதையரங்கம் -1

# விடுதலை

வேண்டும் விடுதலை— வேண்டும் விடுதலை
தினம் தினம் வேண்டுகின்றோம் விடுதலை.
மனத்தை அழுத்தும் சுமையிலிருந்தும்
மதவெறி கொண்டு அலைவதிலிருந்தும்
மற்றவர் புகழில் எரிவதிலிருந்தும்
அடுத்தவர் உழைப்பை வெறுப்பதிலிருந்தும் வேண்டும்
விடுதலை.

சாதிக்காக சாவதில் இருந்தும்
ஏழையைச் சுரண்டும் போக்கிலிருந்தும்
தீண்டாமை என்ற செயலிலிருந்தும்
மூர்க்கமான கொள்கையிலிருந்தும் வேண்டும் விடுதலை.

கைவிட முடியாக் குடியிலிருந்தும்
கெட்ட நண்பர் கூட்டத்திலிருந்தும்
திட்டமில்லாக் கொள்கையிலிருந்தும்
தீமையான எண்ணத்திலிருந்தும் வேண்டும் விடுதலை.

ஞானமில்லா முடிவிலிருந்தும்
தீமை கொண்ட பண்பிலிருந்தும்
ஆடம்பரத்தில் உழல்வதிலிருந்தும்
அந்தகாரத்தில் அலைவதில் இருந்தும் வேண்டும் விடுதலை.

சுயநலமான போக்கிலிருந்தும்
பகைவரைப் பழி வாங்கலிலிருந்தும்
நம்பிக்கைத் துரோகம் செய்வதிலிருந்தும்
வஞ்சமான போக்கிலிருந்தும் வேண்டும் விடுதலை

மனச்சான்றற்ற செயல்களிலிருந்தும்
சீதனப் பேயின் பிடியிலிருந்தும்
குணத்தினை நாடாக் குறையில் இருந்தும்
வேண்டியோர்க் குதவிடா குற்றத்திலிருந்தும் வேண்டும்
விடுதலை.

உரிமையை ஒடுக்கும் அநீதியிலிருந்தும்
நீதிக்குக் குரல்கொடா தவற்றில் இருந்தும்
அகிம்சா வழியை எதிர்ப்பதிலிருந்தும்
அமைதியைக் கெடுக்க முனைவதிலிருந்தும் வேண்டும்
விடுதலை.

அச்சம் மிக்க ஆட்சியிலிருந்தும்
துப்பாக்கி வேட்டுச் சாவிலிருந்தும்
கொடிய சிங்கத்தின் பிடியிலிருந்தும்
துயரமான முடிவிலிருந்தும் வேண்டும் விடுதலை.

அந்நியர் ஆதிக்கப் பிடியிலிருந்தும்
துன்பம் மிக்க நிழலிலிருந்தும்
அமைதி அற்ற வாழ்விலிருந்தும்
ஆட்சியின் பொறுப்பற்ற போக்கிலிருந்தும் வேண்டும்
விடுதலை.

---

**கவிதை அரங்கம் 1**

பரிசு பெறுபவர்; *அசுந்தா சொய்சா*, வங்காலை.

பரிசு வழங்குபவர்: Sayons Bake House
Passaiyoor,
Jaffna.

பாராட்டப்படுவோர்:

அராலி ரஞ்ஜித், N. C. அருள்வரதன் மட்டுநகர்.
N.S. ராணி வசாவிளான், நா. ராஜேந்திரா
சண்டிலிப்பாய்.

# கவிதை அரங்கம் - 2

*தலைப்பு;- பழிவாங்குதல்* *பரிசு:- திருக்குறள்*

*நிபந்தனைகள்:*

(1) சொந்த ஆக்கமாகவும் உளவியல் நோக்குடையதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) வெள்ளைத்தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதப் படல் வேண்டும்.

(3) போட்டிக்கு அனுப்பப்படும் பிரதிகள் திருப்பி அனுப்பப் படமாட்டாது.

(4) முடிவுத்திகதி 25 - 02 - 85

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | |
|---|---|---|---|---|
| 1 பு | 2 க | 3 ழே | 4 ந் | 5 தி |
| 6 ண | 7 | 8 | 9 க | ரு |
| 11 ர் | 12 | 13 ஸ | 14 த | 15 ம |
| 16 த | 17 பு | 18 ப் | 19 | 20 ண |
| 21 ல் | 22 வி | 23 த | 24 மு | 25 ம் |

# குறுக்கெழுத்துப் போட்டி

## முடிவுகள் இலக்கம்-18

பரிசு பெறுபவர்:

**துளசி திருஞானசம்பந்தன்**
47, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு அளிப்பவர்:

**கமலா இளங்கோவன்**
குருநகர்.

# கருத்துக்குவியல் 36

**பழிக்குப்பழி** { *நல்லதா?* / *கூடாதா?* }

உங்கள் கருத்துக்களை மாசி 25ந் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பிவையுங்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இலக்கம்: 19

5 X 5 ஆக 25 சதுரங்கள் இடமிருந்து வலமாக இலக்கமிடவும். அடைக்கவேண்டிய சதுரங்கள்— 9, 12, 16, 18, 25.

குழம்பி வருபவை 13 → 3 | ∨ 5 | ∨ மர்மம்

தலைகீழாக வருபவை 6 → 19 → 2 | ▽

**இடமிருந்து வலம்;-**

1. மகாபாரதக் கதையில் முக்கிய கதாபாத்திர சகோதரர்களின் கூட்டுப்பெயர்.

6. எந்தக்காரியமும் இன்பமாக ஆரம்பித்தபின் ஆனந்தமான இது இருப்பது நிறைவைக் கொடுக்கும்.

13. பண்டாரவன்னியனை இது செய்து கொல்ல முடியாத வெள்ளையர் தந்திரத்தால் கொன்றனர்.

19. மூர்க்கத்திற்கு இன்னொரு பெயர் யானைக்கு வரும் மூர்க்கத்திற்கு அதிகம் இதனை ஒப்பிடுவர். இதன் கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.

21. ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும். ............... ... குறிப்பில் இல்லாதுவிட்டால் கதையே மாறிவிடும்.

**மேலிருந்து கீழ்;-**

1. இதன் அரவத்தைப் பார்த்தாலே மனம் கிலிகொள்ளும்.
2. ஒருமனிதரை வரவேற்று உபசரித்து மனிதராக மதிப்பது அவரவர்குடும்ப, மன, சமூகப்.................. தங்கியுள்ளது. மூன்று எழுத்துப் பதமான இதன் இறுதி எழுத்து விடப்பட்டுள்ளது.
3. தீபத்தின் இது ஒளியைக் கொடுக்கிறது.
14. 100..................சேர்ந்தால் ஒரு ரூபாவாகும்.
17. கிரகங்களில் இத்தனை உண்டு.

முடிவுத்திகதி:- 25. 2. 85

**அதிஸ்டசாலிக்கு: ஓர் ஆண்டு 'நான்'**

# உளவியலாளர் வரிசையில்.....................

## அல்பிறெட் பினெற் (1857—1911) 6
Alfred Binet)

இவர் ஒரு பிரெஞ்சு உளவியலாளராவர். நுண்ணறிவுச் சோதனை அமைப்பின் தந்தை எனும் ஒரு தனிப்பட்ட சிறப் பினைப் பெற்றவராவர். இவர் ஒரு உளவியலாளரா? முதன் முதலாக நுண்ணறிவுச் சோதனைகளைத் தோற்றுவித்தல் இவர் மேலும் சிந்தனைச் செயன்முறைகள் பற்றி நாம் அறிந்து கொள் வதற்கு பெருமளவு தொண்டினைச் செய்துள்ளார்.

நுண்ணறிவு என்ற சொல்லை எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் நிலையிலும் சுருக்கமாகவும் வரையறை செய்வது கடினம். புதிய சூழ்நிலையில் பொருத்தமான எதிர்வினையைத் தோற்றுவிக்கும் திறனை நுண்ணறிவு என்று சில உளவியலாளர் வரையறை செய் தார்கள். சொல்லாய்விலும், கணிதத்திலும் வெற்றுநிலை அறி வாற்றல் திறனை இணைத்து நுண்ணறிவென சிலர் வரையறை செய்கிறார்கள். வேகமாகவும், திறம்படவும் கற்கும் திறனை நுண் ணறிவு என்று சிலர் வரையறை செய்கிறார்கள்.

பினே கூற்றுப்படி நுண்ணறிவு ஒருவனின் மூன்று குண இயல்பை நடத்தையாகக் கொண்டிருக்கிறது. (அ) குறிப்பிட்ட திசையில் மனப்பாங்கை மேற்கொள்ளுதல் (ஆ) விரும்பிய இலக் கைக் கொள்ள அந்த நோக்கிற்குக் தக அமைக்கும் திறன் (இ)தன் திறனாய்வுத்திறமை (auite - Criticism) Binet குறிப்பிடும் இம் மூன்று இயல்புகளையும் ஒருசேர ஒரு கருதுகோளின் கீழ், நுண்ண றிவு என்று கூறச் சில பின்னைய உளவியலாளர்கள் ஐயம் தெரி வித்தனர். உண்மையில் பினே இந்தத் தொகுப்பு முறையில் நுண் ணறிவை உண்மையாக வரையறை செய்யவே முற்பட்டார் என்பதனைக் குறிப்பிடவேண்டும். நுண்ணறிவு செயற்படும் முறை யை வேறுபடுத்தி அறிய அவர் முயன்றார். மேம்பட்ட நுண்ணறி வுள்ள குழந்தையைக் குறைபட்ட உள்ள ஆற்றலுள்ள குழந்தை யுடன் வேறுபடுத்தி எவ்வாறு கூறுவது என்று கூற பினே முயற்சி செய்தார்.

ஒரு கோணத்திலிருந்து அணுகில் நுண்ணறிவு என்ற சொல் லிற்கு தரப்படும் வரையறை தெளிவாக இல்லை. சிலர் ஒரே ஒரு, திறனைமட்டுமே நுண்ணறிவு குறிப்பிடுகின்றது என்று கருத்

தோற்றம் செய்கிறுர்கள். மற்றும் சிலர் ஆய்தல், புலன்காட்சி செய்தல், மனப்பாடம் செய்தல், கற்றல் ஆய எல்லாம் அறிந்து கொள்ளும் நிகழ்ச்சிகளைப் பரந்த அளவில் நுண்ணறிவில் சேர்த்திருக்கின்றுர்கள். உளவியலாளர்கள் முன்னைமையே இச்சிக்கலைப் பற்றி விழிப்புற்றுர்கள். அதாதுவ ஆதாரமான ஒரு திறன்.நுண்ணறிவாக இருக்கின்றதா அல்லது பல்வேறு ஆக்கம் சார்ந்த திறன்களில் வேறுபட்ட காரணிகளை நுண்ணறிவாகக் கொண்டுள்ளதா என்ற கேள்வியை உளவியலாளர்கள் கேட்கிறுர்கள்.

பினெற் என்பாரே இச்சிக்கலினூடே சென்ற முதல் அறிவியலாளராவார். இவர் அதன் அக்கறை காட்டினுர். இவரது கூற்றுப்படி புரிந்து கொள்ளல், புதுமை புனேதல், தொடங்கிய செயலைத் தொடர்ந்து முடித்தல், தனது நடத்தையிலுள்ள குறைபாடுகளை தானே உணர்தல் போன்ற கூறுகள் நுண்ணறிவில் அடங்கியுள்ளன என்கிறுர்.

பினேயின் நுண்ணறிவு முயற்சிகள் வெளிநாடுகளிலும் பரவத் தொடங்கியது. இங்கிலாந்தில் பேராசிரியர் சிரில்பர்ட் பினேயின் சோதனைகளை மொழிபெயர்த்து அந்நாட்டில் பரவச் செய்தார். இச்சோதனைகள் மிகவும் நம்பகமான ஒரு சோதனையாக இன்றும் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் நுண்ணறிவை அளந்தறியப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றை தவிர பினேயின் முறையைப் பின்பற்றி தரப்படுத்தப்பட்ட பல நுண்ணறிவுச் சோதனைகள் உள்ளன.

இ. பாலாம்பிகை
யாழ் பல்கலைக்கழகம்

**"நான்" புத்தக**
**வட மாகாண**
**விநியோகஸ்த்தர்**
**ஜோ. எகட்டன்**
**செனித் மார்கட்டிங்**
**யாழ்நகர்.**



# நான் உங்கள் வீட்டுப்பிள்ளை

எமது நாட்டின் பொருளாதார முதுகெலும்பு எனப் போற்றப்படும் தேயிலைத் தோட்டத்தின் மத்தியில் தன்னையே பசளையாக்கி தரணியை வாழ்வைக்கும் தோட்டத் தொழிலாளியின் வியர்வை அங்குள்ள மலைச்சாரலில் அருவியாக ஒடுகின்றதோ என எண்ணும் அழகு செழிக்கும் சூழலில் கண்டி மாநகரில் அமைந்த அம்பிட்டியா என்னும் இடத்தில் பலரது சிந்தனைக் கருவாக உருவாகிய "நான்" ஒரு சிறிய ஒரு வட்டத்துக்குள் சதுரமாக என் தோற்றத்தை ஆக்கி எல்லோர் கைக்குள்ளும் அடங்கியவனாக பிறந்தேன்.

நான் அன்று ஓர் செல்லக் குழந்தை என்னை பராமரித்து வளர்க்கப்பாடுபட்ட நெஞ்சங்கள் பட்டதுயர் கொஞ்சமல்ல. தாயில்லாத குழந்தை என்பதால் எல்லோர் கைபட்டும் அல்லவா வளரவேண்டும். அதுபோல் தான் எனது வளர்ச்சிக்கு பலர் முடிவு எடுத்தால்தான் ஒருதரம் விழித்துப் பார்ப்பேன். ஊர்ந்து ஊர்ந்து தவழ்ந்து நின்ற எனது குழந்தைப் பருவத்திலே என்னை மகிழ்விக்க எனக்கு பாரதியார் பாட்டு சொல்லித் தந்தார்கள் "ஓடி விளையாடு பாப்பா; நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா; கூடி விளையாடு பாப்பா. ஓர் குழந்தையை வையாதே பாப்பா."

பாலர் பருவம் மலர்ந்தது. பாசத்தோடு பல தேசம் சென்று பார்த்து வர என்னை வளர்த்த இதயங்கள் எண்ணின. எனக்கு அதில் ஒரு மகிழ்ச்சி. அதிலும் ட்டுப்பாடு சொல்லித்தான் அனுப்பி வைத்தார்கள். கண்டவர் நெஞ்சங்கள் எல்லாம் என் வளர்ச்சியில் அக்கறை கொண்டது. பார்வைக்கு நான் பள்ளி செல்லும் சிறுவனானேன். இதனால் என் எண்ணத்தில் எதுவும் செய்ய இயலாது. என்னைச் சுற்றி இருப்பவர்கள் என்னை வழி தவறிச் செல்லவிடுவதுமில்லை. அப்படி செல்ல முயருன்லும் எல்லோரும் என்னில் கொண்ட நல்லெண்ணத்தை தாண்டமுடியாத நிலை. இந்த நிலையில் தான் அன்று குருவிக் கூட்டைப் பிரித்து குரங்கு விளையாடுவது போல் என்னை வளர்த்துக் காத்த இதயங்கள் பல திக்கும் தம்பணி செய்யப் புறப்பட வேண்டிய நிலை

யில் அங்கு நான் அனாதையானேன். இந்த நேரத்தில் எனக்கு நானே ஆறுதல் சொல்ல முயல்வேன். "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைகொள்ளலாமா" இதுவரை பலரது நட்பைப் பெற்று திடீரென தனிமையுமான போது எப்படி இருக்கும் என பதை நீங்களே நினைத்துப்பாருங்கள் எனது நிலையினைக்கண்ட பலர் இவர் தப்புவது கஸ்டம் என கூறுவது என் காதிலும் பட்டது- காரணம் வளர்ந்தவர்கள் பிரிந்ததால் வாழவழியின்றி எனக்கென எதிர்காலத்திட்டம் இல்லாத நிலையில் எப்படி என்னை நான் காப்பாற்றுவது என்ற சிந்தனையே இருந்த போதும் இள கிய உள்ளங்கள், இன்னல்களைத் தாண்டி என் மகிழ்ச்சியில் கலந்தவர்கள் என் உயர்ச்சிக்கு உற்ற துணையாய் இருக்க முயன் றதால் தப்பினேன். இதனால் எனது அன்பைப் பெற்று அவர் களது அன்பைப் பகிர்ந்து, என்னை வளர்க்க பல வழிகளில் ஈடு பட்டதை இன்றும் நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

அன்று எனக்கு அடிக்கடி கூறுவர். "நான் வளர்ந்தால் நரம் வளர்வோம்" என்று. அன்று புரியாத புதிராய் இருந்தது. இன்று அதனை நன்கு உணாகின்றேன். பல நட்பு இதயங்கள் இணைந்து நான் நாம் ஆகி வளர்வதை எண்ணும்போது என் மனம் பூரிப் படைகிறது. அன்றைய வளர்ச்சியை சற்று பரவலாக்கி நட்பை பகிர்ந்துகொண்டபோது எமது தமிழ் இனத்தின் பெருமைதனை யும் மனஉணர்வுகளையும் உணர்ந்து பகிர்ந்து உளவியல் நோக் கிலே எம் இதயங்களைத் தொட்டபோது கோரப்புயல் நாட்டையே உலுக்கியது. சாதர்ரண புயலாய் இருந்தால் ஓரிருதினங்களில் அடங்கிவிடும். இனப்புயல் ஆகிற்றே. என் செய்வேன். நான் கப்பலோட்டிய தமிழர் கப்பல் ஏறிவரும் நிலையில் கண்டிமாநக ரில் அந்த வழி இல்லாததால் கரைப்பாதை வளியாக நான் மலை காடு மேடு தாண்டி நாடு ஒன்றைக் கண்டேன். அங்கு வந்த நான் பல பழைய முகங்களையும் என் உயர்வுக்கு முன்பு ஊக்கு வித்த இதயங்களையுங் கண்டேன். இரட்டிப்பு மகிழ்ச்சி எனக்கு சோதனையை தாண்டியதே சாதனைக்குதான் என்பதனை உணர்ந்து தேன். இங்கு யாழ் நங்கையின் அழகுறு காட்சிகள் பல ரேநல் பெறும் வாய்ப்பினைக் காணவும் அந்த கோரப்புயல் காரணமாய் இருந்ததே என எண்ணும்போது இறைவனின் சோதனையும் திட்டங்களும் எதிர்கால நன்மைக்கே என உணர வைத்தது. நேரில் பல இதயங்கள் கடுமையான சொற்களாலும் சாதாரண மக்கள் புரியமுடியாத தரம்உயர்ந்த வசன நடைகளாலும் தமக்கு விளங்கக் கடினமான முறையில் தொடர்பு கொள்கிறீர் என கேட்பார்கள். நான் ஒன்று சொல்லட்டுமா? "கிணத்துக்குள் இருப்பவரை மேலே கொண்டுவர வேண்டும் எனில் தூக்கிவிடும்

நான் மேல்இருந்துதான் முயற்சிக்க வேண்டும். இல்லையேல் நான் கீழே இறக்கிவிட்டால் நானும் அல்லவா கிணத்துக்குள் இறக்க நேரிடும்.'' அதுபோலவே உங்கள் மேல்நிலைக்கு தூக்கிவிடவே நான் முனைகிறேன். ஒரு வகையில் சூழல் தான் ஒருவனை நல்லவனுகவும் கெட்டவனுகவும் உருவாக்க முனைகிறது. அது போல் எனது உற வால் நீங்கள் உயர்வு அடைய முனைந்தால் என்ன? மருந்து கசப் புத்தான், அதனுல் எத்தனை சுகம் உண்டு என்பதனையும் உணர் வோம். நான் உங்களோடு பழகுவதுபோல் நீங்கள் உங்கள் நண் பனிடம் என்னை அறிமுகப்படுத்தி வைக்கவில்லையே. ஏன் அவர் களும் எம்மோடு இணைந்து தம் கருத்துக்களையும் சிந்தனை உணர் வுகளையும் பகிர்ந்துகொண்டு வாழலாம் அல்லவா? என்னையும் உங்கள் வீட்டுப்பிள்ளையாக இன்னும் நீங்கள் ஏற்றுக்கொள்ள வில்லையா? அல்லது என்னில் ஏதும் குறை இருந்தால் கூறுங்க ளேன்.

இன்று ஓர் மகிழ்ச்சியான செய்தியினை நான் உங்களுக்கு கூறப்போகிறேன். இதுவரைபட்ட துன்பதுயரில் இருந்து பலரது நட்பால் உயர்ந்து வளர்ந்து நான் நாம் ஆகி 11ஆவது ஆண்டு பிறந்தநாள் எனக்கு. இதனைக்கூறும்போது இதுவரை காலமும் என்னைக் காணுத புதிய உள்ளங்கள் பல இன்று எனக்கு வாழ்த் துக்கள் கூறி என்னையும் தங்களில் ஒருவராக இணைத்து வாழ முயன்று வருவதைக் காண்கின்றேன். இன்று உன்கரத்தில் இருக் கின்ற இவ்வேளையில் உன் வாழ்த்துக் குரலொலி என் இதயத் தில் கேட்கின்றது. இந்த உணர்வு மேலும் உறுதிபெற காலம் தாழ்த்தாது அடிக்கடி உன்னைச் சந்திக்க ஆவலாய் உள்ளேன் அதற்கு உன்நேரத்தை ஒதுக்கி உன் நண்பர்களை அறிமுகம் செய்து வைப்பாய் என்பதே எனது நம்பிக்கை.

எனது 11வது பிறந்தநாள் விழாவை பலஇதயங்கள் இணைந்து அதிக ஆடம்பரமின்றி மாசிமாதம் 11ம்திகதி காலை 11மணிக்கு நடாத்த முனைகின்றது. நேரில் சந்திக்க முடியாவிட்டாலும் உங் களையும் அங்கு நினைவுகூர்ந்து அடுத்து வரும்போது அந்த நிகழ்ச்சி பற்றி பகிர்ந்து கொள்கின்றேன். அவரை 10வது ஆண்டு வரை என்னுடன் என்வளர்ச்சியில் பங்கு கொண்ட இதயங்களையும் தொடர்ந்து ஊக்கம்தரும் இதயங்களின் அன்பை யும் பெற்ற மகிழ்வில் 11வது ஆண்டைப் புதுப்பொலிவோடு சந்திக்க வைத்த இறைவனுக்கு நன்றி கூறுவதில் நான் மகிழ் வடைகிறேன்.

நன்றி.

# வாசகர் பூங்கா

**தொடர்க! படர்க!**

மாங்கனிச் சதையிலே- தேன் ஊறியது போன்ற அட்டைப்பட டம். இதிலே இளமாறனின் 'வாழ்க்கைத் தத்துவம்'' சிந்தையைக் கவர கமலா இளங்கோவன் சூட்டிய அணி நெஞ்சத்தைச் சிதறடித்தது. ராணி மேரியின் தொடர் கதை நெஞ்சத்தைத் தொட்டது. நானே உன்பணி தொடர்க. நீ படர்க என்று வாழ்த்துகிறேன்.

யஸ்ரின் சுரேன்
யாழ்ப்பாணம்.

**விமர்சனத்திற்கு அப்பால்:**

''நான்'' சஞ்சிகையில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை. ஒவ்வொரு சொல்லும் சிந்தனை கரு ஆலமாகச் சுடர்விட்டு பிரகாசிக்கின்றன. ''நான்'' சஞ்சிகை எனது வாழ்க்கைக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக அமைந்துள்ளது. சாக்கடைச் சஞ்சிகைகள் பெற்றிருக்கும் அர்த்தமற்ற பிரபல்யத்தையும் ''நான்'' சஞ்சிகையின் இலைமறைகாய் போன்ற நிலையையும் காணும் போது வருத்தமாக இருக்கிறது. வளர்க தங்கள் பணி.

ஆர். எஸ். செல்வரெத்தினம்
அல்வாய்

**பயணத்தில் பாராட்டு;**

''கார்த்திகை, மார்கழி. ''நான்'' இதழை நான் எடுத்துக் கொண்டு பஸ்சில் கிளிநொச்சி பயணமானேன். அவலுடன் ''அவவுக்கு என்னதெரியும்'' என்ற கட்டுரையை படித்து முடிப்பதற்குள் பின் ஆசனத்தில் இருந்த பெண்மணி என்னைச் சுரண்டி இதழைக் கேட்டுப் பெற்றுக் கொண்டாள். சொற்ப நேரத்துக்குள் ''நான்'' பலர் கைக்கு மாறிவிட்டது. வாசித்தவர்கள் எல்லோரும் ''யாழ்பாலனை'' வெகுவாய் பாராட்டியதுடன், சுரேஸ் போன்ற இளைஞர்கள் மட்டும் இன்றி அரசியல்வாதிகளும், சமய ஆசான்களும் அடுக்கு மொழியில் அழகாகப் பேசுவதேயல்லாமல், உண்மையாக போதிப்பதைச் சாதிப்பதில்லை என விமர்சித்தார்கள். நெஞ்சைத் தட்டிக்கொண்டு வீர நடைபோடு ''நான்'' மலரின் இதழ்கள் நெடும் பயணத்தை மேற் கொண்டு மறுமலர்ச்சி

காணட்டும்! தவழட்டும்! பலர் கையில்!

எம். எ. சூசைதாசன்.
இறை புகழ்பாடி,
கிளிநொச்சி.

மலரும் நினைவுகள்;

உயிரோட்டமான ஆக்கங்களை தொகுத்து வழங்கி இளம் உள்ளங்களில் நீங்காத நினைவாக எண்ணவலைகளில் சஞ்சரிக்கும் "நான்" மலரே புலர்ந்திட்ட ஆண்டில் மென்மேலும் சிறப்புற வளர எனது நல்வாழத்துக்கள்.

ஜேக்கப் ஜெயந்தி
நெடுந்தீவு, 9

காலடி எடுத்து:

எத்தனையோ கஸ்ரங்கள், துன்பங்கள் மத்தியிலும் 11வது ஆண்டில் ஆர்வத்துடன் காலடி எடுத்து வைக்கும் "நானே" இன்னும் பல ஆண்டுகள், இருண்ட உள்ளங்களுக்கு ஒளியேற்றும் உனது தன்னலம் அற்ற சேவையைத் தொடர்ந்தாற்ற எனது மனமார்ந்த நல்லாசிகள்.

அ. மேரி. அக்னஸ்
பாஷையூர்.

நீங்காத இடம்:

நான் மலரின் இதழை வாசித்து பூரிப்படைந்தேன். "வசந்தங்கள் வாழ்த்து" சொல்ல தொடர்கதை தரமாயிருந்தது. நான் மலர் ஒரு வாடாமலராக என் இதயமதில் நீங்கா இடம் பிடித்துக் கொண்டது.

S. புனிதா
கள்ளிகட்டைக்காடு,
உயிலங்குளம்.

வேதனை!

"நினைவெல்லாம் நிலைத்து நிற்பவர்கள்" என்ற ஆசிரியர் தலையங்கம் காலம்சென்ற அன்னை இந்திராவை நினைவு கூர்ந்தது சாலச்சிறந்தது. இருப்பினும் ஓர் குறை. அண்ணல் மகாத்மா காந்தியின் உருவப்படம் இருந்த இடத்தில் அன்னை இந்திராவின் படம் இருந்தால் "வைரம்" பதித்த அட்டியல் போலிருந்திருக்கும்.

"நான் பதிலில்" தொடர்ந்தும் ஒரேமாதிரியான கேள்விகள் கேட்கப்படுவதை நினைக்க மிகவும் வேதனையாக இருக்கிறது.

த. வரதராசா
நெடுந்தீவு மேற்கு,
அம்மன்கோவிலடி.

உருவாக்கம்:

எழுத்தாளர்கள் பூரண அறிவு நிறைந்த மனிதர்களை உருவாக்குவதற்கு முயலுகின்றார்கள் என்பது "நான்" இதழ் படிக்கும் ஒவ்வொரு இதயங்களுக்கும் புரியும். இதற்காக களம் அமைத்துக் கொடுக்கும் "நானே" வாழ்க நீடூழி 'வளர்க உன் சேவை' 1984இன் இதழ் சிறந்த ஒவ்வொ

ருத்தரும் சிறந்தமுறையில் ஆக்கங்களை எழுதி இருந்தாலும் குறிப்பாக கமலா இளங்கோவன் S. சாந்தலட்சுமி, S. ஸ்ரீரஞ்னி சாந்தி, கஜேந்திரா, F. R. யேசுதாசன், ஜே. எஸ். ஜீவனதாஸ் பாலாம்பிகை, ராணிமேரி ஆகியோரின் ஆக்கங்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

M.G. கணேசமூர்த்தி
பொத்துவில்- 03

ஊக்கம்:

பல்வகை சிறப்பும் கொண்ட 'நான்' வளர்ச்சிகண்டு மகிழ்ச்சி அடைகின்றேன். ''நான்'' சஞ்சிகையினை 5பிரதிகளையாவது ஒவ்வொரு வாசகர்களும் விற்பனை செய்து தருமாறு ஊக்கப்படுத்துங்கள். இதனுல் சஞ்சிகை பரவலாக்கப்படுவதோடு சந்தாதாரரும் அதிகரிக்க வழிஉண்டாகும் அல்லவா.

சி, எஸ். பிறேமினி
அரியாலை.

ஆ-ர்:- ஒவ்வொரு வாசகர்களும் இக்கருத்தை உணர்த்து செயற்பட்டால் ''நான்'' விரைவில் மாதாந்த வெளியீடாக மலர்வதற்கு வாய்ப்பு உண்டு.

---

## கட்டுரை போட்டி;

இவ் ஆண்டு வெளிவரும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றினை கருவாக கொண்டு சொந்த ஆக்கத்தில் அமைந்த கட்டுரைகளை உடன் அனுப்பிவையுங்கள். ஒருவர் எத்தனை கருத்துக்களிலும் கட்டுரை வரையலாம். சிறந்த மூன்று கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
முடிவு திகதி; 1. 3. 85.

---

அடிக்கடி காதல் பற்றிய கேள்விகளே எமக்குக் கிடைத்து வந்தன. காதல் பிரச்சினைகளுக்கு, விரிவான பதில்கள் கடந்த ஆண்டின் இறுதி இதழ்களில் வெளிவந்துவிட்டன. ஏற்கனவே வெளிவந்த கேள்விகளை ஒத்த கேள்விகளைக் கேட்பதை தயவுசெய்து தவிருங்கள்.

அனைத்து கேள்விகளும் இம்முறை காதல் சார்பாயுள்ளமையால் 'நான்' கேள்வி பதில்கள் பிரசுரமாகவில்லை.

விரைவில்

யாழ் மினி (வின்சர் அருகாமையில்)

ஆரம்ப நன்னாளை எதிர்பாருங்கள்

-- ஆயிரத்தில் ஒருவன் --

(சகல விதமான வசதிகளுடன் குளிரூட்டப்பட்டது)

பிரவேசம் ரூபா 7-50 மட்டுமே

குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே

'நானு'க்கு எம் பங்கு மிக முக்கியமாக அமைந்தது

காரணம்

பக்கங்களைப் புரட்டுங்கள்

அச்சக வேலை எதுவானாலும் மிகக் கடுகதியில்

அச்சிட்டுப்பெற

அன்பு பிரிண்டர்ஸ்

கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

NAAN Phychological January— February 1985
O. M. I. Seminary Columbuthurai.

வாடிக்கையாளர்கள், வியாபாரிகள்,
பாவனையாளர்கள் அனைவருக்கும்

## ஓர் அறிவித்தல்

எமது தோலகட்டி தயாரிப்புகளான

## நெல்லி ரசம், முந்திரிகை ரசம்

போன்ற பழரசங்களின் போலிகள் எமது தயாரிப்பு போன்று போலிகளில் உலவுவதை எமது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. போலிகள் உடல் நலத்திற்கு தீங்குசெய்யும் இரசாயன செயற்கை மூலப்பொருட்கள்கொண்டு தயார் செய்யப்படுகின்றன. ஆகவே வியபாரிகள் எமது அசல் தயாரிப்பான நெல்லிரசம், முந்திரிகை ரசம் மறறும் எமது பொருட்களை விநியோகம் செய்வதற்கும், வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததையே அளிக்கும் முகமாகவும் ஜோ. எகட்டன்- செனித் மார்கட்டிங் யாழ். நகர் என்னும் முகவரை 1985ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நியமித்துள்ளோம் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். உங்கள் தேவைகளுக்கு அவர்கள் உங்களை வாரம்தோறும் சந்திப்பார்கள். எங்கள் தயாரிப்புகளை அவர்களிடம் பெற்று தோலகட்டி தயாரிப்புகளுக்கு ஆதரவு நல்குக!

தோலகட்டி தயாரிப்பாளர்கள்
செபமாலை தாசா
சபை
தோலகட்டி
வசாவிளான்.

ஜோ. எகட்டன்
(செனித்)
மொத்த வியாபாரிகள்
யாழ்ப்பாணம்.

''நான்'' மாத சஞ்சிகைக்காக ஜோ. எகட்டன் என்பவரால் கே.கே.எஸ். வீதி, அன்பு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.